21 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
**Jey Ahamparam** P.F.P
Insurance Advisor
**RBC** காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)

அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

To Join Our Brokerage /
Fou your Real Estate Needs

Raja Mahendran, P.Eng.
Contact: 416.315.9397

நதி 21 பாலம் 20 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் OCTOBER 15, 2011

# போர்க்கால குற்றத்தில் பிரித்தானிய பாதுகாப்பு செயலாளரின் பங்கு!

இலங்கை அரசின் போர்க்கால குற்றம் பற்றிய செய்திகளை மேற்குலகிற்கு வெளிக்கொண்டுவரும் பிரித்தானிய சனல் 4 தொலைக்காட்சி சேவையும் அதன் நிருபருமான ஜோனதன் மில்லரின் அடுத்த ஆய்வின் வெளிப்பாடே பிரித்தானிய பாதுகாப்பு செயலாளர் Dr. Liam Fox உம் அவரது ஆலோசகர் என தன்னைக் கூறிக்கொள்ளும் Adam Werritty யினதும் இலங்கை அரசுடனான தொடர்புகளாகும். Dr. Liam Fox இன் மிக நெருங்கிய 14 வருட சினேகிதனான Adam Werritty இராணுவ உதவிகளை இலங்கை அரசிற்கு வழங்கும்படி கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக அடிக்கடி பிரித்தானியா அரசை வலியுறுத்தி (Lobby) வந்திருக்கிறார். இலங்கையிலிருந்து மிகவும் நம்பக்கூடிய உயர் இடத்தில் உள்ளவர்கள் மூலம் தனக்கு இந்த தகவல்கள் கிடைத்ததாக ஜோனதன் மில்லர் கூறுகிறார். இலங்கைக்கு ஒவ்வொரு முறையும் Dr. Liam Fox பயணம் செய்தபோது Adam Werritty உம் உடன் இருந்திருக்கிறார். Dr. liam Fox இனுடைய 18 வெளிநாட்டு பிரயாணங்களில் Adam Werritty அவருடன் பிரயாணம் செய்துள்ளார்.



இலங்கையிலிருந்து மூன்று வெவ்வேறு நம்பத்தகுந்த வட்டாரங்களிருந்து கிடைத்த செய்திகளின்படி Adam Werritty இன் இலங்கை பிரயாணங்கள் இலங்கை அரசின் செலவில் மேற்கொள்ளப்பட்டன எனவும் அவை எல்லாம் இராணுவ உபகரணங்களின் விற்பனையை மேற்கொள்ள செய்யப்பட்டனவும் ஆகும். Adam Werritty இன் இந்த இலங்கை பிரயாணங்கள் 2000 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டன. இப் பிரயாணங்களின் போது மகிந்த இராஜபக்சாவின் நெருக்கமானவர்கள் Adam Werritty உடன் இராணுவ உபகரணங்களின் கொள்வனவு, பாதுகாப்பு உபகரணங்களின் கொள்வனவு மற்றும் விமான உதிரிப்பாகங்களின் கொள்வனவு பற்றி பேசினார்கள்.

இலங்கை அரசிற்கு இராணுவ தளபாடங்களை விற்பனை செய்வது பிரித்தானிய சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட வியாபாரம் என்பதை சுட்டிக்காட்டும் சனல் 4, பிரித்தானிய அரசின் ஆயுத தளபாடங்கள் விற்பனையை கட்டுப்படுத்த அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை. இலங்கையில் போர் நிறுத்த உடன்படிக்கை அமல்படுத்தப்பட்ட காலங்களில் பிரித்தானியாவிலிருந்து இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட இராணுவ தளபாடங்கள், 2006 இன் பின்னர் ஏற்பட்ட போரில் குடிமக்களை கொல்லுவதற்கு இலங்கை அரசால் உபயோகப் படுத்தப்பட்டிருக்கலாம் என அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. இவ் அறிக்கை ஆகஸ்ட் 2009 இல் வெளியிடப்பட்டது.

சனல் 4 இன் அறிக்கையை தொடர்ந்து பிரித்தானிய நாடாளுமன்றத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் Emma Reynolds, ஒக்ரோபர் 11, 2011 இல் Dr. Liam Fox இடம் சனல் 4 அறிக்கைபற்றி கேள்வி எழுப்பினார். அதன் பின்னர் Emma Reynolds, ஜோனதன் மில்லருக்கு தெரிவிக்கையில் இலங்கை அரசின் செலவில் அதாவது போர்க்கால குற்றம் பற்றி விசாரணை (Under Scrutiny) க்கு உள்ளாக்கப்படும் ஒரு அரசின் செலவில் பாதுகாப்பின் செயலாளர் இலங்கைக்கு விஜயம் செய்தது ஒரு முறையற்ற செய்கை என்றார். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், தனக்கும் இலங்கை அரசிற்கும் இடையேயான தொடர்பு பற்றி நாடாளுமன்றத்தில் விளக்கம் அளிக்க வேண்டும் என்றார். Emma Reynolds எழுத்து மூலமாக நாடாளுமன்றத்தில் Dr. Liam Fox இடம் சமர்ப்பித்த கேள்வியில் பாதுகாப்பின் செயலாளர் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயங்களின் எண்ணிக்கையையும் அவற்றில் இலங்கை அரசின் செலவில் மேற்கொண்ட விஜயங்கள் எத்தனை எனவும் கேட்டுள்ளார். 34 வயது Adam Werritty, 50 வயது Liam Fox இன் 14 வருட கால சினேகிதன். Liam Fox , Jesme Maird ஐ 2005 இல் திருமணம் செய்யும் வரை Liam உம் Adam உம் Tower Bridge இற்கு அருகிலுள்ள ஒரு flat இல் வாடகைக்கு இருந்தார்கள் (Room Mates) என்பது குறிப்பிடத்தக்கது. Liam

தொடர்ச்சி 02ஆம் பக்கம்




RBC Royal Bank®
உங்கள் அனைத்து அடமானக் கடன் தேவைகளுக்கும்
Gteat Options for all your Mortgage needs
• Lowest interest rates and best prepayment options. • 1st time Home buyers. • Pre-approvals.
சுலபமாக, துரிதமாக குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ்க்கு அழையுங்கள்


Paskaran K. (Paski) Mortgage Specialist
416.569.3099 /416.288.9855
E-mail: paskaran.kanagasabapathy@rbc.com

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker

Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

Sales & LEASING
MARKVILLE
TOYOTA


KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கெள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி <
8 ஆண்டுகள் அனுபவம்
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

துரித பணமாற்றுச் சேவை
• 53 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 20 வருடங்கள் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை


மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE

Dr. Iru Vijayanathan
DENTAL SURGEON
☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022

# போர்க்கால...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

இன் திருமணத்திற்கு Adam தான் மாப்பிள்ளை தோழன். Liam எதிர்க்கட்சியன் நிழல் மாந்திரிச் சபையின் சுகாதார



அமைச்சராக இருக்கும்போது (1999 இலிருந்து 2003 வரை), Adam, U.K Health Ltd. என்ற நிறுவனத்திற்கு Director ஆக நியமிக்கப்பட்டார். பின்னர் Liam நிழல் மந்திரி சபையின் பாதுகாப்பு செயலாளராக 2006 இல் இருக்கும்போது Adam, Security futures Ltd. நிறுவனத்திற்கு Director ஆக நியமிக்கப்பட்டார்.

Dr. Liam Fox ஒக்ரோபர் 14 ஆம் திகதி பிரித்தானியவின் பிரதமர் David Cameron இற்கு எழுதிய கடிதத்தில் தான் தவறு செய்துவிட்டதாகவும் அதனால் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவியிலிருந்து மிகுந்த கவலையுடன் விலகுவதாகத் தெரிவித்துள்ளார். அதனை ஏற்றுக்கொண்ட பிரதமர் Dr. Liam Fox இதுவரை செய்த சேவைக்கு நன்றி தெரிவித்தார்.

## மீண்டும் தெரிவு செய்யப்பட்ட ஒன்ராறியோ மாகாண முதல்வர்!

ஒன்ராறியோ மாகாணத்தின் நாடாளுமன்றத் திற்கான 40ஆவது தேர்தல் ஒக்ரோபர் 6ஆம் திகதி நடைபெற்றது. 107 தேர்தல் தொகுதிகளை கொண்ட ஒன்ராறியோ மாகாணத்தில் 54 தொகுதிகளில் வெற்றி பெற்றால் மட்டுமே அறுதிப் பெரும்பான்மை கொண்ட அரசாங்கத்தை அமைக்கமுடியும். ஆனால் லிபரல் கட்சி 53 தொகுதிகளில் வென்று சிறுபான்மை அரசு ஒன்றை அமைக்கும் தகுதியை பெற்றது. பழமைவாதக்கட்சி 37 தொகுதிகளிலும் புதிய ஜனநாயகக்கட்சி 17 தொகுதிகளிலும் வென்றது. லிபரல் கட்சிக்கு 37.6 வீதமும், பழமைவாதக்கட்சிக்கு 35.4 வீதமும் புதிய ஜனநாயகக் கட்சிக்கு 22.7 வீதமும் பசுமைக்கட்சிக்கு 2.9 வீதமும் வாக்குகள் இம்முறை தேர்தலில் கிடைத்துள்ளன.

416 ஐ தொடக்க தொலைபேசி எண்ணாக கொண்ட ரொறன்றோ நகரப்பகுதிகளில் மட்டும் 22 தொகுதிகள் உள்ளன. அவற்றில் 17 தொகுதிகளில் லிபரல் கட்சியும் 5 தொகுதிகளில் புதிய ஜனநாயகக் கட்சியும் வெற்றி பெற்றுள்ளன.

1959 ஆம் ஆண்டிற்கு பின்னர் தொடர்ச்சியாகவே மூன்றாவது முறையாக ஒன்ராறியோவில் முதல்வராகும் பெருமையை டால்ரன் மக்ஹின்றி பெறுகிறார். டால்ரன் மக்ஹின்றி பற்றிய சில விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

**முழுப்பெயர்:** திரு. டால்ரன் ஜேம்ஸ் பற்றிக் மக்ஹின்றி (Mr. Dalton James Patric Mcguinty)


**பிறந்தகாலம் இடம்:** யூலை.19.1955 கனடாவின் தலைநகரான ஒட்டாவா நகரம்.

**பெற்றோர்கள் சகோதரர்கள்:** தந்தையார் ஒட்டாவா பல்கலைக்கழகத்தின் முன்னாள் ஆங்கில மொழி பேராசிரியர். 1987 ஆம் ஆண்டு ஒட்டாவா தெற்கு பகுதி தொகுதியிலிருந்து லிபரல் கட்சியின் ஒன்ராறியோ மாகாணசபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டு பதவி வகித்தவர்.

மார்ச்16.1990 இல் 63 ஆவது வயதில் தமது வீட்டு முன்றலில் விழுந்த பனியை துப்பரவு செய்து கொண்டிருக்கும் போது இருதய துடிப்பு நின்றதனால் மரணமாகியிருந்தார். தாயார் பிரெஞ்சு மொழி பேசும் சமூகத்தினை சேர்ந்தவர். மருத்துவதாதியாக பணி புரிந்து வந்தவர். இவருக்கு மொத்தம் ஒன்பது சகோதரர்கள். அவர்களில் ஒரு தம்பியார் வக்கீலக பணிபுரிந்து கொண்டு ஒட்டாவா தெற்கு பகுதியிலிருந்து கனேடிய மத்திய அரசில் லிபரல் கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக தொடர்ந்து இன்றும் பதவியில் உள்ளார்.

**கல்வி தரம்:** ஒட்டாவா சென். பற்றிகஸ் உயர்தரப் பாடசாலையில் (St. Patrck's High School) உயர்தரக்கல்வி. ஹமில்ரன் - மக்மாஸ்ரர் பல்கலைக்கழகத்தில் உயிரியல் விஞ்ஞான பட்டதாரி (B.Sc). ஒட்டாவா பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் பட்டம் பெற்று (L.L.B) அதே நகரில் வக்கீல் தொழில் செய்துவந்தார்.

**மனைவி, பிள்ளைகள்:** 1980 இல் ஆரம்பப் பாடசாலை ஆசிரியை "ரெறி" ஐ என்பவரை திருமணம் செய்து ஒரு மகளும்



மூன்று மகன்களும் உள்ளார்கள்.

**அரசியல் பிரவேசம்:** 1990 இல் தமது தந்தை மரணமாகிய பின்பு அவர் மாகாணசபை உறுப்பினராக இருந்த தொகுதியில் அதே ஆண்டு தேர்தலில் நின்று ஒன்ராறியோ மாகாண உறுப்பினராக லிபரல் கட்சியில் தந்தையின் இடத்திற்கு தெரிவு செய்யப்பட்டார். 1996 இல் ஒன்ராறியோ மாகாணத்தின் லிபரல் கட்சி தலைவராக தெரிவு செய்யப்பட்டு மாகாண நாடாளுமன்றத்தில் எதிர்கட்சித்தலைவராக பதவி வகித்தார். 2003இல் மாகாணத்தில் லிபரல் கட்சி ஆட்சியினை பிடித்தபோது முதல்வர் ஆகி இம்முறை மீண்டும் மூன்றா வது முறையாக முதல்வர் ஆகியுள்ளார்.

**முதல்வரின் சம்பளம்:** முதல்வரின் சம்பளம் வருடம் $196,620 டொலர் ஆகும். இவை தவிர பிரத்தியேக செயலாளர்களை வைத்திருக்கும் செலவுகள், அலுவலக செலவுகள், போக்குவரத்து சலுகைகள் என ஏராளமான சலுகைகள் உண்டு.

**குடும்பத்துக்கே உரிய தொகுதி:** "ஒட்டாவா தெற்கு" தொகுதியில் ஆங்கில மொழி பேராசிரியராக இருந்த தந்தையார் லிபரல் கட்சியின் மாகாண எம்பியாக அரசியலில் பிரவேசித்தார். தந்தையின் மரணத்தின் பின்பு அதே தொகுதியிலிருந்து லிபரல் கட்சி சார்பில் தெரிவு செய்யப்பட்டு லிபரல் கட்சியின் மாகாண தலைவராகி இன்று மீண்டும் மாகாண முதல்வர் ஆகியுள்ளார். அதே தொகுதியில் தம்பியார் லிபரல் கட்சியின் மத்திய நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட தங்களின் குடும்பத்துக்கே உரிய ஒரு தொகுதியான "ஒட்டாவா தெற்கு" தொகுதியினை தக்கவைத்துள்ளார்கள்.

## நாடுகடந்த அரசாங்கத்திற்கு பிரான்சில் 5 உறுப்பினர்கள் மக்கள் பிரதிநிதிகளாகத் தேர்வு!

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்துக்கு ஐந்து உறுப்பினர்கள் உபதேர்தல் மூலம் மக்கள் பிரதிநிதிகளாக பிரான்சில் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

1) தேர்தல் தொகுதி - 92ம் மாவட்டம் திருமதி. திருநாவுக்கரசு மனோவதனி

2) தேர்தல் தொகுதி - 93ம் மாவட்டம் திரு. மைக்கல் கொலின்ஸ் ஜோசப் திரு. கருணைராஜன் முத்தையா

3) தேர்தல் தொகுதி - பிரான்ஸ் வட பிராந்தியம் திரு. பாக்கியசோதி வள்ளுவன்

4) தேர்தல் தொகுதி - பிரான்ஸ் தென் பிராந்தியம் திரு. நீக்குலாஸ் மரியதாஸ் நிக்கோலாஸ் ஜோய் ஆகிய ஐவரும் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டுள்ளதாக நா.த.அரசாங்கத்தின் தேர்தல் ஆணையம்-பிரானஸ் தெரிவித்துள்ளது.

மே 02, 2010 இல் இடம்பெற்ற நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் முதல் தேர்தலில் தேர்தல் தொகுதி 92, 93 மாவட்டங்களில் நடைபெற்ற முறைகேடுகள் காரணமாக குறித்த மாவட்ட தேர்தல்கள் செல்லுபடி யாகா என்று தேர்தல் ஆணையத்தினால் முடிவெடுக்கப்பட்டது.

அத்துடன், பிரான்சின் வட பிராந்தியம், தென் பிராந்தியம் ஆகிய இரண்டு தேர்தல் தேர்தல் தொகுதிகளது உறுப்பினர்கள் அரசவையில் இருந்து விலகிக் கொண்டிருந்தனர்.

மேற்குறிப்பிட்ட தேர்தல் தொகுதிகளுக்கான வெற்றிடங்களையும் நிரப்புவதற்குரிய உப தேர்தல் தேர்தல் மூலம் மேற்குறிப்பிட்ட ஐந்து உறுப்பினர்கள், நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவைக்கு, மக்கள் பிர-திநிதிகள் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## இலங்கையின் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஆளுங்கட்சி வெற்றி!

ஒக்ரோபர் 08, 2011 இல் நடைபெற்று முடிந்த 23 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களில் பிரதான உள்ளூராட்சி சபைகள் 21ஐ ஐ.ம.சு.கூ கைப்பற்றியது. கல்முனை மாநகர சபையை முஸ்லிம் காங்கிரஸ் ம் கொழும்பு மாநகர சபையை ஐக்கிய தேசியக்கட்சியும் கைப்பற்றியது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட்ட இரத்தினபுரி மாநகர சபையில் தோல்வியைத் தழுவியுள்ளது.

53 ஆசனங்களைக் கொண்ட கொழும்பு மாநகர சபைக்கான தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி 24 ஆசனங்களையும் பெற்று வெற்றியீட்டியுள்ளது. மேலும் ஐ.ம.சு.கூ 16 ஆசனங்களையும், ஜனநாயக மக்கள் முன்னணி 6 ஆசனங்களையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 2 ஆசனங்களையும் மக்கள் ஐக்கிய முன்னணி 2 ஆசனங்களை யும் இரண்டாம் இலக்க சுயேட்சை குழு 1 ஆசனத்தையும் மக்கள் விடுதலை முன்னணி 1 ஆசனத்தையும் இரண்டாம் இலக்க சுயேட்சை குழு ஓர் ஆசனத்தையும் கைப்பற்றியுள்ளன.

58 ஆண்டுகளுக்கு பின்னர் முதல் தடை-வயாக கண்டி மாநகரசபையை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கைப்பற்றியுள்ளது.


விளம்பரம் VLAMBARAM™

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் ப்பளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

| | |
|---|---|
| பதிப்பாளர்: | ராஜா மகேந்திரன் |
| பத்திரிகை ஆசிரியர்: | சத்தியா மகேந்திரன் |
| ஊடகப்பொறுப்பாளர்: | விஜே பாலன் |
| தட்டச்சு: | கலா |
| அலுவலக முகாமையாளர்: | நிலானி |
| பதிப்பு: | Can Media Publishing Inc. |

*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059* *FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca* *Web: www.vlambaram.com*


## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*1. Vlambaram Publications Inc. , 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2*
*2. Tel.: 416.282.8059* *3. Fax: 416.282.4978*
*4. email: vlambaram@sympatico.ca* *5. web: vlambaram.com*

# அடியாட்கள் அரசோச்சும் அரசியலும், இலங்கை ஜனநாயகமும்

**---இலங்கையிலிருந்து மங்களநாதன் அரவிந்தன்---**

இலங்கை அரசியலில் இப்போதெல்லாம் அடியாட்களே அரசோச்சுகின்றார்கள். அரச தலைவர்கள் தேர்தல் நடவடிக்கைகளையும் பிரசார நடவடிக்கைகளையும் அடியாட்களை வைத்தே முன்னெடுத்து வருகின்றார்கள். இந்த உண்மை அண்மையில் நடந்து முடிந்துள்ள மூன்றாம் கட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் பளிச்சென வெளிப்பட்டிருக்கின்றது.

மூன்றாம் கட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் 23 உள்ளூராட்சி சபைகளுக்கான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இதில் 22 சபைகளை ஆளும் கூட்டணியாகிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கைப்பற்றியுள்ளது. கொழும்பு மாநகரசபையை ஐக்கிய தேசிய கட்சி வென்றுள்ளது.

உள்ளூரின் அடிப்படைத் தேவைகளைப் பராமரிப்பதுவும், அந்த வசதிகளை மேம்படுத்துவதுமே உள்ளூராட்சி சபைகளின் கடமைகளாகும். சட்டங்களை ஆக்குகின்ற அதிகாரம் இந்த சபைகளுக்குக் கிடையாது. இந்த வகையில் அரசியல் அதிகாரமற்ற உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் அரசியல் வாதிகள் அதீத அக்கறை காட்டிச் செயற்பட்டு வருகின்றார்கள். நாட்டில் உள்ள மூவாயிரத்துக்கும் மேற்பட்ட உள்ளூராட்சி சபைகளை அரசாங்கம் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என்பதற்காக அவற்றை வெற்றிகொள்வதற்கான சகல முயற்சிகளையும் மேற்கொண்டிருந்தது. இந்த நோக்கத்தின் அடிப்படையில் உள்ளூராட்சி தேர்தலை மூன்று கட்டங்களாகப் பிரித்து தேர்தல் நடத்தும் உத்தியை அரசாங்கம் மேற்கொண்டதாக அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

பிரதான எதிர்க்கட்சியாகிய ஐக்கிய தேசிய கட்சியின் வசம் இருந்த அனைத்து சபைகளையும் கைப்பற்றுவதுடன், வடக்கு கிழக்கிலும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பை இந்தத் தேர்தலில் மண்கவ்வச் செய்ய வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நோக்கமாக இருந்தது. எனினும் வடக்கு கிழக்குப் பிரதேச மக்கள் இந்தத் தேர்தல்களில் அரசாங்கத்தைப் புறக்கணித்து விட்டார்கள். தேர்தல் காலத்தில் வடக்கு கிழக்குப் பிரதேசங்களுக்குப் படையெடுத்த அமைச்சர்களும், அரசாங்க ஆதரவாளர்களும் பல்வேறு வாக்குறுதிகளை அள்ளி வீசியிருந்தார்கள். வடக்கில் பல இடங்களில் பல அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தேர்தலையொட்டி முன்னெடுக்கப்பட்டன. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து அங்கு மூன்று தினங்கள் தங்கியிருந்து இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார். அரசியல் அதிகாரமில்லாத உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலுக்கு நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்டவரும், அதியுயர் தலைவருமாகிய ஜனாதிபதியினால் மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தது. வடக்கில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் அதிகாரத்தை எப்படியும் கைப்பற்றிவிட வேண்டும் என்பதே இதன் உள்நோக்கமாக இருந்தது.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் அரச படைகள் அடைந்த வெற்றியை முதலீடாகக் கொண்டு பலஅரசியல் வெற்றிகளை அராசங்கம் அடைந்துள்ளது. யுத்தம் முடிவடைந்ததையடுத்து இடம்பெற்ற அனைத்து தேர்தல்களிலும் அமோகமான வெற்றியை அது சிங்கள மக்கள் மத்தியில் பெற்று வருகின்றது. இந்த வெற்றிப் பிரசாரத்தின் மூலம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஐக்கிய தேசிய கட்சியை இன்று ஓர் அர்த்தமற்ற எதிர்க்கட்சியாக்கியுள்ளார் என்றுகூடக் கூறலாம்.

யுத்தம் முடிவடைந்து இரண்டரை வருடங்களாகப் போகின்ற போதிலும், இன்னும் இராணுவ வெற்றியை முதன்மைப்படுத்தி நிகழ்வுகளை நடத்துகின்ற போக்கையும், இராணுவ வெற்றியைச் சுட்டிக்காட்டி காரியங்களை முன்னெடுக்கின்ற போக்கையும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும், அவரது சகோதரராகிய கோட்டாபாய ராஜபக்ச மற்றும் அவரது சகாக்கள் கைவிடவில்லை. எதற்கெடுத்தாலும் விடுதலைப்புலிகள் மீண்டும் எழுந்து வந்துவிடக் கூடிய அபாயம் இருப்பதாகவும், அதற்கு இடம்கொடுக்காமல் அவர்களுக்கு எதிராக அடையப்பெற்றுள்ள வெற்றியையும் அதன் பயனாகக் கிடைத்துள்ள சமாதானத்தையும் தக்க வைத்துக் கொள்ளவும் பேணி பாதுகாப்பதற்காகவும் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும் என்ற பிரசாரத்தையே அவர்கள் முதன்மைப் படுத்தி வருகின்றார்கள். மறுபக்கத்தில் இராணுவத்தினரை சகல பணிகளிலும் நேரடியாகவும், மறைமுகமாகவும் பயன்படுத்தி காரியங்களை ஆற்றுகின்ற போக்கையும் அவர்கள் கடைப்பிடித்து வருகின்றார்கள்.

தேர்தல்களைப் பொறுத்தமட்டில் அதிகாரத் துஸ் பிரயோகம் செய்வதும், அரச வளங்களைத் தாராளமாகப் பயன்படுத்துவதும் சாதாரணமாக இடம்பெற்று வருகின்றது. இவற்றுக்கு எதிராகச் செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் எதனையும் அரசாங்கம் கவனத்தில் எடுத்துக்கொள்வதே இல்லை. இந்தப் பின்னணியில்தான் மூன்றாம் கட்ட உள்ளூராட்சி சபைத்தேர்தல் முடிவடைந்துள்ளது.

நாட்டின் தென்பகுதிகளிலும்சரி வடக்கு கிழக்குப் பிரதேசங்களிலும் சரி எதிரணியில் இருப்பவர்களை அழுத்தங்களுக்கும் நிர்ப்பந்தங்களுக்கும் உள்ளாக்கி அவர்களை வளைத்துப்போட்டு அரசியல் செய்கின்ற காரியமும், தேவையானால் அதிகாரத்தையும் வன்முறையையும் பயன்படுத்தி காரியமாற்றுகின்ற போக்கும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. இதற்குச் சிறந்த உதாரணமாக ஈபிடிபி கட்சி வடக்கில் தனித்து போட்டியிட முடியாதவாறு அந்தக் கட்சியின் மீது நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடச் செய்துள்ளதைக் காட்ட முடியும். இவ்வாறு எதிரணியில் உள்ளவர்களையும் பொதுமக்களையும் வழிக்குக் கொண்டு வருவதற்காக அரசாங்கம் அடியாட்களையும், சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுபவர்களையும் பயன்படுத்தும் உத்தியையும் கையாண்டு வருகின்றது. இதன் வெளிப்பாடாகவே நடந்து முடிந்த தேர்தலில் அரச சார்பு கட்சியைச் சேர்ந்த இரண்டு முக்கிய அரசியல் புள்ளிகள் நேரடியாக மோதிக்கொண்டார்கள். இவ்வாறு மோதிக்கொண்டவர்களில் ஒருவர் ஜனாதிபதியின் ஆலோசகரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய பாரத லக்ஸ்மன் பிரேசந்திர ஒருவர். மற்றவர் பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகரும், ஜனாதிபதியின் புதல்வராகிய நாமல் ராஜபக்சவின் தலைமையில் இயங்கி வருகின்ற இளைஞர் அமைப்பின் முக்கியஸ்தரும், நாடாளுமன்ற உறுப்பினருமாகிய துமிந்த சில்வா ஆவார். இருவரும் தத்தமது கோஸ்டியுடன் கொழும்பு மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட முல்லேரியாவில் (அங்கொடை பிரதேசம்) வாகனங்களில் இருந்து இறங்கி நேருக்கு நேர் துப்பாக்கிச் சூட்டுச் சண்டையில் ஈடுபட்டார்கள். இவர்களில் பாரத லக்ஸ்மன் உயிரிழந்தார். துமிந்த சில்வா தலையில் குண்டடிபட்டு சிறிஜயவர்தனபுர வைத்திய சாலையில் உயிருக்குப் பேராடிக்கொண்டிருக்கின்றார். இதைவிட இன்னும் மூன்றுபேர் படுகாயமடைந்து கொழும்பு தேசிய வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வாக்களிப்பு நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை, பட்டப்பகலில், நடுத்தெருவில் பகிரங்கமாக இந்த முக்கிய அரசியல்வாதிகள் இருவரும் தமது ஆதரவாளர்களுடன் வந்து மோதியிருக்கின்றார்கள். இருப்பினும் வன்முறை சம்பவத்தைத் தடுத்து நிறுத்துவதற்குரிய நடவடிக்கைகள் எதிலும் ஈடுபடாமல், அந்தப் பகுதியில் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பொலிசார் மோதல் சம்பவத்தைப் பார்த்துக் கொண்டிருந்ததுடன், காயமடைந்தவர்களை வைத்திய சாலைக்குக் கொண்டு செல்வதற்குக் கூட முன்வராமலிருந்ததாக நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர். இதன் காரணமாக, சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டிய பொறுப்புமிக்க பொலிசாரின் செயற்பாடுகள் குறித்தும் தேர்தல் தொடர்பான அரசாங்கத்தின் அணுகுமுறை குறித்தும் பல்வேறு சந்தேகங்களும், ஐயப்பாடுகளும் பொதுமக்கள் மத்தியிலும் ஜனநாயகத்தின் மீது பற்றுள்ளவர்கள் மற்றும் அமைப்புக்கள் மத்தியிலும் ஏற்பட்டிருக்கின்றன.

இலங்கையில் ஆளும் தரப்பின் அரசியல் வன்முறைகளில் மூவர் கொல்லப்பட்டு வன்செயல்கள் தொடர்ந்தபோதிலும் உடனடியாக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு எவரும் கைது செய்யப்படவில்லை என்று ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு இந்த மோதல் சம்பவம் குறித்து கண்டனம் வெளியிட்டுள்ளது. ஆளுந்தரப்பு அரசியல் முக்கியஸ்தர்களிடையே இடம்பெற்ற இந்தச் சண்டையானது, மோசமான மூர்க்கத்தனம் கொண்ட இலங்கையின் ஜனநாயகத் தன்மையைச் சுட்டிக்காட்டியுள்ளதாக ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றது. இது, இலங்கையில் நிலவுகின்ற மோசமான அரசியல் தன்மையை எடுத்துக்காட்டுவதாக உள்ளது என்றும் அந்த ஆணைக்குழு இந்தச் சம்பவம் தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் கூறியிருக்கின்றது. “கற்பழிப்பு வழக்கொன்றில் குற்றம்சாட்டப் பட்டிருந்த துமிந்த சில்வாவுக்கு எதிரான வழக்கு விசாரணை, அரசாங்கத் தரப்புடன் அவர் கொண்டுள்ள நெருக்கமான தொடர்புகள் காரணமாக இடையில் கைவிடப் பட்டுள்ளது. செல்வந்தராகிய அவர் போதைப்பொருள் கடத்துகின்ற சட்டவிரோதச் செயலில் ஈடுபட்டிருப்பதாகப் பரவலாக நம்பப்படுகின்றது. இவ்வாறானவர்கள் முக்கிய புள்ளிகளாக அரசியலில் வெளிப்படுவதும், தேர்தல் பிரசாரங்களுக்காக அரச சார்பானவர்கள் இவர்களில் தங்கியிருப்பதும், தேர்தல் பிரசாரத்தின்போதும் தேர்தலின் போதும் பயன்படுத்தப்படுகின்ற வற்புறுத்தல்கள் மற்றும் வன்முறைகளின் தன்மையையும் அளவையும் வெளிக்காட்டுவதாக அமைந்திருக்கின்றது'' என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---“அரசியலமைப்பின் 17 ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாமல் செய்ததன் மூலம் தேர்தல்களை நடத்துவதற்குரிய சுதந்திரமான ஆணைக்குழு ஒன்றை உருவாக்கும் சந்தர்ப்பத்தை அரசு இல்லாமல் செய்திருக்கின்றது. (அத்துடன் அத்தகைய சுதந்திரமான ஆணைக்குழு ஒன்றை நியமிப்பதற்கும் அரசாங்கம் மறுத்து வருகின்றது.) இதனால் நாட்டில் சுதந்திரமான, நியாயமான தேர்தலை நடத்துவதற்கு அதிகாரம் பெற்றிருந்த கட்டமைப்புக்கள் இல்லாமல் செய்யப்பட்டிருக்கின்றன. தேர்தல்களை நடத்துவது உட்பட அனைத்து தேவைகளுக்கும் வரையறையற்ற வன்முறைகளைப் படுத்துவதில் அரசு நம்பிக்கை கொண்டிருக்கின்றது. இத்தகைய வன்முறைகளுக்கு ஆதரவளிக்க வேண்டியவர்களாகவே பொலிசார் காணப்படுகின்றனர். இதனால் அரசியல் செல்வாக்கை

தொடர்ச்சி 09ஆம் பக்கம்


APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6




# காந்தி எப்படி மகாத்மா ஆனார்?

அனைத்து ஆன்மீக செயல்முறைகளையும் ஒவ்வொருவரும் செய்யமுடியும். இதில் கேள்விக்கே இடமில்லை. ஒவ்வொருவரும் செய்யமுடியும். அவர்கள் அப்படி செய்யவில்லையென்றால் அது மிகவும் துன்பகரமானது. எதனோடோ தங்களை அடையாளப்படுத்திக் கொண்டதால்தான் அவர்கள் ஓர் எல்லைக்குள் தங்களை குறுக்கிக் கொள்கிறார்கள். குறுகிய அடையாளம் கொண்ட உடலுடன் உங்களை அடையாளப்படுத்திக் கொண்டதால் ஒவ்வொன்றும் குறுகிய எல்லை உடையதாகிவிட்டது. நம்முடைய அடையாளங்கள் குறுகிய எல்லைக்குள் இருப்பதால் நம்முடைய சாத்தியங்களும் குறுகிய எல்லைக்குள் இருக்கிறது. உடலுடன் உள்ள அடையாளத்தை விட எவ்வளவு பெரிய செயல்களை செய்ய முடியும் என்பதை நீங்கள் காண்பீர்கள். சரித்திரத்தில் இடம்பெற்ற பல பேருடைய வாழ்க்கையில் இப்படி நடந்திருக்கிறது. ஒரு குறுகிய எல்லைக்குள் வாழ்ந்து கொண்டிருந்திருப்பார்கள். ஏதோ ஒரு காரணத்தால், அவர்கள் வாழ்க்கையில் எதிர்பாராமல் ஏதாவது நடந்து அவர்கள் எல்லையை உடைத்துவிடும். பிறகு அவர்கள் தங்களைச் சுற்றியுள்ள விரிந்த செயல்முறைகளுடன் தங்களை அடையாளப் படுத்திக் கொண்டு தாங்களே எதிர்பார்க்க முடியாத விடயங்களைச் செய்வார்கள். உங்களுக்கெல்லாம் தெரிந்த ஒரு உதாரணத்தை சொல்கிறேன். மகாத்மா காந்தி, மிகவும் எல்லைக்குள் இருந்த மனிதர். அவர் ஒரு திறமையான வழக்கறிஞரும் அல்ல. நீதிமன்றத்தில் தைரி யமாக எழுந்து சரளமாக பேசக்கூடியவரும் அல்ல. ஆனால் ஒரே ஒரு சம்பவம், திடீரென அவருடைய அடையா-ளங்கள் கழன்று விட்டன.

தென் ஆப்பிரிக்காவில் அவர் வழக்கறிஞர் தொழில் செய்து கொண்டிருந்தபோது ஒரு நாள் புகைவண்டியில் முதல் வகுப்பு பெட்டியில் பயணம் செய்தார். அப்போது நடுவில் ஒரு இரயில் நிறுத்தத்தில் ஏறிய ஒரு வெள்ளைக்காரன் காந்தியிடம் ஒழுங்கான பயணச்சீட்டு இருந்தபோதும் இவர் கறுப்பர் என்பதால் இறங்கச் சொன்னார். காந்தி மறுத்ததால் அந்த வெள்ளைக்காரன் பயணச்சீட்டு பரிசோதகருடன் சேர்ந்து காந்தியை அவருடைய உடைமைகளுடன் அந்த பெட்டியிலிருந்து தூக்கி வீசினார்.

அப்போது பிளாட்பாரத்தில் விழுந்த காந்தி பல மணி நேரங்களுக்கு அங்கிருந்து எழுந்திருக்கவே இல்லை. “எனக்கு இது ஏன் நடந்தது? நானும் முதல் வகுப்பு டிக்கெட் வைத்திருந்தேன், பிறகு நான் ஏன் தூக்கி எறியப்பட்டேன்? இதற்கு வழி காண வேண்டும்” அன்று முதல் மக்களின் பெரிய பிரச்னைகளோடு தன்னை அடையாளப் படுத்திக் கொண்டவுடன் திடீரென மகாத்மா ஆகி விட்டார். சிறிய அடையாளங்களை தகர்த்தெறிந்து மிகப்பெரிய அடையாளங் களுடன் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டதால் மகாத்மா ஆனார்.

மகாத்மா காந்தியைப்போல் வேறு யாரும் இந்தப்பிரபஞ்சத்தில் இவ்வளவு மனிதர்களை வழி நடத்தியதில்லை.




## சத்குரு வாசுதேவ்

காவலர்களைப் பார்த்து துப்பாக்கியால் சுடுவது ஒரு விடயம். அவர்கள் மீது குண்டு எறிவது இன்னொரு விடயம். ஆனால் நிராயுத பாணிகளாக தெருவில் சென்று தலையில் அடிவாங்கி மண்ணில் வீழ்வது முற்றிலும் வேறு விடயம். முதல் பகுதி மக்கள் அடிபட்டு வீழ்ந்தவுடன் அடுத்த குழுவைச் சார்ந்த மக்கள் தலையில் அடிவாங்க போய் நிற்பது என்பது மிகவும் வேறுவிதமான வலிமையான விடயம். அது அவ்வளவு எளிதல்ல. ஒருவர் அப்படி செய்வதற்கு மிகவும் ஆழமான மன வலிமை தேவைப்படுகிறது.

சண்டையில் ஈடுபடுகிறீர்கள். எதிரியும் சண்டையில் ஈடுபடுகிறார். அதில் நீங்கள் இறக்கிறீர்கள். ஆனால் சண்டையில் ஈடுபடாமல் வெறுமனே அவர்முன் போய் நின்று அடிபட்டு இறப்பது என்பது மிகவும் வேறான விடயம். ஆனால் இலட்சக்கணக்கான மக்களை அவரால் அப்படி ஈடுபடுத்த முடிந்தது. தான், தன் குடும்பம், தன் வாழ்க்கை என்ற எல்லையை விட்டுவிட்டு அப்போது சமூகத்தில் அதுவும் மிக எளிய வழிகளில். இந்த நாட்டில் நன்றாக வேர் ஊன்றியிருந்த அன்னியரை போர், வன்முறை போன்ற எந்த வழிகளுமின்றி துரத்தினார். இந்தப் பிரபஞ்சத்தில் இதற்கு முன் நடந்திராத அதிசயம் இது. இந்த நாட்டை வென்றவர்கள் அதற்கென்று சில விலை கொடுத்துதான் இந்த நாட்டைக் கைப்பற்றினர். அவர்களும் எளிதாகப் போய்விடவில்லை. ஆனாலும் சண்டை யில்லாமல், துப்பாக்கி ஏந்தாமல், வன்முறை கடைப்பிடிக்காமல் அவர்களைத் துரத்தியடித்தார். இந்த நாட்டு மக்களை ஓரணியில் திரட்டி போராட்டத்தில் ஈடுபடுத்த அவரால் முடிந்தது.

நிலவிவந்த மக்களின் முக்கிய பிரச்சினைகளோடு அவர் தன்னை அடையாளப் படுத்திக் கொண்டதால் அவருடைய சிறிய அடையாளம் சிதறியது.

எனவே நீங்கள் என்ன செய்ய முடியும் என்ன செய்ய முடியாது என்று நிர்ணயித்து ஒரு எல்லைக்குள் சிக்கிக் கொள்ளாதீர்கள். உங்களால் செய்யமுடிந்த எதையும் செய்யுங்கள். உங்களால் செய்ய முடியாததை எப்படியிருந்தாலும் உங்களால் செய்யமுடியாது. எனவே உங்களால் செய்ய முடிந்த எதையும், செய்ய முடியும் என்று நினைக்கும் எதையும் செய்யுங்கள்.


1) Inner Engineering Online - IEO is $150

2) Shambhavi Mahamudra Program (SMP) with Sadhguru is $250

3) The package IEO + SMP (with Sadhguru ) is $300

Students discount - $50 off

Seniors (65+) discount - $30 off

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

# 53-37-17 ஒன்ராறியோ தேர்தல் 2011

| கட்சி | லிபரல் | கொன்ச வேற்றிவ் | புதிய ஜனநாயக கட்சி |
|---|---|---|---|
| வெற்றி பெற்ற ஆசனங்கள் | 53 | 37 | 17 |
| வாக்கு வீதம் | 37.62 | 35.43 | 22.73 |
| மாற்ற வீதம் | -4.63 | 3.81 | 5.96 |

தேர்தல் களம் ஆரம்பமாக முன்னரே பல கணிப்புக்கள் கொன்சவேற்றிவ் கட்சியை ஆட்சிப் பீடத்தில் ஏற்றின. தேர்தல் நெருங்க நெருங்க கணிப்புக்கள் லிபரல் ஆதரவு அதி-கரித்தமையை சுட்டிக் காட்டின. உங்களது வீட்டு Barbecue விற்கு எந்த தலைவரை அழைப்பீர்கள் என்ற கேள்விக்கு பெரும்பாலானவர்கள் புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவியைத் (Andrea Horwath) தான் அழைப்போம் எனத் தெரிவித்திருந்தனர். அடுத்த இடத்தில் ஒன்ராரியோவின் முதல்வரும் லிபரல் கட்சித் தலைவருமான Dalton McGuinty இருந்தார். மூன்றாவது இடத்திலேயே கொன்சவேற்றிவ் கட்சி தலைவர் இருந்தார். அன்ரியாவின் பேச்சுத் திறனும் மக்களுடன் பழகும் விதமும் அவருக்கு அதிக ரசிகர்களை பெற்றுக் கொடுத்ததில் ஆச்சரியமில்லை. ஏறுமுகத்தில் இருந்து இறங்கு முகத்திற்கு கொன்சவேற்றிவ் கட்சியும் இறங்கு முகத்தில் இருந்து ஏறுமுகத்திற்கு லிபரல் கட்சியும் பெற்ற மாற்றங்களுக்கான காரணம் என்ன?

தேர்தல் களம் ஆரம்பமாக முன்னர் எட்டு வருட லிபரல் கட்சியிலிருந்து ஒரு மாற்றத்தை மக்கள் எதிர்பார்த்தார்கள் என்பது உண்மையே. தேர்தல் நெருங்க நெருங்க யார் சரியானவர்கள் என்ற சிந்தனை எழும். அனைத்துக்கட்சிகளும் வாக்குறுதியை அளித்தன. பொதுவாகவே தேர்தல் காலங்களில் கொடுக்கப்படும் வாக்குறுதிகள் எவையும் நடைமுறைப் படுத்தப்படுவதில்லை என்பதை மக்கள் அறிவார்கள்.

உலகம் மற்றொரு பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்குகின்றது. கனடாவும் இதில் பாதிக்கப்படும். ஒன்ராரியோ கனடாவின் அதிகளவு தேசிய உற்பத்தியை கொண்டுள்ள மாநிலம். எனவே ஒன்ராரியோ மாநிலமும் அதிகளவு பாதிக்கப்படும் என்பதை வாக்காளர்கள் அறிவார்கள். கடந்த எட்டு வருடங்களில் ஓரளவிற்கு ஒன்ராறியோவை திறமையாக வழிகாட்டிய Dalton McGuinty யை தேர்வு செய்வதா? இல்லையேல் வாக்குறுதிகளுடன் வரும் கொன்சவேற்றிவ் கட்சி Tom Hudak ஐ ஆதரிப்பதா? என்ற கேள்வி எழுகின்றது. ரொம் செய்வாரா என்ற ஐயம் எழும் பொழுது வாக்குகள் முதல்வரையே நோக்கிச் செல்லும்.

ரொம் குடாக் தேர்தல் களம் ஆரம்பமானவுடன் புதிய குடிவரவாளர்களை வெளிநாட்டு வேலையாளர்கள் என விழித்தார். இது அவரது தோல்விக்கான முதல் காரணம் என விமர்சகர்கள் கூறுகின்றனர். இரண்டாவது செக்ஸ் கல்விபற்றிய கருத்து. அடுத்து HST ரொம் குடக் இதனைக் குறைப்பதாக கூறவில்லை. மாறாக வரி அதிகரிப்பு இருக்காது என்று தான் கூறினார். ஆனால் Hydro க்கு HST அறவிடப்படமாட்டாது என்றார். இந்த HST மத்திய தர வர்க்க மக்களுக்கு பெரும் தலையிடி. மக்கள் வாங்கும் ஒவ்வொரு பொருளுக்கும் அல்லது பெறும் பெரும்பாலான சேவைகளுக்கு 13 வீதம் வரி அறவிடப்படுகின்றது. இந்த வரி வருமானமே பின்னர் கல்வி, போக்குவரத்து போன்ற பல சேவைகளுக்கு அரசால் வழங்கப்படுகின்றது. ரொம் குடாக் மீது மக்கள் முன்னர் வைத்திருந்த மதிப்பு தேர்தல் காலங்களில் இவரது பேச்சால் மிகவும் குறைந்து விட்டது. குறிப்பாக ஒன்ராரியோ கடனை குறைப்பதாகக் கூறினார். எவ்வாறு? என்ற கேள்விக்கு இவரால் முறையாக பதிலளிக்க முடியவில்லை. வரி அதிகரிப்பு இல்லை. அவ்வாறெனில் சேவைகள் குறைக்கப்படும். அரச ஊழியர்கள் வேலை நீக்கம் செய்யப்படுவார்கள் போன்ற ஐயங்களை இவரது கருத்து ஏற்படுத்தியது. லிபரலின் வெற்றி என்பது ரொம் குடக்கின் கருத்தால் ஏற்பட்டதே. ரொரன்ரோ மாநகர முதல்வர் போட் கொன்சவேற்றிவ் கட்சியை ஆதரிப்பதாக தெரிவித்திருந்தார். போட் சகோதரர்களின் நடவடிக்கையால் மக்கள் அதிருப்தி அடைந்திருந்தனர். இதுவும் கொன்சவேற்றிவின் தோல்விக்கு ஒரு காரணம் என தெரிவிக்கப்படுகின்றது.

லிபரல் முதல்வர் தன்னம்பிக்கையுடனும் தனக்கேயுரிய புன்னகையுடனும் தேர்தல் களத்தை சந்தித்தார். புதிதாக பெரிதாக இவர் எதனையும் கூறவில்லை. அதுவே இவரது பலமாக மாறிவிட்டது. புதிய ஜனநாயகக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் பல நல்ல விடயங்களை உள்ளடக்கியிருந்தது. யக் லேற்றன் பெற்றது போல் ஒரு மாற்றம் ஏற்படும் என புதிய ஜனநாயகக் கட்சி எதிர்பார்த்தது. மக்கள் இன்றைய சூழலில் பெரிய புதிய மாற்றங்களை விரும்பவில்லை. பல ஊடகங்கள் லிபரல் கட்சியையே ஆதரித்தன. ஒரு சில ஊடகங்களே கொன்சவேற்றிவ் கட்சியை ஆதரித்தன.

***Liberals***

- Barrie Advance, The Globe and Mail , Hamilton Spectator, Ottawa Citizen, Sudbury Star, Toronto Star, Waterloo Region Record, Windsor Star.

***Progressive Conservatives***

- Brampton Guardian, Metroland, Durham Region Media Group, National Post

Did not endorse

- Toronto Sun, Ottawa Sun




## - ரதன் -

1867க்கு பின்னர் 47 வீதமானோரே தேர்தலில் வாக்களித்தனர். எனவே முடிவுகளை வைத்து முழுமையாக கருத்து கூறமுடியாது. மிகுதி 53 வீதமானோர் வாக்களித்திருந்தால் தேர்தல் முடிவுகளில் பெரும் மாற்றம் ஏற்பட்டிருக்கலாம்?. 416-905 பகுதிகளில் புதிய ஜனநாயகக் கட்சியும் லிபரல் கட்சியுமே வெற்றி பெற்றுள்ளன. இப்பகுதியில் வாழ்பவர்கள் குடிவரவாளர்களும் மத்திய - கீழ் தட்டு மக்களும். இப் பகுதிகளில் கடந்த பல தேர்தல்களில் இவ்விரு கட்சிகளுமே பெருமளவு ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளன. ரொரன்ரோ நகரப் பகுதியில் கனடிய நாடாளுமன்ற தேர்தலில் ஒலிவா சோ வெற்றி பெற்ற தொகுதியில் லிபரல் கட்சி வேட்பாளர் Sarah Thomson முன்னரை விட அதிகளவு வாக்குகள் பெற்றார். இவர் ரொரன்ரோ மாநகர முதல்வர் தேர்தலுக்கு போட்டியிட்டவர். ரொரன்ரோ டவுன் ரவுனை அண்டிய பகுதிகளில் பெருமளவு உயர் மாடி கொண்டோஸ் கட்டப்படுகின்றன. ரீஜன்ட் பார்க் பகுதியில் முன்னர் இருந்த அரச கட்டிடங்களுக்கு பதிலாக உயர் மாடி கொண்டோஸ் கட்டப்பட்டுள்ளன. இதனால் அங்கு மத்திய மேல் தட்டு வர்க்கத்தினர் குடி பெயர்கின்றனர். இதனால் இங்கு வாக்குகள் புதிய ஜனநாயகக் கட்சியிலிருந்து லிபரல் கட்சிக்கு மாறுகின்றன. இதனை இத்தேர்தலில் அவதானிக்கக் கூடியதாகவிருந்தது. ஸ்காபரோ பகுதி தொகுதியை லிபரல் கட்சி முழுமையாக்கிக் கொண்டது. அதேசமயம் இப்பகுதிகளிலும் 905 பகுதிகளிலும் புதிய ஜனநாயகக் கட்சிக்கு அதிகளவு வாக்குகள்

தொடர்ச்சி 08ஆம் பக்கம்


# POLYCULTURAL

*Immigrant & Community Services*

## *HALLOWEEN OPEN HOUSE*

*Halloween Fun: Haunted class-rooms; Pumpkin Carving contest - costumed parade; Seasonal skits/role plays; Displays of student's work; Halloween games.*

**MONDAY, OCTOBER 31, 2011**
**10:30 am - 2:00 pm**
**3660 - A Midland Ave.,**
**Scarborough, ON**

## Event Highlights

- *Information about our no charge services including language training, compter courses, childminding, settlement supports*
- *Halloween refreshments*
- *Network, be part of the community, share your experiences with immigrants*

**For more information contacts:**
**416.439.1293**

# சாம்பியன்ஸ் லீக் கிரிக்கெட்: வென்றது மும்பை

# விளையாட்டுத் தகவல்கள் 316

சாம்பியன்ஸ் லீக் கிரிக்கெட் போட்டியில் 31 ரன்கள் வித்தியாசத்தில் பெங்களூரை வீழ்த்தி கோப்பையை வென்றது மும்பை இண்டியன்ஸ்.

சென்னையில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை அணி 20 ஓவர்களில் 139 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. பின்னர் ஆடிய பெங்களூர் 19.2 ஓவர்களில் 108 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. பூவா தலையா வென்ற மும்பை கேப்டன் ஹர்பஜன் சிங் துடுப்பெடுத்தாடி முடிவு செய்தார். அந்த அணியில் பிளிஸ்ஸார்டு துரதிருஷ்டவசமாக 3 ரன்களில் ரன்அவுட் ஆனார். மற்றொரு தொடக்க ஆட்டக்காரர் கன்வர் திர்க் நேன்ஸ் பந்துவீச்சில் போல்டு ஆனார். இதன்பிறகு ராயுடும், பிராங்க்ளினும் இணைந்தனர். மும்பை 65 ரன்களை எட்டியபோது இந்த ஜோடி பிரிந்தது. 21 பந்துகளைச் சந்தித்த ராயுடு 22 ரன்களில் நடையைக் கட்டினார். அதைத் தொடர்ந்து பிராங்க்ளினுடன் ஜோடி சேர்ந்தார் சூர்ய குமார் யாதவ். 17 பந்துகளைச் சந்தித்த சூர்ய குமார் 24 ரன்கள் எடுத்திருந்தபோது ரன்அவுட் ஆனார். அவரைத் தொடர்ந்து பிராங்க்ளினும் ரன் அவுட் ஆனார். 29 பந்துகளில் 41 ரன்கள் எடுத்தார் பிராங்க்ளின். பின்னர் வந்தவர்களில் மலிங்கா மட்டுமே 16 ரன்கள் எடுத்தார். மற்ற வீரர்கள் சொற்ப ரன்களில் வெளியேறினர். ஆட்டத்தின் கடைசிப் பந்தில் சாஹால் 2 ரன்களில் வெளியேற மும்பையின் இன்னிங்ஸ் 139 ரன்களில் முடிவுக்கு வந்தது.

பெங்களூர் தரப்பில் பத்கால் 3 விக்கெட்டுகளும், வெட்டோரி 2 விக்கெட்டுகளும் எடுத்தனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பெங்களூர் அணியில் கெயில் நிதானமாக ஆடியபோதும், டில்ஷான் அதிரடியில் இறங்கினார். இதனால் அந்த அணி 4 ஓவர்கள் முடிவில் 38 ரன்கள் எடுத்தது. மலிங்கா வீசிய 5-வது ஓவரின் முதல் பந்தில் டில்ஷான் போல்டு ஆனார். அவர் 20 பந்துகளில் 5 பவுண்டரியுடன் 27 ரன்கள் எடுத்தார். ஹர்பஜன் வீசிய 6-வது ஓவரில் 5 ரன்களுடன் நடையைக் கட்டினார் கெயில். பின்னர் வந்தவர்களில் அகர்வால் 14, கோலி 11, திவாரி 17 ரன்களும் எடுத்தனர். மற்ற வீரர்கள் சொற்ப ரன்களில் வெளியேறினர். கடைசி ஓவரின் 2-வது பந்தில் பத்கால் வெளியேற பெங்களூரின் இன்னிங்ஸ் 108 ரன்களில் முடிவுக்கு வந்தது. இதனால் மும்பை 31 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி கண்டது. மும்பை தரப்பில் ஹர்பஜன் 3 விக்கெட்டுகளையும், அஹமது, மலிங்கா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். ஹர்பஜன் ஆட்டநாயகனாகவும், மலிங்கா தொடர்நாயகனாகவும் தேர்வு செய்யப்பட்டனர்.

### முன்னணி வீரர்கள் இல்லாதபோதும்...

மும்பை அணியில் கேப்டன் சச்சின், ரோஹித் சர்மா உள்ளிட்ட முன்னணி வீரர்கள் இல்லாதபோதும், தாற்காலிக கேப்டன் ஹர்பஜன் சிங் தலைமையிலான அணி கோப்பையைக் கைப்பற்றி சாதனை படைத்தது. கடந்த ஆட்டங்களில் சிறப்பாக விளையாடிய பெங்களூர் அணியின் கிறிஸ் கெயில், விராட் கோலி உள்ளிட்ட முன்னணி வீரர்கள் சொற்ப ரன்களில் வெளியேறினர். முந்தைய ஆட்டங்களில் இமாலய இலக்கை எட்டிப்பிடித்த பெங்களூர் அணி, இந்த ஆட்டத்தில் தோற்றதற்கு மெதுவான ஆடுகளமான சென்னை மைதானத்தை தவறாக கணித்ததும் ஒரு காரணம். கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி இறுதிச் சுற்றில் விளையாடாவிட்டாலும், அதன் உரிமையாளரான நடிகர் ஷாரூக்கான் இறுதி ஆட்டத்தை உற்சாகமாக கண்டுகளித்தார். சாம்பியன்ஸ் லீக் போட்டியை முன்னிட்டு நோக்கியா செல்போன் நிறுவனம் நடத்திய சிறப்புப் போட்டியில் வெற்றிபெற்றவர்கள் நோக்கியாவின் விளம்பரத் தூதரான பாலிவுட் நடிகை பிரியங்கா சோப்ராவுடன் இறுதி ஆட்டத்தைக் கண்டுகளித்தனர். பெங்களூர் அணியில் கடைசி விக்கெட்டாக பத்கால் வெளியேறியவுடன், சச்சினும், மும்பை இண்டியன்ஸ் உரிமையாளர் நீதா அம்பானியும் மிகுந்த மகிழ்ச்சியோடு, உற்சாகமாக துள்ளிக்குதித்தபடி மைதானத்திற் குள் விரைந்தனர். மும்பை வென்றதும் வாணவேடிக்கையால் மைதானமே அதிர்ந்தது.

### உலக கோப்பை தகுதிச் சுற்று போட்டி: அர்ஜென்டினா அபார வெற்றி

உலக கோப்பை தகுதிச் சுற்று போட்டியில் அர்ஜென்டினா அணி அபார வெற்றி பெற்றது. வரும் 2014 உலக கோப்பை கால்பந்து தொடர் பிரேசிலில் நடக்கிறது. இதில் பங்கேற்கவுள்ள தென் அமெரிக்க நாடுகளுக்கான தகுதி சுற்று போட்டி அர்ஜென்டினாவின் பியூனஸ் ஏர்சில் நடந்தது. இதில் அர்ஜென்டினா, சிலி அணிகள் மோதின. துவக்கத்தில் இருந்தே அர்ஜென்டினா அணியினர் அசத்தல் ஆட்டத்தை வெளிப்படுத்தினர். போட்டியின் 7வது நிமிடத்தில் ஹிகுயன் முதல் கோல் அடித்தார். 25வது நிமிடத்தில் நட்சத்திர வீரர் மெஸ்சி மற்றொரு கோல் அடிக்க முதல் பாதியில் 2-0 என அர்ஜென்டினா அணி முன்னிலை பெற்றது. தொடர்ந்து இரண்டாவது பாதியிலும் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய அர்ஜென்டினா அணிக்கு 51, 62வது நிமிடங்களில் மேலும் இரு கோல் அடித்து 'ஹாட்ரிக்' சாதனை படைத்தார் ஹிகுயன். சிலி அணி சார்பில் பெர்னாண் டஸ் மட்டும் (59வது) ஒரு கோல் அடித்தார். முடிவில் அர்ஜென்டினா அணி 4-1 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது.

### யூரோ 2012 கால்பந்துப் போட்டிக்கு ஸ்பெயின் தகுதி

உலகசாம்பியன்களான ஸ்பெயின் அணி லீச்டென்ஸ்டெய்ன் அணியை 6-0 என்ற கோல்கள் கணக்கில் வீழ்த்தி 2012ஆம் ஆண்டு ஐரோப்பிய கால்பந்து போட்டித் தொடருக்குத் தகுதி பெற்றுள்ளது. ஸ்பெயினின் நட்சத்திர வீரர்களான டேவிட் வில்லா மற்றும் அல்வாரோ நெக்ரீடோ ஆகியோர் தலா 2 கோல்களை அடித்தனர். மற்றொரு நட்சத்திர ஸ்பெயின் கால்பந்து வீரர் சாவி ஃப்ரீ கிக்கில் ஒரு கோலையும், ஃபுல் பேக் வீரரான ரேமோஸ் ஒரு கோலையும் அடித்தனர். முதல் அரை மணிநேர ஆட்டத்தில் லீச்டென்ஸ்டெய்ன் அபாரமாக ஸ்பெயினை வெறுப்பேற்றியது. பிறகு 34வது நிமிடத்தில் சாவி அபாரமாக எதிரணியின் அரணை உடைத்து முன்னேறி அது கோலாக மாறியது. சாவி, இனியெஸ்டா, டேவிட் வில்லா ஆகியோர் பொறிபறக்க விளையாடத் துவங்கியவுடன் எதிரணியி-னரால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

### ரூனி ஹாட்ரிக் : ஆர்சனல் அணி படு தோல்வி

இங்கிலாந்து பிரிமியர் லீக் கால்பந்து போட்டியில் பரம்பரை வைரிகளான மான்செஸ்டர் யுனைடெட் அணியும் ஆர்சனெல் அணியும் மோதின. இதில் ஆர்செனல் அணியை 8-2 என்ற கோல்கள் கணக்கில் அபார வெற்றி பெற்றது மான்செஸ்டர் யுனைடெட். மான்செஸ்டர் அணியின் வெய்ன் ரூனி ஹாட்ரிக் சாதனை புரிந்தார். ரூனி இரண்டு ஃப்ரீ கிக் மற்றும் ஒரு பெனால்டி ஷாட்டில் 3 கோல்களை அடுத்தடுத்து அடித்து ஹாட்ரிக் எடுத்தார். ஆர்செனல் அணிக்கு தியோ வால்காட், ராபின் வான் பெர்சி ஆகியோர் ஆறுதல் கோல்களை அடித்தனர். பிரிமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் அனைத்துப் போட்டிகளையும் இதுவரை வென்ற மான்செஸ்டர் யுனைடெட் முதலிடத்தில் உள்ளது. ஆர்செனல் அணிக்கு இதுவரை ஒரேயொரு புள்ளி மட்டுமே கிடைத்துள்ளது. மேலும் 3 போட்டிகளிலும் அந்த அணியின் வீரர்களில் ஒருவருக்கு சிகப்பு அட்டைக் காண்பிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டுள்ளார். ஆர்செனல் அணி வீரர் கார்ல் ஜென்கின்சன் சிகப்பு அட்டைக் காண்பிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டார்.

### சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனத்திற்கு சறுக்கல்

ஐ.ஓ.சி.யின் விதி 45 செல்லாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது பரந்துபட்ட அளவில் தாக்கங்களை ஏற்படுத்தக் கூடும். பிரிட்டிஷ் ஒலிம்பிக் சங்கத்தில் ஊக்கமருந்து பயன்படுத்திய குற்றச்சாட்டில் ஒருவர் குற்றவாளி என்று கண்டறியப்பட்டு தடை விதிக்கப்பட்டால் அவர் வாழ்நாள் முழுவதும் போட்டிகளில் பங்கு பெற தடை விதிக்கும் ஒரு உப விதி உள்ளது. மிக முக்கியமானது என்று கருதப்படும் இந்தத் தீர்ப்பானது, சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனத்துக்கு கிடைத்துள்ள ஒரு பெரிய அடி என்றும், இதன் மூலம் ஒலிம்பிக் போட்டிகளில் யார் கலந்து கொள்ளலாம் என்கிற தகுதியை நிர்ணயிக்கும் ஐ.ஓ.சி.யின் நிலைப்பாடு கேள்விக் குறியாகியுள்ளது என்றும் பிபிசியின் செய்தியாளர் கூறுகிறார். தற்போது விளையாட்டுத்துறைக்கான சர்வதேச தீர்ப்பாயம் அளித்துள்ள தீர்ப்பை அடுத்து ஊக்கமருந்து பயன்பாட்டினால் தடை விதிக்கப்பட்ட பல வீரர்கள் மேல் முறையீடு செய்யக் கூடும். ஒசாகா சட்டம் என்று அழைக்கப்படும் ஐ.ஓ.சி.யின் விதி எண் 45 ஒரு ஒழுங்கு நடவடிக்கையிலானது தான் என்றும், அது ஒலிம்பிக் போட்டிகளில் பங்கு பெற யாருக்கு தகுதி உள்ளது என்பதை தீர்மானிக்கும் உரிமையை எடுத்துக் கொள்ள முடியாது என்றும் தீர்ப்பாயம் தனது தீர்ப்பில் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

### அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸில் சாதனை பரிசுத் தொகை

2012ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய ஓபன் கிராண்ட் ஸ்லாம் டென்னிஸ் தொடருக்கான பரிசுத் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்தப் பரிசு தொகை மூலம் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் ஆட்டங்களில் மிகவும் அதிக பரிசுத் தொகை கொண்ட கிராண்ட்ஸ்லாமாக அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் திகழும். ஆடவர், மகளிர் ஒற்றையர் சாம்பியன்கள் முறையே 2.2 மில்லியன் அமெரிக்க டொலர்களை பரிசுத் தொகையாகப் பெறவுள்ளனர். டென்னிஸ் கிராண்ட்ஸ்லாம் வரலாற்றில் இவ்வளவு பெரிய தொகை பரிசுத் தொகை இதுவரை இருந்ததில்லை. மேலும் ஹாக் -ஐ தொழில் நுட்பமும் இரண்டு மூன்று கோர்ட்டுகளுக்கு விரிவாக்கம் செய்யப்படுவதாகவும் அமைப்பாளர்கள் அறிவித்துள்ளனர். அடுத்த ஆண்டு ஜனவரி 16 முதல் 29ஆம் தேதி வரை ஆஸ்ட்ரேலிய ஓபன் கிராண்ட் ஸ்லாம் தொடர் நடைபெறவுள்ளது.


### ஜப்பான் ஓடன் டென்னிஸ்: முர்ரே சாம்பியன்

ஜப்பான் தலைநகர் ரோக்கியோவில் ஜப்பான் ஓபன் டென்னிஸ் தொடர் நடந்தது. இதன் ஒற்றையர் பிரிவு இறுதிச்சுற்றில் இங்கிலாந்தின் ஆன்டி முர்ரே, ஸ்பெயினின் ரபெல் நடாலை எதிர்கொண்டார். முதல் செட்டை நடால் 6-3 என கைப்பற்றினார். பின் முர்ரே இரண்டாவது செட்டை 6-2 என தன்வசப்படுத்தி பதிலடி கொடுத்தார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது செட்டில் அபாரமாக ஆடிய முர்ரே 6-0 என செட்டை கைப்பற்றினார். இறுதியில் முர்ரே 3-6, 6-2, 6-0 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று சாம்பியன் கோப்பை வென்றார்.



**எஸ். கணேஷ்**


ELECTRICAL WORKS



***FRIDGE, WASHER, DRYER*** போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளுக்கு: ஈசன் - ***416-286-2880***

# ஆதனம்: ஒரு நீண்டகால முதலீடு!

நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

தொடர் - 351

அண்மையில் எமது HomeLife/GTA நிறுவனத்திற்கு வந்த புதிதாக திருமணம் செய்திருந்த 30 தொடக்கம் 35 வயது மதிக்கத்தக்க IT இல் (Information Technology) Industry இல் ரொறொன்ரோவின் Entertainment பகுதியில் தொழில் புரியும் தம்பதியினர் வந்திருந்தார்கள். கனடிய GDP (Gross Domestic Product $37,002) இன் அளவை விட மிக



அதிகமாக ஊதியம் பெறும் இவர்கள் புதிதாக கட்டப்பட்ட அடுக்குமாடிக் கட்டிடத்தில் ஒரு மனை (அலகு) வாங்குவதற்காகவே வந்திருந்தார்கள். இருவரும் கனடாவிற்கு மிகக்குறைந்த வயதில் வந்தவர்கள் என்பது அவர்கள் பேசும் மொழியிலிருந்து இலகுவாக புரியக்கூடியதாக இருந்தது. கனடாவில் பிரசித்தி பெற்ற யூனிவேசிற்றிகளில் தமது பட்டத்தை பெற்றிருந்தார்கள். எமது நிறுவனத்தில் தொழில் புரியும் முகவரே அவர்களுக்கான மனையொன்றை வாங்குவதற்கு செயல்பட்டுக் கொண்டு இருந்தார். $250,000 இற்கும், $300,000 இற்கும் இடையிலான பெறுமதியில் ஒரு கிழமையாக அடுக்குமாடி மனைகளை பார்த்துக்கொண்டு வந்தார்கள். இறுதியாக இரண்டு அடுக்குமனைகளை தெரிவு செய்து அதில் ஒன்றை வாங்குவதாக முடிவு எடுத்திருந்தார்கள். எமது முகவரிடம் அந்த அடுக்குமாடி மனை அலகிற்கு 'Agreement of Purchase and Sale' (APS) ஐ தயாரிக்கும்படி கூறிவிட்டு அடுத்த நாள் மாலை கை ஒப்பமிடுவதாக கூறிவிட்டு சென்றவர்கள் கூறியவாறு, அடுத்தநாள் மாலை இருவரில் கணவன் மட்டுமே எமது அலுவலகத்திற்கு சமூகமளித்திருந்தார். அனுபவமிக்க எமது முகவர், ஏதோ தவறு நடந்து விட்டதை இலகுவாக புரிந்து விட்டார். வந்தவருடன் உரையாடும் போது அவர் கூறினார்; "எனது மனைவியின் தகப்பன் தொழில் புரியும் இடத்தில் ஆலோசனை வழங்கியிருந்தார்களாம் அடுத்த வருடம் வீட்டு விலை 20% குறையலாம் எனவும், இப்பொழுது மனை வாங்க வேண்டாம் என்றும்." இதனால் எனது மனைவி இப்பொழுது வீடு/மனை வாங்குவதில் அவ்வளவு நாட்டம் இல்லை என்பதால் அவர் வரவில்லை. உங்களின் தொழில் நேர்மை, நீங்கள் செலவு செய்த நேரம் என்பதனை மதிப்பதால் நேராக வந்து கூற வேண்டும் என்பதற்காகத்தான் வந்ததாக கூறியிருந்தார். நான் நிச்சயமாக அடுத்த வருடம் வீடு வாங்க வருவதாக கூறிவிட்டு சென்று விட்டார். இவ்வாறான நிகழ்வுகள் எமது தொழிலில் புதிதல்ல. அடிக்கடி நிகழுவது தான். இந்த நிகழ்வை சற்று ஆராய்வோம்.

இந்த இளைய குடும்பம் ரொறொன்ரோவின் மத்திய பகுதியில் கடந்த ஒரு வருடமாக வாடகையாக $1500 + utilities செலுத்தி வாழ்ந்து வருகின்றனர். அவர்களின் கணக்கின்படி குறைந்தது இன்னும் ஒரு வருடம் அதே வாடகையில் இருப்பதாக தீர்மானித்துள்ளார்கள். இந்த இரு வருடங்களுக்கு $36,000 இற்கு மேலதிகமாக வாடகை செலுத்த வேண்டும். கடந்த 14 ஆண்டுகளாக GTA இல் மட்டுமல்லாமல் கனடா முழுக்க வீடு, மனையின் விலைகள் அதிகரித்த வண்ணமே உள்ளன. அமெரிக்கா மற்றும் உலக நாடுகளில் ஆதன விலை மிகவும் இக்கட்டான நிலையில் இருக்கும்போது கனடாவின் ஆதன விலை மிகவும் ஆரோக்கியமாகவே காணப்படுகின்றது. இந்நிலை தொடரும் என்பது ஒருவரினாலும் கூறிவிடமுடியாது, கூறவும் மாட்டார்கள்.

தொடர்ச்சி 08ஆம் பக்கம்


HomeLife/GTA
Realty Inc. Brokerage*
*Independently Owned & Operated



இரு இடங்களில்
"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"
5215 Finch Ave. E, #203, Toronto - Tel: 416.321.6969
145 Traders Blvd #29, Mississauga - Tel: 905.712.2666
Raja Mahendran, P. Eng.
(Broker/Owner)

CONDO. FOR SALE





KENNEDY & 401
1 + 1 Bedroom condo. for sale. Close to all facilities. Asking price $264,900. Excellent view.

SPACE FOR LEASE




5200 Finch. Ave. East. (Embassy store building) 2nd Floor unit. About 745 sq.ft. 4 Rooms & Large common area Rent $973. Clean unit.

FOR SALE



FINCH &WARDEN
2 + 1 Bedroom. 2 Washrooms. Close to all facilities. Asking Price $129,000

NEWCONDO. FOR LEASE



MCCOWAN & ELLESMERE
1 Bedroom + Den condo. 1 Parking. Asking Price $1100

STORE FOR LEASE
KENNEDY & EGLINTON
Yogas Plaza
Retail Store For Lease. 1000 sq.ft Suitable For Salon, jewellery. Kind Of Uses, Close To TTC, Kennedy Subway Station.

COMMERCIAL CONDO. SALE




MARKHAM & STEELES
Builders blow-out sale. Price starts from $239,900. Avail. for rent, retail.

FOR LEASE



FINCH & MIDDLEFIELD
Main Floor Unit In GTA Square Shopping Mall. Renovated unit.

# 53-37-17...

05ஆம் பக்கத்தொடர்ச்சி

கிடைத்துள்ளன. பெரும்பாலான பகுதிகளில் பெரியளவு பிரச்சாரங்களின்றியே இந்த வாக்கு வீதம் அதிகரித்துள்ளது. பிரம்பரன் பகுதியில் ஒரு தொகுதியில் முதன் முறையாக புதிய ஜனநாயகக் கட்சி வெற்றி பெற்றுள்ளது. பெரும்பாலான நகரங்களில் இம்முறையும் லிபரல் கட்சியே வெற்றி பெற்றுள்ளது.

இம்முறை இரண்டு தமிழ் வேட்பாளர்கள் போட்டியிட்டனர். அவர்களது தேர்தல் முடிவுகள் பின்வருமாறு

## தொகுதி மார்க்கம் - யூனியன்வில்

| கட்சி | வேட்பாளர்கள் | வாக்குகள் | % | மாற்ற % |
|---|---|---|---|---|
| லிபரல் | மைக்கல் சான் | 19,625 | 52.7 | -6.6 |
| கொன்சவேற்றிவ் | சான் தயாபரன் | 11,690 | 31.4 | 4.4 |
| புதிய ஜனநாயக கட்சி | பி.சி.கூ | 4,584 | 12.3 | 5 |
| பச்சை | மயில்ஸ் ஓ பிரெயன் | 1,108 | 3 | -2.4 |
| Libertarian | அலன் சிமோல் | 258 | 0.7 | - |

இருவரும் முன்னர் கட்சி பெற்ற வாக்கு வீதத்தை விட அதிகமாகவே பெற்றுள்ளனர். நீதன் 22.5 வீதம் வாக்குகளை சென்ற முறையை விட அதிகமாக பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. அதே சமயம் நாடாளுமன்றத் தேர்தலில் இத்தொகுதியில் இருந்து புதிய ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ராதிகா தெரிவு செய்யப்பட்டார். இவரை எதிர்த்து போட்டியிட்ட லிபரல் கட்சி வேட்பாளருக்கு முன்னரை விட 23.3 வீதமான வாக்குகள் குறைந்துள்ளது. இந்நிலை பல ஸ்காபரோ தொகுதிகளில் காணப்படுகின்றது. தமிழ் வேட்பாளர்கள் தமிழ் மக்களது வாக்குகளை மட்டும் நம்பி தேர்தல் களத்தில் இறங்கக் கூடாது. கட்சியின் கொள்கைகள் பற்றி விரிவான அறிவு இருத்தல் வேண்டும். பொருளாதார பிரச்சினைகள் மக்கள் தேவைகளை அறிந்து வைத்திருத்தல் அவசியம். தேர்தலுக்கு பல வருடங்களுக்கு முன்பு அத் தொகுதியில் உள்ள பல சமூக நிறுவனங்களுடன் இணைந்து தொண்டர் சேவையில் ஈடுபடுவது அவசியம். மக்கள், கட்சியின் கொள்கைகளுக்கே வாக்களிக்க விரும்புவார்கள். தமிழ் என்பதற்காக வாக்களிப்பர் என்று நினைப்பது தவறு. எந்த வேட்பாளர் அல்லது கட்சி சரியான கொள்கையைக் கொண்டதோ அதற்கு வாக்களிப்பதே ஆரோக்கியமான ஜனநாயகத்துக்கு வழிவகுக்கும்.

## தொகுதி ஸ்காபரோ - ரூஜ் றிவர்

| கட்சி | வேட்பாளர்கள் | வாக்குகள் | % | மாற்ற % |
|---|---|---|---|---|
| லிபரல் | Bas Balkissoon | 15,275 | 41.9 | -23.3 |
| புதிய ஜனநாயக கட்சி | Neethan Shan | 13,130 | 36 | 22.5 |
| கொன்சவேற்றிவ் | Ken Kim | 6,836 | 18.7 | 4.2 |
| Libertarian | Felix Liao | 458 | 1.3 | -0.1 |
| பச்சை | George Singh | 448 | 1.2 | -2.5 |
| Family Coalition | Raphael Rosch[3] | 166 | 0.5 | -1.2 |
| Freedom | Daniel Walker | 151 | 0.4 | 0.4 |

லிபரல் ஒரு ஆசனத்தால் பெரும்பான்மையை இழப்பதனால் முக்கிய முடிவுகளில் புதிய ஜனநாயகக் கட்சியின் பங்கு அல்லது ஆளுமை அதிகமாக இருக்கும். இது ஒரு ஆரோக்கியமான ஆட்சிக்கு வழி வகுக்கும். இது மேலும் ரொம் குடக்கையும் அவரது கட்சியையும் பாதிக்கும். இன்னமும் இரண்டரை அல்லது மூன்று வருடங்களில் அடுத்த தேர்தலை எதிர்பார்க்கலாம். இதற்கிடையில் லிபரல் முதல்வர் இராஜினாமா செய்து நாடாளுமன்றத் தேர்தலில் ஈடுபடலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இனி வரும் காலங்களில் பல மாற்றங்களை எதிர்பார்க்கலாம்.

# நாமும்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆனால் நிச்சயமாக இந்த தம்பதியினர் வாழ்வதற்கு மனை தேவை. அது வாடகையாக இருக்கலாம் அல்லது சொந்தமாக இருக்கலாம். கடந்த சில வருடங்களாக கனடாவின் ஆதன விலை குறையும், குறையலாம் என பத்திரிகைகள், வானொலிகள், தொலைக்காட்சிகள், Social Media கள் எழுதியும் கூறியும் வருகின்றன. ஒவ்வொரு ஆண்டும் விலை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. இதுதான் கடந்த பல கால அனுபவமாக இருந்து வருகின்றது. எதிர்காலத்தில் விலை குறையலாம். ஆனால் எவ்வளவு குறையலாம், எவ்வளவு காலத்திற்கு குறையலாம். இது முக்கியமான கேள்வி. இந்த இளம் தம்பதியினரைப் பொறுத்தவரை குறிப்பிட்ட காலம், குறிப்பிட்ட மனையில், குறிப்பிட்ட பகுதியில் இருக்க வேண்டும். அத்துடன் கனேடிய சராசரி மக்களை விட அதிகமாக ஊதியம் பெறுபவர்கள். எனவே விலை கூடுவது, குறைவது என்பது இந்த தம்பதிக்கு பொருந்தாது. இவர்களைப் பொறுத்த வரைக்கும் தகுந்த இடத்தில் (Location), சிறந்த View உள்ள மனையை உடனடியாக வாங்குவதே சிறந்ததாக இருக்கும்.

எவ்வளவு விரைவாக வாங்குகின்றார்களோ அவர்கள் அடமானக்கடனை நோக்கி அதிக பணத்தை செலுத்தக் கூடிய சந்தர்ப்பம் உண்டு. இப்பொழுது குறைந்த வட்டிவீதம் காணப்படுகின்றது. வாடகைக்கு இப்பொழுது இருப்பதால் தேவையற்ற மேலதிக செலவுகளிற்கு சந்தர்ப்பங்கள் உண்டு. பணத்தை சேமிக்கும் சந்தர்ப்பம் குறைவு. ஆதன தொழிலில் விற்பது, வாங்குவது நீண்ட கால முதலீடு. அத்துடன் உங்களின் கண்களால் பார்த்து, தொட்டுப் பார்க்க கூடிய முதலீடு. பங்குச் சந்தையில் உள்ள Paper முதலீடு போல் கிடையாது. உலகில் முன்னேறிய, எல்லோரும் வெவ்வேறு தொழில்கள் மூலம் முன்னேறினாலும் அவர்களிற்கு அதிக வருமானம், பெறுமதியைப் பெற்றுக்கொடுப்பது ஆதன முதலீடு என்பதில் எந்தவித சந்தேகமும் கிடையாது. அண்மையில் இந்தியாவில் பல ஆண்டுகளாக தமிழ்நாட்டில் இருந்து வெளிவரும் மிகப் பிரசித்தி பெற்ற வாராந்த மஞ்சரி நிறுவனத்திற்கு சென்றபோது அவர்களுடன் உரையாடும்போது தமது பத்திரிகை வியாபாரம் Social Media களின் வருகையால், சிறிதளவு குறைந்துள்ளது. நாம் இருக்கும் இந்த நாலு மாடிக்கட்டிடத்தின் பெறுமதி எதிர்பாராத அளவிற்கு விலை அதிகரித்துள்ளது எனக்கூறி ஆதனத்தின் வளர்ச்சியை பற்றி கூறியிருந்தனர். இது மட்டுமல்ல எங்கும் Real Estate இன் நீண்டகால வளர்ச்சி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மக்களின் அதிகரிப்பு எப்பொழுதும் இருக்கும். எனவே



வாழ்வதற்கு ஆதனம் தேவை.

குறிப்பு: அமெரிக்காவில் 2006 ஆம் ஆண்டின் வீட்டின் விலை அதிகரித்துக் காணப்பட்டது. அதன்பின் விலை இறங்கத் தொடங்கியது. 2008/2009 இல் ஏற்பட்ட பொருளாதார இறுக்கத்திற்கு (Recession) பிறகு இதுவரை விலை அதிகரிக்கவில்லை. தொடர்ந்து சரிவு ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது. உடனடியாக அதிகரிக்கும் என்று கூறமுடியாது. வீட்டின் விலை அதிகரிக்கத் தொடங்கும்வரை அமெரிக்க பொருளாதாரம் வளரும் என எதிர்பார்க்க முடியாது. இதன் பாதிப்பு இதுவரை கனடாவில் ஏற்படவில்லை என்பது யாவரும் அறிந்ததே.




யோகா சோதிடம்

• கிரகப்பொருத்தம் பார்த்தல் • சுபமுகூர்த்தம் கணித்தல்

• பலன் பார்த்தல் • சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931

COLDWELL BANKER

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

Buying or Selling

Relocation Service
Ottawa> > > < < < GTA



நந்தா ஐயாத்துரை

Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555

# அடியாட்கள் அரசோச்சும்...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

எதிர்ப்பதற்குரிய சக்தியும் ஆற்றலுமற்றவர்களாகப் பொலிசார் காணப்படுகின்றனர். சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டக் கூடிய ஒரு சுதந்திரமான நிறுவனத்தின் கீழ் இலங்கை பொலிசார் இல்லாதிருப்பதையே இது காட்டுகின்றது. அரசியல் வன்முறைகளுக்கு எதிராகத் தலையிடக்கூடிய ஆற்றல் இலங்கையின் நீதித்துறையிடம் இல்லாதிருப்பதையும் காண முடிகின்றது. இத்தகைய அரசியல் வன்முறைகளுக்கு எதிராக மக்கள் தாங்களாகவே தலையீடு செய்தாலொழிய நாட்டில் சட்டவாட்சியையும் ஜனநாயகத்தையும் நிலைநிறுத்த முடியாது. எனினும் தற்போது இடம்பெற்றுள்ளதைப் போன்ற வன்முறைகள் தொடருமானால் நாடு எத்தகைய மோசமான நிலைக்கு இட்டுச் செல்லப்படும் என்பதைக் கற்பனை செய்ய முடியாதிருக்கின்றது."------ என்றும் ஆசிய மனித உரிமைகளுக்கான ஆணைக்குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தேர்தல் மட்டுமல்லாமல் நாட்டில் பரவலாக இடம்பெற்று வருகின்ற அபிவிருத்தி மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கான அரசாங்கத்தின் நடவடிக்கைகளும் சரி, வேறு நடவடிக்கைகளாக இருந்தாலும் சரி, மக்களின் விருப்பு வெறுப்புக்களையும், அவர்களின் கருத்துக்களையும் அறிந்து அவற்றிற்கு ஏற்ப செயற்படும் தன்மை அற்றுப் போயிருப்பதே நிதர்சனமாகும். தெற்கில் அமைக்கப்பட்டுள்ள புதிய துறைமுகம் தொடக்கம் வடக்கு கிழக்கில் இப்போது காணிகளைப் பதிவு செய்கின்ற நடவடிக்கை வரையில் பல்வேறுபட்ட துறைசார்ந்த நடவடிக்கைகளும் அரசாங்கத்தின் ஒருதலைப்பட்ச தீர்மானத்திற்கமையவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் மக்கள் பாதிக்கப்பட்டிருந்த போதிலும், அவர்களுடைய நிலைமைகள் எந்த வகையிலும் கவனத்திற் கொள்ளப்படாத போக்கிலேயே அரசு கொண்டிருக்கின்றது.

அரசியலமைப்பின் 18 ஆவது திருத்தச் சட்டம் அவசர அவசரமாகவே கொண்டு வரப்பட்டது. இந்தத் திருத்தச் சட்டம் குறித்து மக்களின் கருத்தறிவதற்கும், ஜனநாயக அமைப்புக்களின் அபிப்பிராயங்கள், ஆலோசனைகளைப் பெறுவதற்கும் தேவையான கால அவகாசம் வழங்கப்படவில்லை. எனினும் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பொன்றைப் பெற்று சட்டமாக்கும் வசதியைப் பயன்படுத்தி இந்தத் திருத்தச் சட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இதனால், 17 ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தில் உறுதியளிக்கப்பட்டிருந்த ஜனநாயக நடைமுறைகளுக்கான பல விடயங்கள் இல்லாமல் செய்யப்பட்டிருக்கின்றன. ஜனநாயகத்தின் ஆணிவேராகக் கருதப்படுகின்ற அதிகாரப் பரவலாக்கல் 18 ஆவது அரசியல் திருத்தச் சட்டத்தின் மூலம் நீக்கப்பட்டிருக்கின்றது. முக்கியமாக நாட்டின் ஜனாதிபதி ஒருவர் இரண்டு தடவைக்கு மேல் பதவிக்கு வரமுடியாது என்ற கட்டுப்பாடு இதன் மூலம் நீக்கப்பட்டு, ஜனாதிபதி ஒருவர் வாழ்நாள் முழுதும் பதவியில் இருக்கத்தக்க வசதி செய்யப்பட்டிருக்கின்றது. தேர்தல் மூலம் அவர் தெரிவு செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனை இருந்த போதிலும், அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி ஒருவரே மீண்டும் மீண்டும் பதவிக்கு வரக்கூடிய சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

இலங்கையின் ஜனாதிபதி ஆட்சி முறையில் ஜனாதிபதிக்கு அளவற்ற அதிகாரங்களும் அவற்றை நிறைவேற்றுகின்ற வல்லமையும் வழங்கப்பட்டிருக்கின்றது. இந்த நிலையில் தேர்தல் ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு. நீதிச்சேவை ஆணைக்குழு போன்ற முக்கிய அமைப்புக்கள் சுதந்திரமாகச் செயற்படும் வகையில் அவற்றுக்கான உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரம் சுதந்திரமான அங்கத்தவர்களைக் கொண்ட அமைப்பிடம் வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறான நியமனங்களை இந்தக் கட்டமைப்பின் சிபாரிசு இல்லாமல் ஜனாதிபதி வழங்க முடியாது. அரசியல் அதிகாரமுள்ள ஜனாதிபதி ஒருவர் தமது அதிகாரத்தைத் துஸ்பிரயோகம் செய்யக்கூடிய சந்தர்ப்பம் இதன் மூலம் தடுக்கப்பட்டிருந்தது. ஆயினும் 18 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் இத்தகைய அமைப்பின் சிபாரிசைப் பெற வேண்டிய கட்டாயம் ஜனாதிபதிக்குக் கிடையாது. அத்தகைய சிபாரிசு செய்யப்பட்டால், அதனைக் கவனத்தில் எடுக்காமல் ஜனாதிபதி தானாகவே இத்தகைய ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர்களை அல்லது ஆணையாளர்களை நியமிப்பதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பில் தேர்தல் ஆணையாளருக்கு வழங்கப்பட்டிருந்த முக்கியமான அதிகாரங்கள் இந்தத் திருத்தச் சட்டத்தின் மூலம் இல்லாமல் செய்யப்பட்டிருக்கின்றது. தேர்தல் விதிமுறைகளை இறுக்கமாக நடைமுறைப்படுத்துவதற்கும், அவற்றை மீறி நடப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கான சுதந்திரமான அதிகாரமும் வல்லமையும் 17 ஆவது திருத்தச் சட்டத்தில் தேர்தல் ஆணையாளருக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த அதிகாரம் 18 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. இதனால், அதிகாரங்கள் எதுவுமற்ற சாதாரண ஓர் அரசாங்க அதிகாரியாகவே தேர்தல் ஆணையாளர் 18 ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வந்தபின்னர் செயற்பட்டு வருகின்றார். இந்தத் திருத்தச் சட்டம் அமலுக்கு வந்ததன் பின்னர் நடைபெற்றுள்ள அனைத்துத் தேர்தல்களிலும், தேர்தல் பிரசாரக் காலங்களில் அரச வளங்கள் அரச ஆதரவாளர்களினாலும் கட்சிகளினாலும் தாராளமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. பிரசாரத்தின்போது தேர்தல் விதிமுறைகளுக்கு எதிரான பல செயற்பாடுகள் இடம்பெற்றிருக்கின்றன. இவை தொடர்பாக எதிர்க்கட்சியினரும், வேட்பாளர்களும், தேர்தல் கண்காணிப்பாளர்களும் முறைப்பாடுகள் செய்திருந்தும், அவற்றுக்கு எதிராகத் தேர்தல் ஆணையாளரினால் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அத்தகைய நடவடிக்கைகளை எடுப்பதற்கென அவருக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்கள் இல்லாமல் செய்யப்பட்டிருப்பதே இதற்குக் காரணமாகும்.

நடந்து முடிந்த, உள்ளூராட்சி சபைகளுக்கான மூன்றாம் கட்ட தேர்தலில் ஆளும் கட்சி ஆதரவாளர்களினாலும், ஆளுந் தரப்பு அரசியல் பிரமுகர்களினாலும் அரச வளங்கள் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டதாகத் தேர்தல் கண்காணிப்பாளர்கள் முறையிட்டிருந்தார்கள். எனினும் அதற்கு எதிராக எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

நாட்டில் ஜனநாயகம் நிலவுகின்றது. இதனை உறுதிப்படுத்தும் வகையில் தேர்தல்கள் நடத்தப்படுகின்றன. மக்கள் வாக்களிக்கின்றார்கள். புதிய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுகின்றார்கள். ஆகவே, நாட்டில் ஜனநாயகம் நன்றாக இருக்கின்றது. நல்லாட்சி நடைபெறுகின்றது என்பதைக் காட்டும் வகையில் அரசாங்கத்தினால் நிலைமைகள் காட்டப்படுகின்றன. ஆயினும் உண்மையிலேயே ஜனநாயகத்தின் போர்வையில் ஜனநாயக விரோதச் செயற்பாடுகள் சட்ட ரீதியாகவும் பகிரங்கமாகவும் மேற்கொள்ளப்படுகின்ற அவலமான ஒரு நிலைமையே நாட்டில் நிலவுகின்றது. இத்தகைய போலியான ஜனநாயகத்தின் மூலம் நாடு மோசமான பாதிப்புகளை எதிர் நோக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளிச் செல்லப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்த ஜனநாயகத்தின் ஊடாக ஆட்சிக்கு வந்து நீண்டகாலம் அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்பவர்களின் நீண்டகால அரசியலும் கூட நன்மை தருவதாக இருக்க மாட்டாது.


mhc
MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு • வாகன விபத்து • மன அழுத்தம் • விளையாட்டுக் காயங்கள் • தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

Cough, Flu, Depression, Anxiety, Asthma
Tonsillitis, Gout, Arthritis, P.M.S, Leucorrhea
Migraines, Hair Loss, Diabetes, Cystitis, Cancer
Prostatitis, Obesity, Hemorrhoids, Stumatitis, Colitis

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4



• வாழ்க்கையில் உங்களின் கனவை நனவாக்கவிரும்புவோர் ஆண் / பெண் அல்லது குடும்பமாக இருப்போர்
• Big Income (Huge Money) தேவை என இருப்போர்கள்
• சுதந்திரமாக Team Work ஆக இயங்கி பணம் சம்பாதிக்க விரும்புவோர்கள்.
• நம்பிக்கையுடன் எம்மைத் தொடர்பு கொண்டால் நாம் உதவி செய்ய முடியும். அவர்கள் மட்டுமே நாம் காட்டும் Planஇனால் முன்னேற்றம் காண்பதுடன் Stress இல்லாது ஒரு புதிய வாழ்வை வாழ்வார்கள்.

எங்கே அழையுங்கள் பார்க்கலாம்
416.669.2945 / 416.352.8655

எங்களிடம் 2 plan உள்ளது. நீங்களே தெரிவு செய்து கொள்ளலாம். நீங்கள் கண்டிப்பாக ஏமாற்றம் அடையமாட்டீர்கள்.

# உண்மை எது எனக்கண்டு பிடிக்கப்பட்ட வாகன விபத்தின் புலனாய்வுகள்!

***Determination from Accident Reconstruction Reports***

## கனடிய தகவல் தொடர் 158

கடந்த பெப்ரவரி 19. 2010, அந்த சிறு வாகன விபத்து ஸ்காபரோவில் நடந்தது.

பிரதான வீதியான ‘பிரிம்லி வீதி’ (Brimley Road), ‘ஹெதர் வீதி’ (Heather Road - Residential Area Road) சந்தியினை தொடுக்கும் சைகை ஒளி விளக்குகள் (Traffic Signal Lights) பொருத்தப்பட்ட முச்சந்தி அது!.

தமது புதிய கார் ஒன்றினை செலுத்திக் கொண்டு பிரதான வீதியான பிரிம்லி வீதி தெற்கு நோக்கி சைகை ஒளி வழிகாட்டும் இதே சந்தியினை கடந்து செல்கின்றார் நம்மவர் ஒருவர். உள்வீதியிலிருந்து பாரிய ரக் வண்டியினை ஓட்டிக் கொண்டு வந்த ஒருவர் இம் முச்சந்தியில் திரும்பும் வேகத்தில் மெதுவாக வலது பக்கம் பிரம்லி வீதியில் திருப்புகின்றார். இவரது ரக் வண்டி மெதுவாக திருப்பும் போது நம்மவரின் காரின் முன்பக்க, பின்பக்க கதவுகளின் நடுவே சற்று மோதி விட்டது. வாகனத்தின் கதவு பக்கம் பாரிய பாதிப்பு. இதுதான் நடந்த விபத்து.

கார் ஓட்டி வந்த நம்மவர் உறுதியாக விடாப்பிடியாக! தாம் பச்சை நிற சைகை ஒளியில் வாகனம் செலுத்திக் கொண்டு போயிருந்தேன் என்று நிற்கின்றார். ரக் வண்டி சாரதி தாம் தமது பக்கம் பச்சை நிற சைகை ஒளி வழிகாட்டும் போது வலது பக்கம் திருப்பினேன். மற்றவர் சிவப்பு நிற சைகை ஒளியில் அத்து மீறி வந்தமையால் விபத்து ஏற்பட்டு விட்டது என உறுதியாக நிற்கின்றார்.

இங்கு நட்ட ஈடு வழங்கும் காப்புறுதி கம்பனிகள் யார் பக்கம் சரி, யார் பக்கம் தப்பு, என எப்படி தீர்மானிக்கும்?
இதுவே இங்கு எழும் கேள்வி?

பொதுவாக விபத்துகள் தொடர்பாக சரி - பிழை? எந்தப்பக்கம் என காப்புறுதி கம்பனிகள் புலன் விசாரணை செய்யும் போது, விபத்துக்குள்ளான வாகனங்களில் சேர்ந்து போகாத, ஆனால் சம்பவத்தினை நேரில் கண்ட வெளி நபர்களின் வார்த்தைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதனை ஒரு உறுதியான சாட்சியாக எடுத்து அந்த சாட்சியத்தின் அடிப்படையில் ஒரு முடிவுக்கு வருவது வழமையாகும். ஒரு முடிவுக்கு வரமுடியாத நிலைமையில் 50%க்கு 50% வீதம் அதாவது இருபக்கத்திலும் சமமான தப்பு என முடிவுக்கு வருவது வழமையாகும்.

இங்கு ரக்வண்டி சாரதி தமக்கு சாதகமாக வெளி நபர்களின் சாட்சியங்களை கொண்டு வந்தார். அவை நிஜமான சாட்சிகளோ அல்லது இறக்கப்பட்ட சாட்சிகளோ தெரியாது. ஆனால் அவை இறுக்கமான சாட்சிகளாக அவருக்கு சாதகமாக கதை சொன்னார்கள்.



காரில் சென்ற நம்மவரோ வெளி நபர் சாட்சிகள் எதுவுமில்லாது தாம் பச்சை நிற சைகை ஒளியில் அந்த இடத்தினை கடந்தேன் எனவும் ரக் வண்டி சாரதியே சிவப்பு சைகையில் தமது வாகனத்துடன் மோதியிருந்தார் என்பதில் உறுதியாக விடாப்பிடியாக கள்ளம் கபடமில்லாத நிலையில் நின்றார். கனடாவின் வாகன காப்புறுதி ஒழுங்கு விதிகளின் படி விபத்துக்குள்ளான ஒவ்வொருவரும் தத்தமது வாகன காப்புறுதி கம்பனி களுடனேயே தங்களின் உறுதியான நிலைப்பாட்டினை எடுத்து ஆதாரமாக நிருபித்து தங்கள் கம்பனி ஊடாகவே எந்தவொரு நட்டஈட்டு கோரிக்கையினையும் முன் எடுக்கலாமே தவிர அடுத்தவர் கம்பனிகளை தட்டி பார்க்க முடியாது. (பாரிய உடல் காயங்களில் இந்த கூற்றில் சில விதி விலக்குகளும் உண்டு.)

அவரவர் வாகன காப்புறுதி கம்பனிகள் தங்கள் தங்கள் வாடிக்கையாளர் பக்கம் நியாயம் உள்ளதா? என இரு பகுதிகளின் ஆதாரங்கள், சாட்சியங்களின் அடிப்படையில் விவாதித்து ஒரு முடிவுக்கு வருவார்கள். முடிவில் தப்பு எவ்வளவு வீதம் என்ற அடிப்படையில் வழங்கப்பட்ட பண நட்டஈடுகளை பரிமாறிக் கொள்வார்கள்.

ஆனால் இந்த குறிப்பிட்ட விபத்தில் பொலிஸ் விசாரணை அறிக்கை, வெளியார் சாட்சியங்களின் அறிக்கைகள் ஆகிய வற்றின் அடிப்படையிலும் ஒரு முடிவுக்கு வரமுடியாத காரணத்தினால் விசேட புலன் விசாரணைக்கு அழைக்கப்பட்டவர்களை ஆங்கிலத்தில் ‘Accident Investigation Reconstructionist’ என அழைக்கப்படும்.

**யார் இந்த விபத்துகளின் விசேட புலனாய்வாளர்கள்?**
(Accident Investigation Reconstructionist)

இவர்களின் புலனாய்வினை ஆங்கிலத்தில் பின்வருமாறு தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. Accident Reconstruction is the Scientific Process of Investigating Analyzing and drawing Conclusions about the Causes & Events during a Vechicle Collision. அதாவது விபத்து நடந்த இடம், நடந்த வடிவம், அந்தக்கணத்தில் வாகனங்களின் அசைவு வேகம், மோதிய கோணல்கள், வாகனங்களிற்கு ஏற்பட்ட பாதிப்புகளின் படிவங்கள், மோதப்பட்ட இடங்கள் ஆகியவற்றின் நிகழ்வுகளை அடிப்படையாக வைத்து விஞ்ஞான ரீதியாக அலசி ஆய்வு செய்து காப்புறுதி கம்பனிகளுக்கு ஒரு தீர்ப்பினை இப்படித்தான் நடந்திருக்கும் என வழங்குபவர்கள் இவர்கள்.

ரொறொன்ரோ பொலிஸ் பிரிவில் இவ்விசேட புலனாய்வுப் பிரிவு என அலுவலகம் நிபுணத்துவம் வாய்ந்தவர்களினால் பின்வரும் முகவரியிலிருந்து செயல்பட்டுக் கொண்டேயுள்ளனர். அதன் விபரம் பின்வருமாறு.
Toronto Police Service
Collision Reconstruction Squad
45, Strchan Ave. Toronto, ON M6K 1W7
Telephone: (416).808.1962

சரி! இந்த குறிப்பிட்ட விபத்தில் இவ்விசேட புலனாய்வாளர்கள் எப்படி முடிவுக்கு வந்தார்கள்? என்பதனை பார்ப்போம். பின்வரும் தடயங்களை அடிப்படையாக வைத்து நிரபராதி யார்? குற்றவாளி யார்? என்பதனை துப்பறிந்து இரு பக்க காப்புறுதி கம்பனிகளுக்கும் வழங்கியிருந்தனர்.

1. Crash scene Photography analysis விபத்து நடந்த இடங்களில் எடுக்கப்பட்ட புகைப்படங்களின் அடிப்படையில் ஒரு ஆய்வு!

2. Dynamics of the Collision ad approach Impact & Departure Angles and Maneuver of speed calculation


இந்த அடிப்படையில் பார்த்தால் இங்கு ரக்வண்டி வலது பக்கமாக பிரதான வீதியில் திருப்புவதால் மெதுவாகவே திருப்பியிருப்பார். கார் நேரே வந்தபடியால் வழமையான வேகத்தில் செலுத்தியிருக்கலாம் என முடிவு பண்ணப்பட்டது.

3. Forensic Examination of Vehicle Damage Assessment Based on Point of Impact and Friction Values இங்கு விபத்துக்குள்ளான வாகனங்களுக்கு ஏற்பட்ட காயங்கள், பாதிப்புகளின் அடிப்படையில் ஊகிக்கப்படுகிறது. அதாவது ரக்வண்டி பச்சை நிற சைகையில் திருப்பும் போது கார் சிவப்பு நிற சைகையில் வேகமாக வந்து மோதியிருந்தால் காரின் முன் பக்கமே பாதித்திருக்கும். ஆனால் இங்கு ரக் வண்டி வந்த பக்கத்தின் கதவு பக்கத்திலேயே மோதல் நடந்துள்ளது. இந்த அடிப்படையில் பார்த்தால் கார் ஓட்டி வந்த நம்மவரின் தப்பு இல்லை. ரக் வண்டி சாரதியே சிவப்பு நிற சைகையில் திருப்பும் போது மோதியிருக் கின்றார் என்பது அனுமானிக்கப்படுகின்றது. மேற்குறிப்பிட்ட மாதிரியான பல்வேறு வகையான துப்பறியும் தடயங்களின் அடிப்படையில் இப்புலனாய்வாளர்களின் அறிக்கையில் கார் ஓட்டி சென்ற நம்மவர் தம்மை சூழ உள்ள வாகனங்களை தலையினை திருப்பி சந்திகளில் பார்க்காது பச்சை நிற சைகையில் போய் கொண்டிருக்க, அவரை விட மோசமாக கவனமேயில்லாத ரக்வண்டி சாரதி சிவப்பு நிற சைகையில் வலது பக்கம் திரும்பும் போது மோதியுள்ளார் என தீர்ப்பினை வழங்கி தங்கள் அறிக்கைகளை சமர்ப்பித்தார்கள்.

இறுதியாக காரினை ஓட்டி சென்ற நம்மவரின் வாகன காப்புறுதி கம்பனி ‘தப்பு இல்லாத காப்புறுதி கொடுப்பனவு’ (No Fault Claim Section) ஊடாக திருத்த செலவுகளுக்கு நட்டஈடு வழங்கியது. இது செலவில்லாத கொடுப்பனவு பிரிவு என்பதால் புதுப்பித்தலின் போது இவ்விபத்து காரணம் என குறிப்பிட்டு கட்டணமும் அதிகரிக்கமாட்டாது. இங்கு நியாயமும் மறைந்து நின்று வென்று கொடுத்தது.



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# கண்ணியக் கொள்கை

கடந்த இதழ் தொடர்ச்சி...

கண்ணியம் நேர்மையான நடத்தையைக் குறிப்பது. கௌரவம் என்ற பொருளும் இதற்கு உண்டு. கௌரவம் - மதிப்பு. மற்றவர் முன்னிலையில் சிறப்பாகக் காட்சியளிக்க வேண்டும், மதிப்பாக நடந்துகொள்ள வேண்டும் என்று நினைப்பது மனித இயல்பு. ஆனால் எமது தமிழர் பலருக்கு முன்னதான காட்சியளிப்பில் இருக்கும் ஆர்வம் பின்னதான நடத்தையில் இருப்பதாகத் தெரியவில்லை. வெளியிடங்களுக்கு நன்றாக ஆடைகள் மற்றும் நகைநட்டுகள் அணிந்துகொண்டு செல்வது எவ்வினத்தவர் என்று அறிய ஒரு கணக்கெடுப்பு நடத்தினால் அதில் தமிழர் முதலிடம் பெறுவர் என உறுதியாகக் கூறலாம்.

ஆனால் நடந்துகொள்ளும் முறைக் கணக்கெடுப்பில் பின்தங்கிய நிலையிலேயே இருப்பர். திருமண வைபவங்களில் இவர்கள் சாப்பாட்டுக்கு நிற்பதும் சாப்பாட்டை எடுப்பதும் சாப்பிடுவதும் எல்லாமே வீட்டில் செய்வது போலத்தான். வீட்டிலே உணவு உண்பதற்கும் வெளியிலே உணவு அருந்துவதற்கும் நிறையவே வித்தியாசம் உண்டு என்பதை சிலர் இன்னமும் உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை. இப்படித் தெரியாதவர்களின் எண்ணிக்கை எனது மதிப்பீட்டில் முதியவர்களை அதிகமாகக் காட்டுகின்றது.

ஒரு திருமணத்தில் ஓர் அம்மையார் சாப்பாட்டு வரிசையில் தக்காளிக் குழம்பை எடுத்துத் தனது உணவுத் தட்டில் ஊற்றிய பின் அகப்பையைத் தொப்பென்று சட்டியிற் போட்டுவிட்டு அப்பால் நகர்ந்தார். 'குழம்பு பதறி அழுது கண்ணீரை எதிரில் நின்றவரில் சிந்தியது.' அடுத்தவர் மற்றொரு அகப்பையின் உதவியுடன் புதைந்த அகப்பையை எடுக்க வேண்டியிருந்தது.

பிறிதொரு திருமணத்தில் நெருங்கிய உறவினர்கள் மட்டும் ஆசீர்வதிக்க வாருங்கள் என்று இரு தடவை தெளிவாக அறிவித்தும் ஒருவரும் கேட்கவில்லை. முக்கால்வாசி மண்டபமும் நெருக்கமாக எழுந்து நின்றது.

பல திருமணங்களில் மணமக்கள் அறுகரிசியால் மட்டுமன்றி பாட்டாலும் உரைகளாலும் வாழ்த்தப்படுவதுமுண்டு. வாழ்த்துப் பாட்டுக்களையும் வாழ்த்துரைகளையும் செவி மடுப்பவர்கள் குறைவு. செவிமடுக்காமல் மட்டும் இருந்தாற் பரவாயில்லை. ஓட்டை வாளியில் குழந்தைகள் தடியால் மேளம் அடிப்பதைப் போலச் சத்தம் போட்டுக் கொண்டல்லவா இருக்கிறார்கள்!



வாழ்த்துகின்றபொழுது அமைதியாக இருந்து கேட்பது மணமக்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் கொடுக்கும் ஒரு சிறந்த மதிப்பு என்பதைப் பலர் உணர்ந்து அதற்குத்தக நடந்துகொள்வதில்லை.

இவை கொஞ்சம் பொறுக்கக்கூடியவை. கூட்டம் ஒன்றில் காற்சட்டை 'கோற்'றுடன் அன்பர் ஒருவர் பக்கத்தில் அமர்ந்திருந்து பேச்சைக் கொடுத்தார். வாய் நாற்றம் பொறுக்க முடியாமல் இருந்தது.

## அந்தியேட்டி வைபவ அநாகரிகம்

அடுத்துச் சுட்டிக் காட்டவேண்டியதொன்று அந்தியேட்டி வைபவ அநாகரிகம். இவ்வைபவத்தில் -

(1) இறந்தவரின் சாந்திக்காகப் பிரார்த்தனை நடத்தப்படுகின்றது.

(2) பிரார்த்தனை முடிவில் இறந்தவருக்கு (அவரின் படத்துக்கு) அஞ்சலி செலுத்தப்படுகின்றது.

(3) நினைவு மலரிலிருந்து அவரது வாழ்க்கை வரலாறு உள்ளிட்ட சில முக்கிய பகுதிகள் வாசிக்கப்படுகின்றன.

(4) நினைவு மலர் அனைவருக்கும் விநியோகிக்கப்படுகின்றது.

(5) இறந்தவரின் பெருமை குறித்த சொற்பொழிவுகள் இடம்பெறுவதும் உண்டு.

(6) இறுதியாக அவரது நினைவாக உணவு பரிமாறப்படுகின்றது.

இவற்றில் ஈடுபாட்டோடு பங்குபற்றுதல் என்பது இறந்தவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் நாம் செய்கின்ற மதிப்பாகும். மாறாக, பலர் வைபவத்துக்குப் பிந்தியே வருகிறார்கள், அதுவும் சாப்பாட்டு நேரத்துக்குக் கணக்காக. நேரத்துக்கு வருகின்றவர்களும் வழிபாடு நடக்கும் போதும் பேச்சுக்கள் இடம்பெறும் பொழுதும் நிகழ்ச்சிகளில் நாட்டமில்லாதவராய்த் தமக்குள் பேசிச் சிரித்துக்கொண்டிருப்பது பெருவழக்காகி வருகின்றது.

கட்டுப்பாடு ஆலயங்களில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றியும் சைவ மக்கள் அறியாதவர்களாக இருக்கின்றார்கள். 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பது கொன்றைவேந்தன். ஏன் தொழ வேண்டும்? விடை தருகிறார் நாவலர் பெருமான்: 'நாம் இந்தச் சரீரத்தைப் பெற்றது இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்.' இறைவனிடத்தில் மனத்தைச் செலுத்துவதே வழிபாட்டின் முதற் படியாகும். இதன்பொருட்டு மனத்தைக் கட்டுப்படுத்தும் இடமாக ஆலயம் அமைவதைக் காண்கிறோம்.

கோயில் தூய்மையானது அதனைத் துப்புரவாக வைத்திருப்பதும் அடியார்களின் கடமையாகும். இத்தொண்டைச் செய்து காட்டியவர்களில் முதன்மையானவர் அப்பர் பெருமான். ஆலயத்தில் நாம் மட்டும் வணங்குவதில்லை. அது ஒரு பொது இடம். மற்றவர் வழிபாட்டுக்கு இடைஞ்சல் ஏற்படாவண்ணம் நாம் வணங்குதல் வேண்டும். மூலமூர்த்திக்குத் தீபம் காட்டப் படுகையில் வரிசையில் இதுவரை நின்றவர்களும் அதனைக் குழப்பிக்கொண்டு மூலத்தானத்துக்கு முன்னால் நின்று பின்னால் நிற்பவர்களை மறைத்துக்கொண்டு வணங்குவதைப் பல ஆலயங்களில் காணக் கூடியதாக இருக்கின்றது. எம்மவர்களின் மாறுபாடான ஆலய நடத்தைகள் பற்றி நான் முன்னரே 'இறைவன் முறுவல்' என்ற தலைப்பில் பாடிய கவிதை ஒன்று பின்வருமாறு:

- தொடரும்



கவிஞர் வி. கந்தவனம்

TBC Toronto Business College
கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்
SECOND CAREER

DIPLOMA PROGRAMS
Computerized Accounting
26 weeks
Personal Support Worker
26 weeks
Medical Office Administrator
32 weeks
★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ 4 வருடங்களுக்குள் EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் MATERNITY BENEFITS பெற்றவர்கள்
அரசாங்க நிதி உதவியில் இலவசமாகக் கற்று
உங்கள் எதிர் காலம் மிளிர்வதைக் காண்பீர்கள்
Tuition Fees, Books, Living Expenses,
Day care & Transportation அனைத்தும் இலவசம்
QUICK BOOKS, SIMPLY ACCOUNTING & ACCPAC
Classes By Experienced Instructors
இலவச ஆலோசனைகளுக்கு
416-291-5155
4465 SHEPPARD AVE. EAST #208
(SHEPPARD & BRIMLEY) SCARBOROUGH
www.tbcollege.com info@tbcollege.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)

# உலக மகா இந்துக்கள் ஸ்தாபனத்தின் வேண்டுகோள்

## எமது உள்ளம் கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள் எல்லோருக்கும் உரித்தாகட்டும்!

- இந்த மாதம் 25ம் திகதி செவ்வாய்க்கிழமை தீபாவளித்திருநாளை உங்கள் குடும்பத்தாருடனும் உற்றார் உறவினருடனும் சினேகிதர்களுடனும் சந்தோஷமாகக்கொண்டாடுங்கள்.

- திருநாள்கள் எல்லாத்துக்கும் தலையான தீபாவளித்திருநாள் ஏழுலட்சம் வருடங்களுக்கு முன்பே இராமபிரானினால் கொண்டாடப்பட்ட தெய்வத்திருநாளை நீங்களும் கொண்டாடுங்கள்.

- ஆண்டவன் அருளும் அமைதியும் ஆனந்தமும் தேடிவரும் அந்த புனிதமான தீபாவளித்திருநாளை உற்றார் உறவினருடன் சந்தோஷமாகக் கொண்டாடுங்கள்.

- வேற்றுமைகளை மறந்து நாம் எல்லோரும் ஒற்றுமையாக வாழவேண்டும் என்பதை வலியுறுத்தி வாழவைக்க வழிகாட்டியா இருக்கும் அப்புனிதத்திருநாளை எல்லோரும் கொண்டாடுங்கள்.

- திசைமாறிய பறவைகளையும் திருப்பி அழைத்து எம்முடன் ஒன்றிணைத்து நாம் எல்லாம் ஒருதாய் மக்களைப்போல் ஒற்றுமையாய் வாழ்வோமென தீபாவளித்திருநாளைக் கொண்டாடுங்கள்.

- எமது கலைகலாச்சாரத்தின் ஆணிவேராகவும் எமது இந்துமதத்தின் கலங்கரைவிளக்காகவும் உலகமெல்லாம் கொண்டாடும் அந்தபுனிதத்திருநாளை நீங்களும் கொண்டாடுங்கள்.

- எமது இனத்தின் ஒற்றுமையும் அதனால் கட்டியெழுப்பக்கூடிய எதிர்காலத்தையும் உறுதிமொழியாக எடுத்துக்கொள்ளும் தினமாக தீபாவளியைக் கொண்டாடுங்கள்.

- தர்மத்தின் வழிநடந்து தரணியெங்கும் வாழ்கின்ற எழுச்சிநாளாக தீபாவளித்திருநாளை உலகெங்கும் கொண்டாடுங்கள்.

- ஆண்டவனும் தேவர்களும் கொண்டாடி மகிழும் அந்த புனிதமான தீபாவளித்திருநாளை நாங்களும் எமது உறவினர்களுடனும் நண்பர்களுடனும் ஆனந்தமாய் கொண்டாடி மகிழ எல்லாம் வல்ல மாயவனைப் பிராத்திப்போமாக.

**தொடர்புகளுக்கு:** ***Shakthi:*** 416.992.7882, 4 Vange Cre. , Etobicoke. ON M9V 3N7

# நிகழ்வும் விளைவும்

## ஓடும் நீர் உறைவதில்லை 131

இயற்கையின் விதிப்படி ஒவ்வொன்றுக்கும் ஒரு முடிவு உண்டு என்கிறோம். உலகில் எதுவுமே நிலையற்றது என்கிறோம். இந்த நிலையற்ற நிலையை உருவாக்கும் ஒன்று நிலையானது என்பது தான் உண்மை. எனவே நிலையான ஒன்று மிகுதி அனைத்தையும் நிலையற்றதாக்குகின்றது. அந்த நிலையானது என்னவெனில் மாற்றம் (Change) எனப்படும். உலகில் நிலையான ஒன்றே ஒன்று இந்த மாற்றம் தான். மாற்றங்கள் நிரந்தரமானவை. மாறிக் கொண்டே இருக்கும் தன்மையால் அவை நிலையானதாக அமைகின்றன.


மாற்றங்கள் நிலையானதாக அமைவதற்கு அடிப்படையாக இருப்பது எது என்பதுதான் பலருக்குப் புரியாத புதிர். ஒன்று நிலையாக இருப்பதற்கு அதாவது மாற்றங்கள் நிலை யாகவும் தொடர்ச்சியாகவும் இருப்பதற்கு ஏதோ ஒன்று அடிப்படையாக இருந்தே ஆகவேண்டும். அந்த அடிப்படை என்ன? ஒன்றின் மாற்றமும் மாற்றம் இன்மையும் எதை அடிப்படையாக வைத்துத் தீர்மானிக்கப் படுகின்றது? சுருக்கமாகக் கூறுவதாயின் மாற்றங்களுக்கான அடிப்படை அந்த மாற்றங்களை உருவாக்கும் நிகழ்வுகள் தான். எனவே நிலையான மாற்றத்தை ஏற்படுத்துவது தொடர்ச்சியாக இடம்பெறும் நிகழ்வுகளே. எனவே நிகழ்வுகள் நிலையானவை மட்டு மல்ல மாற்றங்களுக்கான அடிப்படையும் கூட.

உலகியல் மாற்றங்கள் மட்டுமல்ல நமது வாழ்வியல் மாற்றங்களுக்கும் அடிப்படையாக அமைபவை இந்த நிகழ்வுகளே. இந்த நிகழ்வுகள் ஒருவருக்கு ஒருவர் வேறுபட்ட தாகவும், நேரத்திற்கு நேரம் மாறுபட்டதாகவும் அமையும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நிகழ்வுகளின் தாக்கங்கள் பற்றி நுண்ணறிவு நமக்குத் தேவைப்படுவதில்லை. ஏனெனில் அந்த நிகழ்வுகள் நாம் அறிந்தோ அறியாமலோ இயல்பாகவே இடம்பெறுவதால் அவை தவிர்க்கப்பட முடியாதவையாகவும் அமைகின்றன. உதாரணமாக உடலியல் மாற்றங்கள் இயல்பாகவே இடம்பெறும் நிகழ்வுகளின் தொகுப்பாக அமைவதனால் முதிர்ச்சி என்பது தவிர்க்கப்பட முடியாதது. இதே போன்று நமது வாழ்வியலில் ஏற்படும் பல்வேறு நிகழ்வுகள் எம்மால் தவிர்க்கப்பட முடியாதவையாகவும் அதனால் ஏற்படும் மாற்றங்கள் எமது கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டதாகவும் அமைவது இயல்பு.

இங்கே நிகழ்வுகள் தவிர்க்கப்பட முடியாதவை என்பது மறுக்கமுடியாததாயினும் அதனால் ஏற்படும் விளைவுகளைக் கட்டுப்படுத்த முடியுமா என்பது தான் இக்கட்டுரையின் அடிப்படையாக அமைகின்றது. எமது கட்டுப்பாடுகளுக்கு அப்பால் நிகழும் நிகழ்வுகளுக்கு எம்மால் எதையும் செய்ய முடியாது என்பது நாம் எல்லோரும் அறிந்த விடயம். உதாரணமாக காலையில் வேலைக்குச் செல்லுகின்ற போது திடீரென ஏற்படும் வானிலை மாற்றங்கள், போக்குவரத்து நெரிசல்கள் என்பன எமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட நிகழ்வுகள் என்பதால் இவை சம்பந்தமாக எதையும் நாம் மாற்றமுடியாத நிலைக்குத் தள்ளப்படுகி றோம். இங்கு எமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட விடயங்களையிட்டு நாம் கோவிப்பதோ அல்லது கவலைப்படுவதோ எந்த விதத்திலும் எமக்குச் சாதகமான நிலையை உருவாக்குவதில்லை.

நிகழ்வுகள் நிலையானதாயும் அவற்றில் பெரும்பாலானவை எமது கட்டுப்பாட்டுக்கும் அப்பாற்பட்டதாயும் அமைவது தான் நமது வாழ்வின் அடிப்படை என்ற உண்மையை நாம் தெளிவாக உணர்ந்து கொள்ளல் வேண்டும். ஏனெனில் ஒரு மகிழ்ச்சிகரமான வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைவது நிகழ்வுகளை இனங்கண்டு அவை எமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவையா அல்லது அதன் விளைவுகளை நாம் நெறிப்படுத்தவோ அல்லது கட்டுப்படுத்தவோ முடியுமா என்ற அளவீட்டைச் சிறப்பான முறையில் கையாளுவதுதான். நிகழ்வுகள் எமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டவையாக இருப்பின் அவற்றைக் கையாளும் முறையும் கட்டுப்படுத்தக் கூடியவையாக அல்லது நெறிப்படுத்தப்படக்கூடியவையாக இருப்பின் அவற்றைக் கையாளும் முறையும் அறிவியல் அனுபவம் சார்ந்ததாக அமைவது என்பதை விட ஒரு பொதுவான புரிந்துணர்வுடன் தொடர்புடையது என்பதே பொருத்தமானதாகும்.

துரதிஷ்டவசமாக நிகழ்வுகளைவிட நிகழ்வுகள் சார்ந்த விளைவுகள் பற்றிய மனிதனது செயற்பாடே அவனது வெற்றிக்கும் தோல்விக்கும், மகிழ்ச்சிக்கும் கவலைக்கும், இன்பத்திற்கும் துன்பத்திற்கும் ஆணிவேராக அமைகின்றது. ஏனெனில் நிகழ்வுகள் தவிர்க்கப்படமுடியாதவை என்பதனால் நாம் விரும்பியோ, விரும்பாமலோ அவை நம்மை வந்தடைவதையும் தவிர்க்கமுடியாது. இந்த நிகழ்வுகளில் நாம் எதிர்பார்க்காமல் இடம்பெறும் நிகழ்வுகளும் எதிர்பார்த்து இடம்பெறும் நிகழ்வுகளும் உள்ளடங்கும். இங்கு நாம் எதிர்பாராத நிகழ்வுகள் எம்மை வந்தடையும் போது அந்த நிகழ்வுகளை நாம் எதிர்ப்பதில் அர்த்தம் இல்லை. ஏனெனில் எதிர்பாராத நிகழ்வுகள் எதிர்பாராத விளைவுகளை உருவாக்குகின்றன. இந் நிலையில் இவ் விளைவுகளை நாம் எதிர்க்காமல் ஏற்றுக்கொள்வதே ஒரேயொரு வழி என்பதை நாம் மிகத்தெளிவாக



உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். உதாரணமாக எதிர்பாராதவிதத்தில் ஏற்படும் இயற்கை அனர்த்தங்களின் தாக்கங்கள், திடீரென ஏற்படும் சுகவீனங்கள், எதிர்பாராத விபத்துக்கள் போன்றவை மூலம் ஏற்படும் விளைவுகளையிட்டு நாம் வெறுப்படைவதோ அல்லது ஆத்திரப்படுவதோ அல்லது கவலைப்படுவதோ முற்றிலும் புத்திசாலித்தன மற்ற முயற்சியே. எனவே இவ்வாறான நிகழ்வுகளை அப்படியே ஏற்றுக்கொள்வதே புத்திசாலித்தனமானது மட்டுமல்ல சரியான அணுகு முறையுமாகும். ஏனெனில் இவ்வாறான நிகழ்வுகளுக்கு எதிராகப் போராடுவது புவியீர்ப்புக்கு எதிராகப் போராடுவதற்குச் சமமானது.

**KG Master**-kgmaster@rogers.com

மாறாக எமது கட்டுப்பாட்டுக்குள் அல்லது நெறிப்படுத்தலுக்குள் ஏற்படும் நிகழ்வுகளையும் அதன் விளைவுகளையும் நாம் கையாளக்கூடிய வகையில் மாற்றிக்கொள்வதன் மூலம் பல்வேறுபட்ட பிரச்சினைகளை தவிர்த்துக் கொள்ளலாம். உதாரணமாக ஒருவருக்கு இருதய நோய் இருப்பதாக எடுத்துக்கொண்டால் அதன் தாக்கத்தை எவ்வாறு குறைத்துக் கொள்ளலாம் என்பதைப் பல்வேறு வழிகளால் நாம் நடைமுறைப்படுத்தலாம். நீரிழிவு நோய் உள்ள ஒருவர் அதன் தாக்கத்தைக் குறைப்பதற்குப் பல்வேறு வழிமுறைகளைக் கையாளலாம். எனக்கு ஏன் நீரிழிவு ஏற்பட்டது என்று கவலைப்படுவதைவிட அதனை எவ்வாறு பராமரிக்கலாம் என்பதற்கான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதே அவசியமாகும்.

துரதிஷ்டவசமாகப் பெரும் பாலானவர்களது வாழ்வியல் பிரச்சினைகளுக்கு அடிப்படையாக அமைவது நிகழ்வுகளின் விளைவுகளைக் கையாளும் முறையாகும். பெரும்பாலானவர் கள் தமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட நிகழ்வுகளின் விளைவுகளுக்கு எதிராகப் போட்டியிட்டுத் தமது சக்திமுழுவதையும் வீணடித்து விடுகிறார்கள். இவர்களது பட்டறிவு கூட சுட்டுப்போய்விடுகிறது. முடியாத, சாத்தியமல்லாத ஒன்றுக்காகத் தமது வாழ்க்கையை வீணாக்கிக் கொள்கிறார்கள். எம்மால் மாற்றமுடியாத விடயங்களை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்கு வத்தை வளர்ப்பதற்குப் பதிலாக அதை எதிர்த்துப் போராடியே வாழ்க்கையை முடிவுக்குக் கொண்டுவருகிறார்கள். இவர்கள் இறந்துபோன பாம்பு ஒன்றை ஆடவைப்பேன் என்று ஓயாது மகுடியை ஊதி வாய்ப் புண்ணுக்கு வழி வகுப்பவர்கள். அதுமட்டு மல்ல வாய்ப்புண்ணின் வலியால் அவதிப்படும் போது கூட "வாயில் புண் ஏற்படாதிருந்திருந் தால் பாம்பை ஆட வைத்திருப்பேன்" என்று தம்மைப் பறை சாற்றுபவர்கள். இன்னொரு வகையானவர்கள் தம்மால் கட்டுப்படுத்தக் கூடிய அல்லது நெறிப்படுத்தக் கூடிய விடயங்களை உதாசீனம் செய்வதன் மூலம் பிரச்சினைகளுக்குள் தம்மை உட்படுத்துபவர் கள். இவர்களுக்கு ஒரு நிகழ்வின் விளைவும் அதனை எவ்வாறு தவிர்க்கலாம் என்பது தெரிந்தும் அதை நடை முறைப்படுத்தாமல் அவதிகளுக்கு உட்படுபவர் கள். உதாரணமாக நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட இருந்தும் கூட அதிகளவு இனிப்புப் பண்டங்களை தவிர்க்க வேண்டும் என்று தெரிந்தும் அதற்கு மாறாகச் செயற்படுபவர்கள். ஏனெனில் பிரச்சினை களைத் தவிர்த்துக் கொள்ளும் மனப்பக்குவத்தை இவர்கள் வளர்த்துக் கொள்வதில்லை.

### ஆம் வாசகர்களே!

ஒரு மகிழ்ச்சிகரமான வாழ்வியலின் அடிப்படை நமது கட்டுபாட்டிற்கு அப்பாற்பட்ட நிகழ்வுகளையும் அதன் விளைவுகளையும் முழுமையாக ஏற்றுக்கொள்வதும், நமது கட்டுபாட்டிற்கு உட்படும் நிகழ்வுகளை சிறப்பான முறையில் நெறிப்படுத்தி அதன் விளைவுகளை நமக்குச் சாதகமாக மாற்றுவதும் தான். ஏனெனில் நிகழ்வுகள் தவிர்க்க முடியாதவையாயினும் அவற்றின் விளைவு களை நாம் இனங்கண்டு கொள்வது இலகுவானதே. நமது வாழ்க்கை எவ்வாறு அமைக்கப்படுகின்றது என்பதைச் சிறிது ஆழமாகப் பார்ப்போமாயின் எமக்கு ஏற்படும் நிகழ்வுகள் பத்து சதவீமாகவும் இந்த நிகழ்வுகள் சம்பந்தமாக நாம் செயற்படும் முறை தொண்ணூறு சதவீதமாகவும் அமைவதைக் காணலாம். இந்த தொண்ணூறு சதவீதமான அணுகுமுறை நேர்த்தியான தாயின் மகிழ்வான வாழ்க்கையையும் எதிர் மறையானதாயின் துன்பமான வாழ்க்கையை யும் தருகிறது. எனவே நிகழ்வுகளல்ல அதன் விளைவுகள் சம்பந்தமான அணுகுமுறையே மகிழ்ச்சியையும் துன்பத்தையும் தீர்மானிக்கின்றது.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகை யிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலி யிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

- நன்றியுடன் KG Master

அமைதியின் குரல் - Words of Peace

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹாராஜி

1-877-707-3221 / தமிழில் - 416.431.5000

- MAHARAJI -

மஹாராஜியின் உரைகள்



On DVD

இலவச DVDக்கு அழையுங்கள்

(416) 431-5000

1 877 707 3221

On TV

Saturdays at 11:00 am

Rogers Cable Channel - 20

Bell Express vu Channel - 219

# உணவு உண்ணுவதிலும் சில ஒழுங்கீனங்கள்

இன்று எவரைப் பார்த்தாலும் நல்ல சுவையுள்ள சாப்பாட்டிற்காக தவித்துக் கொண்டிருப்பதனை அவதானிக்கலாம். திருமண வீட்டிலும் சரி மற்றும் எந்த விழாக்களிலும் சரி தங்களுக்குள் முக்கியமாக உரையாடிக் கொண்டிருப்பது 'யார் இன்று சாப்பாடு வழங்குகின்றார்கள்' என்பது தான். உணவு தயாரிப்பது (Catering) ஓர் உயர்ந்த கலையாகி விட்டது. நல்ல உணவகங்களை நோக்கி எவ்வளவு தூரமும் செல்வார்கள். எவ்வளவு நேரமும் வரிசையில் கூட நிற்பார்கள். சிலருக்கு இருபத்து நான்கு மணித்தியாலமும் இதுவே கனவு. தொலைக்காட்சிகளை பார்த்தால் அதிலும் உணவு தயாரிப்பு முக்கிய நிகழ்வு, விளம்பரங்களிலும் இதுவே ஆக்கிரமிக்கும். செல்லுமிடமெல்லாம் வகைவகையான உணவகங்கள். எப்படியெல்லாமோ இந்த நாவுக்கு ருசியான உணவினை தேடுபவர்கள் மத்தியில் சிலர் உணவு உண்பதில் பிரச்சினையுள்ளவர்களாக வாழ்கின்றனர். இன்று இனங்கண்டுள்ள இருவகை ஒழுங்கீனங்கள் (1) உணவு உண்ண விருப்பமற்ற தன்மை (Anorexia Nervosa), (2) அதிகளவில் சாப்பிட்டு வாந்தி எடுத்தல் (Bulimia Nervosa) என்பனவே அவை.

முதலாவது ஒழுங்கீனமான Anorexia Nervosa என்ற சொற்களில் முதலாவதான Anorexia என்பது பசியினை இழத்தல் என்ற கருத்திலும் Nervosa என்பது மன எழுச்சி காரணிகள் என்ற கருத்திலும் வரும். இது பெண்கள் மத்தியில் குறிப்பாக இளம் வயதினரான (Teen Ages) பெண்களிடம் காணப்படும். ஆண்களை விட 10 மடங்கு இவர்களிடம் இது ஏற்படலாம். பல ஒழுங்கீனங்களுடனுன், உளச்சோர்வுடனும் கூடவே இது நிகழ்கின்றது. உண்மையில் பசியின்றி இவர்கள் உணவினை குறைப்பவர் கள் அல்ல. நன்றாக சமைப்பார்கள், சமையல் நூல்களைக் கூட வாசிப்பார்கள். ஆனால் தாங்கள் சாப்பிடுவதனை குறைப்பார்கள். இதற்குரிய காரணங்கள் மிக விநோதமானவை. தாங்கள் நிறை கூடிவிடுவோமோ, தங்கள் உடல் பருத்து விடுமோ என பயப்பிடுவார்கள். தங்களை நிறுத்துக் கொள்வார்கள். வேறுவேறு உடல் உறுப்புக்களை அளப்பார்கள். அவர்களது சுய எண்ணம் மிகவும் மெலிவாக இருக்க வேண்டும் என்பதேயாகும்.

இரண்டுவகையான ஒழுங்கீனங்கள் இப்பிரிவில் உள்ளன. முதலாவது கட்டுப்பாடுள்ள வகை (Restricting Type) என்பது உணவு குறைப்பு காரணமாக நிறை குறைவது. இரண்டாவது வகை அதிகமாக சாப்பிட்டு வயிற்றோட்டம் செய்தல் (Binge Eating Purging Type). இதில் அளவுக்கதிமாக உண்டுவிட்டு மருந்து பாவித்து வயிற்றோட்டம் செய்தல் என்பது அடங்கும். இவ்வகை ஒழுங்கீனம் உள்ளவர்கள் ஆளுமை ஒழுங்கீனம் உள்ளவர்களாக இருப்பர். போதைவஸ்து, மதுபாவனை உள்ளவர்களாக காணப்படுவர். தற்கொலை செய்ய முயற்சிப்பர். சிலர் அழகு உள்ளவர்களாக வாழ்வதற்கு உடல் மெலிய விரும்புவர். உண்மையில் இவர்கள் பயம், திகில் நிறைந்த பெண்களாவர்.



உடலுறவில் விருப்பம் அற்றவர்களாக உயிராபத்து நிறைந்த இந்த ஒழுங்கீனம் இளம் பெண்களிடம் குடிகொண்டு வருத்துகின்றது.

பட்டினி இருத்தல் அல்லது பசி கிடத்தல் மூலம் உடலை மெலியப்பண்ணும் இப்பெண்கள் மன அழுத்தத்திற்கு உட்படுவர். பின்பு மனச்சோர்வுக்கும் உட்படுவர். இவர்களது மூளையில் பல்வேறு தாக்கங்கள் ஏற்படலாம். இதனால் Serotonin சத்து குறைவடையலாம். அத்துடன் சிலர் தங்கள் உடலை மெலியப் பண்ண வயிற்றோட்ட மருந்துகளைப் பாவிப்பர். இதனால் இரத்த அழுத்தம் குறையும். இதயத் துடிப்பு குறையும். எலும்பு சத்து குறையும். தோல்வரட்சி ஏற்படும். நகம் உதிரும். ஹார்மோன் சுரப்பு வேறுபடும். உடல் சோகை ஏற்படும். சிலருக்கு தலைமுடி உதிரும். இந்நிலையில் இது உயிராபத்து உள்ள நோயாகிறது. (Life Threatening Illness) மாரடைப்பு மூலம் அல்லது தற்கொலை மூலம் இந்நோயாளிகள் பலர் இறந்துள்ளனர். எனவே பெண்கள் இந்த சூழ்நிலையை வலிந்து ஏற்படுத்து வதிலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும். பொதுவாக வேற்றின பெண்களிடையில் இது பரவலாக இருந்தாலும் எமது பெண்களும் உடல் மெலிவதற்காக பட்டினி இருப்பவர் பலரை கண்டிருக்கின்றேன்.

இரண்டாவது வகையான 'Bulimia Nervosa' என்பது சற்று வித்தியாசமான ஒழுங்கீனம். Bulimia என்பது 'Ox Hunger' என்ற கிரேக்க மொழியின் அர்த்தமாகும். இது அளவுக்கதிகமாக விரைவில் சாப்பிட்டு விட்டு சத்தி எடுத்தல் ஆகும். இதுவும் உடல் மெலிவதற்காக பெண்கள் செய்யும் செயலாகும். உலகினை கவர்ந்த டயானா கூட இவ் ஒழுங்கீனத்தினை அனுபவித்த ஒருவராவர். இவர்கள் ஐஸ்கிறீம், கேக் மற்றும் இனிப்பு உணவுகளை விரைவில் உண்ணுவர். இவர்கள் முதலில் நன்றாக உணவு உண்ட பின்பு தங்கள் நிறை கூடிவிடுமோ என்று பயப்படுவார்கள். சிலர் தங்கள் விரல்களை வாய்க்குள் விட்டு சத்தி எடுப்பர். சிலர் வயிற்றோட்ட மருந்தினை எடுப்பார்கள். கூடிய தேகப்பயிற்சி செய்வார்கள். 90 வீதமான நோயாளிகள் பெண்களே. இவர்களும் உளச்சோர்வு, ஆளுமையின்மை, ஒழுங்கீனம், பதட்டம் உள்ளவர்களாக இருப்பர். சிலவேளைகளில் மரபியல் தொடர்பு (Genetically Related) இருந்துள்ளது. சுயகட்டுப்பாடு இல்லாதவர் கள் அடிக்கடி வாந்தி எடுப்பதால் பல சுரப்பிகள் செயல் இழக்கின்றன. உண்மையில் சில பெண்கள் மத்தியில் உள்ள துர்ரதிஷ்டமான அல்லது கடுமையான உணவு உண்ணும் ஒழுங்கீனங்களாக இவை உள்ளன. மேற்கூறப்பட்ட உணவுண்ணும் ஒழுங்கீனங்கள் ஏன் ஏற்படுகின்றன? என ஆராயப்பட்டுள்ளது. மரபியல் (Genetic), மூளையின் பங்கு (The Role of the Brian), சமூககலாசார அழுத்தங்கள் (Sociocultural Pressures), குடும்பத்தின் பங்கு (The Role of the Family), சுற்றாடல் அழுத்தங்கள் (Environmental Skees) என்பனவே இதில் இடம் பெறலாம்.

முதலில் மரபியல் செல்வாக்கு என்னும் போது இரட்டையர்களில் செய்யப்பட்ட ஆய்வு முக்கியம் பெறுகிறது. அதாவது ஒரே குடும்பத்தவரிடையில் இது தொடர்பு பட்டிருந்தது. அடுத்துள்ள மூளை என்பதின் பங்கினை நோக்கினால் இதனுடன் ஹோர்மோன்கள் தொடர்புபட்டிருந்தன. அத்துடன் Serotonin எனும் சத்து மாறுபடுவதும் அவதானிக்கப்பட்டுள்ளது. உடல் இரசாயான ஆய்வு மூலம் மூளையுடன் 'பசி' உணர்வு பற்றி தகவல்கள் உள்ளன. அத்துடன் உலக அழகுப் போட்டிகள் கூட பெண்களை கட்டமைப்பு உள்ளவர் களாக முயன்றுள்ளது. மார்பகங்களை பெரிதாக்கவும் இடைகளை சிறிதாக்கவும் உயரத்தை அதிகரிக்கவும் பல பெண்கள் முயன்றுள்ளனர். உணவை தவிர்த்தல், நிறையை குறைத்தல் இன்றுள்ள பொது நடவடிக்கையாகும்.

தற்போது இவ்வாறான ஒழுங்கீனம் உள்ளவர்களுக்கு எவ்வாறான சிகிச்சை அளிப்பது என்று ஆய்வு செய்துள்ளனர். முதலில் இவ்வகை நோயாளிகள் தங்களுக்கு எதுவித பிரச்சினையும் இல்லை என்றே கூறுவர். எனவே 90 வீதமானவர்கள் வைத்தியம் செய்ய மறுப்பார்கள். உயிரியல் உளவியல் அணுகுமுறைகள் இதற்கு தேவையாகும். முதலாவது ஒழுங்கீனத்திற்கு தொலைக்காட்சி, வானொலி, வெளியே சென்று வரும் முறை என்பவற்றினை பயன்படுத்தி அவர்களுக்கு உணவுப் பழக்கத்தினையும், உடல் நிறையையும் கூட முயற்சிக்க வேண்டும். வீட்டில் உள்ளவர்களே இதில் உதவி செய்ய வேண்டும். அவர்கள் இப்படியான நோயாளிகளிடம் பேசி உணவு உட்கொள்ள செய்ய வேண்டும். அதேவேளை இரண்டாவது வகை ஒழுங்கீனத்திற்கு சில அறிவுபூர்வமான நடத்தை சிகிச்சை முறைகளை செய்யலாம். கடுமையாக உணவு உண்ணாது சாதாரணமாக உண்ண வைக்கலாம். மூன்று நேரங்களில் மட்டும் உண்ணுதல் வேண்டும். அத்துடன் உளச்சோர்வு எதிர்ப்பு மருந்துகள் பாவிக்கலாம். சிலவேளைகளில் நோயாளிகள் இதனை விரும்பாது எதிர்ப்புக் காட்டலாம். உண்மையில் உயிராபத்து நிறைந்த இக்குழப்பத்திலிருந்து மீள்பவர்கள் சராசரியானவர்களைப் போன்று சாதாரண மான பழக்கமுள்ளவர்களாக மாறலாம் என்பதனை அறிவுறுத்தலாம்.

எப்படியான வேளைகளில் உணவு உட்கொள்வதனை தவிர்க்கின்றார்கள்?, எவ்வளவு உடல் நிறை குறைகின்றார்கள்?, நிறையில் எவ்வளவு வேறுபாடுகள் நிகழ்ந்துள்ளன? தனியாக உண்கிறார்களா? மற்றவர் முன்னிலையில் உண்கிறார்களா? உண்ட பின்பு தேவையில்லாதவற்றை உண்டுவிட்டதாக எண்ணுகின்றார்களா? எவ்வளவு நிறையினை கொண்டிருக்க விரும்புகின்றார்கள்? போன்ற வினாக்களின் மூலமே உணவு உண்ணுபவர்களின் மனநிலைகளை வைத்தியர்கள் அறிந்து



**எஸ். பத்மநாதன்**
**சிந்தனைப் பூக்கள்**

தொடர்ச்சி 16ஆம் பக்கம்




# நினைவாற்றல் - MEMORY - 19

## அன்பான வாசகர்களே!

கடந்த இதழில் அல்சீமேர்ஸ் (Alzheimers) நோய் பற்றிச் சற்று விரிவாக ஆராய்ந்திருந்தோம். இந்த நோய் பற்றி அச்சமூட்டும் ஒரு தகவல் அமெரிக்காவில் உள்ள ரெக்சாஸ் பல்கலைக்கழகத்தின் ஆய்வுக்குழுவால் வெளியிடப்பட்டுள்ளது. இந்த நோயும் தொற்றக்கூடிய நோயாக இருக்கலாம் என்ற சந்தேகமே அந்த அச்சமூட்டும் தகவலாகும். இந்த விடயம் எவ்வளவு தூரம் உண்மையானது என்பதை எதிர்கால ஆய்வுகளின் மூலமே நாம் அறிந்து கொள்ளலாம். அல்சீமேர்ஸ் நோய் அல்லது ஏனைய நினைவாற்றல் குறைபாடுகள் வராது இருப்பதற்கான தடுப்பு மருந்துகள் பற்றி பல ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. இவ்விடயத்தில் முன்னேற்றகரமான கருத்துக்களும் ஆய்வாளர்களால் தெரிவிக்கப்பட்டு உள்ளன. தற்பொழுது ஈஈஜி (EEG - ElectroEncephaloGram) பரீட்சை மூலம் அல்சீமேர்ஸ் இருப்பதற்கான அறிகுறிகளை விரைவில் அறிந்து கொள்ளலாம். நமது நினைவாற்றலில் சில குறைபாடுகள் காணப்படும் பொழுது இலகுவான, செலவு குறைந்த, வலி ஏற்படாத ஈஈஜி மூலம் பரீட்சித்து அல்சீமேர்ஸ் நோய் ஆபத்து உள்ளதா எனக் கண்டறிந்து கொள்ளலாம். அல்சீமேர்ஸ் நோய் இருப்பின் ஆரம்ப காலத்திலேயே அதற்கான சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளுவதன் மூலம் பாதிப்பைத் தவிர்த்துக் கொள்ளலாம். ஈஈஜி பரீட்சையில் மூளையில் உள்ள மின்சாரச் செயற்பாடுகள் அளவிடப்படுகின்றன. மூளையில் ஏற்படும் மின்சாரச் சமிக்ஞைகள் கணினியில் பதிவு செய்யப்பட்டு ஆராயப்படும். மூளையில் ஏற்படும் மின்சாரச் சமிக்ஞைகள் மிகவும் பலம் குறைந்தவையாக இருக்கும். இந்தப் பரீட்சையின் பொழுது மூளையில் உள்ள சமிக்ஞைகள் பத்தாயிரம் மடங்களவில் பெரிதாக்கப்பட்டே ஆராயப்படுகின்றன. இதற்காக விசேடமான மென்பொருட்கள் பாவிக்கப்படுகின்றன. இந்த முறை இதுவரையில் ஆய்வுகளுக்காகவே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இது பரந்த அளவில் பாவனைக்கு வர மேலும் சில காலம் செல்லலாம். நினைவாற்றல் குறைபாடுகள் பற்றிய பல ஆய்வுகள் மூலம் மேலும் பல நன்மைகளைப் பெற்றுக்



கொள்வோம் என்ற நம்பிக்கையுடன் காத்திருப்போம்.

சாதாரண நினைவாற்றல் குறைபாட்டால் பலரும் தம்மைத் தாமே குறைபட்டுக் கொள்வது சாதாரணமான விடயமே. எங்கே மோட்டார் வண்டியின் திறப்பை வைத்தோம்? என்று தேடுவது போலாக இருக்கலாம். இவ்வாறான விடயங்களைப் பற்றி நாம் அதிகம் கவலைப்படத் தேவையில்லை. எப்போதும் நமது நினைவாற்றல் விடயத்தில் அதிக கவனிப்பு இருக்க வேண்டும். நாம் இந்தக் கட்டுரையில் நினைவாற்றல் வலுவினைக் கூட்டுவதற்கான பல வழி முறைகளை ஆராய்ந்திருக்கின்றோம் அல்லவா. இவற்றைக் கொண்டு நாம் எப்போதும் நினைவாற்றல் வலுவுடன் வாழ்ந்து விடலாம். நினைவாற்றல் குறைபாடு மோசமாகி எமது வாழ்வைத் தீவிரமாக பாதிக்கும்போது நாம் நிலை குலைந்து விடவேண்டி வந்து விடும். அநேகமான சூழ்நிலையில் நமக்கு ஏற்படும் வேறு நோய்களின் பாதிப்புக்களால் அல்லது விபத்துக்களால் இந்த நிலை ஏற்படுகின்றது. அளவிற்கு அதிகமாக எடுக்கப்படும் மருந்துகளால் அல்லது குடிப்பழக்கத்தாலும் நினைவாற்றல் குறைபாடு ஏற்பட்டு விடுகின்றது. கொலராடோப் பல்கலைக்கழகம் அண்மையில் நடத்திய ஆய்வு ஒன்றில் சிறிய அளவில் உடற்பயிற்சியை ஒழுங்காகச் செய்து வரும்பொழுது தொற்றுநோய்களாலும், காயங்களாலும் ஏற்படும் நீண்ட நாள் நினைவாற்றல் குறைபாட்டைத் தவிர்க்க முடியும் என்று கண்டறியப்பட்டுள்ளது. மூளைப்பயிற்சியுடன் அளவான உடற்பயிற்சியும் சேர்ந்து எமது நினைவாற்றலைப் பேண உதவுகின்றது என்பதையும் கவனத்தில் எடுத்துக்கொள்வோம். மேலும் இந்த ஆய்வில் வாரத்துக்கு ஆறு மைல் தூரம் நடந்து வரும்பொழுது எமது மூளையின் அளவு சுருங்காது சீராகப் பேணப்படுவதே இதற்கான காரணம் எனக் கூறப்படுகின்றது. வயது முதிர்ந்து செல்லும்பொழுது மூளையின் அளவு



- அகணி -
authorakani@yahoo.com

தொடர்ச்சி 16ஆம் பக்கம்



# உணவு உண்ணு...

14ஆம் பக்கத்தொடர்ச்சி

கொள்ளுகின்றார்கள்.



உணவு உண்பதிலும் இவ்வளவு பிரச்சினைகள், சிக்கல்கள் உள்ளதா? என்பதனை வாசகர்கள் கேட்பது போல் உள்ளது. எமக்கு தெரியாமல் எமக்கு புரியாமல் எவ்வளவு பிரச்சினைகள் உள்ளன. இந்த உலகில் மக்களை புரிந்து கொள்வது மகா கடினம். தம் உடலை கட்டாக வைத்திருப்பதற்கு இளம் பெண்கள் எடுக்கின்ற முயற்சியே தனித்துவமானது. அதிலும் இப்படி உடலை வருத்தி உண்மையை மறைத்து உணவினை மாற்றி எப்படியெல்லாமோ அவர்கள் வாழ்கின்றார்கள். எமது பெண்கள் இப்படியான சூழ்நிலையில் இனிமேல் உருவாகுவார்களோ! என்ற பயத்திலேயே இக்கட்டுரை எழுந்துள்ளது. அளவறிந்து உண்ணுவதில் ஆபத்து எதுவுமில்லை என்று நம்புவோம்!


# நினைவாற்றல்...

15ஆம் பக்கத்தொடர்ச்சி

குறைந்து செல்வதால் நினைவாற்றல் குறைபாடு ஏற்படுகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது. பல வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலமே இந்த தகவல் வெளியாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. நடுத்தர வயதினர் போதிய நடத்தல் பயிற்சியை மேற்கொண்டு வந்தால் அவர்கள் மூளையின் ஆரோக்கியத்தையும், நினைவாற்றல் வலுவையும் தமது பிற்காலத்திலும் சீராகப் பேணக்கூடியதாகவிருக்கும். ஒருவருக்கு நினைவாற்றல் குறைபாடு ஏற்படும்பொழுது கூடவே நெஞ்சு வலி, காய்ச்சல், குழப்பமான மனநிலை, கவனிப்புத்தன்மை குறைதல் போன்ற அறிகுறிகளும் வருவது பொதுவானது. அம்னீசியா (Amnesia) என்ற நினைவாற்றல் குறைபாட்டில் புதிய விடயங்களை நினைவாற்றல் செய்ய இயலாமை, நினைவில் இருந்த விடயங்களை மறத்தல் போன்றவை அதன் பொதுவான தன்மைகள் ஆக உள்ளன. இதில் பல வகைகள் உள்ளன. எந்த வகையான அம்னீசியா என்பதைப் பொறுத்து பாதிப்புக்கள் வேறுபடும். மூளைக்கான பயிற்சிகளை மேற்கொள்வதன் மூலம் இந்தக் குறைபாட்டில் இருந்து மீளலாம்.

அன்பான வாசகர்களே!

இந்த நினைவாற்றல் தொடர்கட்டுரையில் நமது நினைவாற்றல் வலுவை அதிகரிப்பதற்கான பல்வேறு வழிமுறைகள் பற்றி ஆராய்ந்திருக்கின்றோம். மூளையின் தொழிற்பாடு பற்றிய பொது அறிவினை நாம் எல்லோரும் பெற்றிட வேண்டும் என்ற நோக்கிலும் சில சிக்கலான விஞ்ஞான விடயங்களை உங்கள் முன் கொண்டு வந்தேன். இதற்கு மேல் சில விடயங்களை ஆராய்ந்தால் புரிந்து கொள்வதற்குக் கடின-மாக இருக்கும் என்று கருதியும் சில விடயங்களை மேலெழுந்த வாரியாக மட்டும் எழுதிக்கொண்டேன். இந்தக் கட்டுரையின் சில பகுதிகளில் அதிகமான மருத்துவச் சொற்கள் புகுந்து கொண்டதை என்னால் தவிர்க்க முடியவில்லை. எந்த ஒரு மனிதனும் நினைவாற்றல் குறைபாட்டால் அவதியுறுவது மிகவும் மோசமானது. இதனைத் தவிர்க்க இந்தக் கட்டுரையில் கொண்டுவரப்பட்ட தகவல்கள் பயனுள்ளவையாக இருக்கும் என்று நினைக்கின்றேன். இந்தக் கட்டுரையை மீண்டும் மீண்டும் வாசித்து குறிக்கப்பட்ட



வழிமுறைகளை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துபவர்கள் நிச்சயமாக அதற்கான பலனைப் பெறுவார்கள் என்பது எனது நம்பிக்கை. இந்தத் தொடர்கட்டுரையினை வாசித்து பல வழிக-ளில் தமது கருத்துக்களை எடுத்துக் கூறியதன் மூலம் எனது முயற்சிக்கான ஊக்கத்தை அளித்த வாசகப் பெருமக்களுக்கு எனது அன்பு நிறைந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன். கட்டுரை பற்றிய உங்கள் கருத்தினை இனிமேலும் தெரிவிக்கலாம். இந்தத் தொடர்கட்டுரையைத் தொடர்ச்சியாகப் பொருத்தமான படங்களையும் சேர்த்துப் பிரசுரித்த விளம்பரம் நிறுவத்தினருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் வேறு ஒரு தலைப்பில் பயனுள்ள கட்டுரையுடன் விளம்பரம் பத்திரிகை ஊடாக மீண்டும் சந்திப்போம் என்று கூறி விடைபெறுகின்றேன்.

முற்றும்

# நீரிழிவு...

17ஆம் பக்கத்தொடர்ச்சி


7. நாடி சுத்தி - (Breathiog)
8. பட்சிமொத்தாசனம் - (Forwar Bend)

மேற்கூறப்பட்ட அனைத்து ஆசன நிலைகளுக்கும் உடலின் அடிப்பாகத்தில் முள்ளந்தண்டுக்கு உட்புறமாக அமைந்திருக்கும் கணையத்தைச் செம்மைப்படுத்தக்கூடிய சக்தி இருப்பதால் இவற்றுள் ஒரு சிலவற்றையாவது காலையிலும், மாலையிலும் செய்து வருவதால் ஒரு வாரத்தினுள்ளேயே பலனைக் கண்டறிய முடியும். நோய் ஆரம்ப நிலையில் இருந்தால் மாத்திரைகளே எடுக்கத் தேவையில்லை. மற்றவர்கள் நோயின் தீவிர தன்மை குறைவதால் மிகவும் கவனத்துடன் மருந்தின் அளவைக் குறைக்க முடியும்.

## ஆல்ஃபா தியானம் - ALFA MEDITATION

ஓரிடத்தில் கண்களை மூடிக்கொண்டு பல சஞ்சலங்களின் மத்தியில் ஏதோ ஒரு கடவுளின் தோற்றத்தை நினைத்துக்கொண்டிருப்பது தியானம் என்று கருத முடியாது. என்றைக்கும் ஒரு பலனும் தராது. அப்படியே இருக்க வேண்டியது தான். மனத்தை ஒருமுகப்படுத்துவது மிகவும் கடினமானது. மூச்சு இதில் தான் மனம் ஒடுங்கும். மூச்சுதான் வாழ்வு, மூச்சுதான் சாவு, மூச்சுதான் தியானம், மூச்சுதான் எல்லாம்.

நேராக நிமிர்ந்து முதுகுத்தண்டினை வளைக்காமல் ஒரு இருக்கையில் அமர வேண்டும். வயிற்றின் அடிப்பகுதியில் தொப்புள் பகுதிக்கு மேல் இரண்டு உள்ளங்கைகளையும் மெதுவாக வைத்தபடி இழுக்கும் மூச்சானது உள்செல்வதையும் வெளிவிடுவதையும் அதன் அசைவுகளையும் கைகளின் கட்டைவிரல்களினால் உணரமுடிகிறது. இந்த நிலையில் மனத்தை முடிந்தவரை அங்கே நிறுத்த முயற்சிக்க வேண்டும். இது நாளடைவில் இலகுவாகிவிடும். இதனைத் தொடர்ந்து பழகினால் மனமானது ஆல்ஃபா நிலைக்கு வருவது சுலபமாகிவிடும். ஒவ்வொருமுறையும் மூச்சை உள்ளே இழுக்கும் போதும் பிரபஞ்ச மாகா சக்தியை உள்வாங்குகின்றோம். சக்கரங்கள் என்று சொல்லப்படும் சக்தி மையங்களுக்குச் சென்று அவற்றை சிறப்பாகத் தொழில்பட வைக்கின்றன.





இந்தவகையில் கணயம் (Pancreas) எனப்படும் (solar Plexus Chakra) சக்கரத்தை தூண்டிவிடுவதன் மூலம் உடலுக்கு அவ்வப்போது தேவைப்படும் சக்கரை சத்தின் அளவை சரி செய்கிறது. இந்த ஆல்ஃபோ நிலையில் மூச்சு மெதுவாகவும் ஆழமாகவும் நடைபெறுகிறது. இப்போது நீரிழிவின் தாகத்திலிருந்து விடுபட்டுக் கொண்டிருப்பதாக மனதுக்குள் திரும்பத்திரும்ப சொல்லிக் கொண்டிருக்க வேண்டும். இது நாளடைவில் ஆழ்மனதில் பதிந்து நோய் பூரணமாகக் குணமடையும்.

# நீரிழிவு நோய் நீர்மூலம்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

## DIABITES UNDER CONTROL

நீரிழிவு நோய்க்கு மருந்து உட்கொள்ளுவதானது நோயின் தீவிரத் தன்மையைத் தணித்து வைத்திருப்பதற்காகத்தான் என்பதை ஒவ்வொரு நோயாளிகளும் நன்கு தெரிந்திருக்க வேண்டும். அவர்கள் நினைப்பது இவ்வாறு மருந்தின் உதவியுடன் தமது மிகுதி வாழ்க்கையையும் கடத்திவிடலாம் என்றுதான். ஆனால் நடப்பது வேறு நீரிழிவு நோய்க்குரிய மருந்தின் பக்கவிளைவானது காலப்போக்கில் உயர் ரத்த அழுத்த நிலையை உருவாக்குவதுடன் சிறுநீரகம் (Kidney) சம்பந்தப்பட்ட பல அபாயகரமான நோய்களுக்கு மனிதனை ஆளாக்குகின்றது. எனவே இந்த மருந்து மாத்திரைகளானது மனிதனை இறுதி யாத்திரைக்கு அழைத்துச் செல்லும். இதிலிருந்து விடுபடும் உபாயத்தை நம்முன்னோர் நமக்களித்துச் சென்றுள்ளனர்.



### ஆசனம் பாதி - ஆகாரம் பாதி

இரத்தத்தில் அதிக சர்க்கரை சேர்ந்து விடுவதையே நீரிழிவு என்கிறோம். இது பெரும்பாலும் பரம்பரையாகவே வருவதுண்டு. ஆனாலும் அதிக மனஅழுத்தம், கடின வேலைப்பழு, தூக்கமின்மை, உணவு கட்டுப்பாடின்மை போன்ற காரணங்களாலும் வருவதுண்டு. எனினும் இந்த நோயை இரண்டு வாரங்களுள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியுமா? ஆம் முடியும். மனம் வைத்தால் முயற்சி எடுத்தால் வெற்றி கிட்டும்.

### உணவுக்கட்டுப்பாடு

உணவில் கட்டுப்பாடு மிக முக்கியம். அரைவயிறு தான் சாப்பிட வேண்டும். இனிப்பை முடிந்தவரை ஒதுக்க வேண்டும். கிழங்கு வகைகளும் இடைத்தீனிகளும் கூடாது. உணவில் கசப்பு, துவர்ப்பு உள்ள பண்டங்கள் அதிகம் சேர்க்க வேண்டும். நாள்தோறும் காலையில் ஓரிரு வேப்பம் மரத்தின் குருத்தோ அல்லது இலைகளையோ நன்கு மென்று உண்ண வேண்டும். அத்துடன் வெந்தயம் சேர்ந்த இட்லி, தோசை, அப்பம் போன்ற உணவு வகைகளை காலையிலோ அல்லது இரவு சாப்பாடாகவோ உண்ணலாம். இடையிடையே மதிய உணவாக பாகற்காய், வெங்காயம் சேர்ப்பது நன்று.

### கீரைவகைகள் சாப்பிடுங்கள்

மதிய உணவில் கீரைகள், வெண்ணெய் எடுத்த மோரும் சேர்ப்பது சிறந்தது. சிறுகீரை, முருங்கைக்கீரை, வல்லாரைக்கீரை அத்துடன் வாழைப்பூ, அவரை, நெல்லி, புடலங்காய் சேர்த்துக் கொள்ளலாம். இரவுச் சாப்பாட்டில் கோதுமை சிறந்தது. கடையில் கோதுமை ரவை வாங்கலாம். அதில் கறிவேப்பிலை அதிகம் சேர்த்து உப்புமா, தோசை, இட்லி என்பன செய்து உண்ணலாம்.

### மூலிகைகள்

நாவல் கொழுந்து அல்லது பழம், வில்வம் பழம், கருந்துளசி இலை. இவற்றில் ஏதாவது ஒன்றோ இரண்டோ காலை, மாலை நன்கு மென்று விழுங்கலாம். அத்துடன் பச்சைப்பயறு, கொள்ளு என்பவற்றை ஊறவைத்து சாப்பிடலாம். தாளித்தல் ஆகாது.

### யோகாசன பயிற்சியும் உடற் பயிற்சியும்

தினமும் 20 நிமிடநேரம் சில குறிப்பிட்ட யோகாசனங்களைத் தேர்ந்தெடுத்து பழகி வந்தால் இந்த நீரிழிவு நோயை பூரணமாகக் கட்டுப்படுத்த முடியும்.

1. சர்வாங்காசனம் - (Shoulderstard)
2. தநூராசனம் - (Bow)
3. மகாமுத்திரை - (Maha Muthra)
4. நவகாசனம் - (Boat)
5. ஹலாசனம் - (Plough)
6. விபரீதகரணி - (Adventure)



ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm

தொடர்ச்சி 16ஆம் பக்கம்



# 90 சவுக்கடிகளும் ஒரு திரைப்படமும்

கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஊடகங்களில் அதிர்ச்சியளித்த செய்தி ஒரு நடிகைக்கு ஒரு வருட சிறைத் தண்டனையும் 90 கசையடிகளும் என்பதே. இந்நடிகை ஈரானைச் சேர்ந்த Marzieh Vafamehr ஆவார். இவர் அவுஸ்திரேலிய தயாரிப்பில் உருவான My Theran for Sale என்ற படத்தில் நடித்தமைக்காகவே இத்தண்டனை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஊடகங்களும் கலாச்சாரமும் என்ற அரச சட்டத் திணைக்களத்தினாலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவரது கணவரும் திரைக்கதை ஆசிரியரும் இயக்குனருமான Nasser Taghvai கருத்துத் தெரிவித்தபோது ‘விசாரணை இத்திணைக்களத்திற்கு வெளியே நடைபெறுகின்றது. விசாரிப்பவர்கள் கலை பற்றிய எந்தவித ஆழமான அறிவற்றவர்கள். இவர்கள் எவ்வாறு ஒரு நீதியான விசாரணையை மேற்கொள்வார்கள்’ எனத் தெரிவித்தார். Marzieh Vafamehr இப்படத்தில் (My Theran for Sale) ஆபாசமாக நடித்தமைக்காகவே கைது செய்யப்பட்டார். ஆபாசம் என்றவுடன் ஹொலி-கொலிவூட் படங்களே ஞாபகத்துக்கு வரும். ஈரானிய படங்களில் அப்படியெல்லாம் எதிர்பார்க்க முடியாது. இவர் இப்படத்தில் முக்காடு போடாமைக்கும் தலைமயிரை கழுத்தளவிற்கு வெட்டி நடித்தமைக்குமே இத்தண்டனை. இப்படம் ஈரானிற்கு வெளியே காண்பிப்பதற்காகவே ஈரானிலேயே முழுவதுமாக எடுக்கப்பட்டது.



1979 ஆம் ஆண்டு இஸ்லாமிய புரட்சியின் பின்னரும் சரி அதற்கு முன்பாகவும், ஈரானில் பெண்கள் சினிமாவில் நடிப்பதற்கு பல தடைகள் இருந்தன. ஆண் நடிகர், பெண் நடிகரை தொட்டு நடிக்கக் கூடாது, அதேபோல் பெண் நடிகை ஆண் நடிகரை தொடமுடியாது. பெண்கள் முக்காடுடன் கண்கள் மட்டுமே தெரியும் அளவிற்கு உடைகள் அணிய வேண்டும் போன்ற கட்டுப்பாடுகள் இருந்தன. இதனால் பெண்கள் நடிப்பதற்கு முன் வரவில்லை. Sheida என்ற படத்தில் பெண் தாதி, காயம் பட்ட நோயாளியை தொட்டுத் தூக்கிய காட்சிக்கு எதிராக குரல் கொடுக்கப்பட்டது. இவ்வாறான காட்சிகள் தடை செய்யப்பட வேண்டும் எனவும் பரிந்துரைக்கப்பட்டது. 1930ல் தயாரிக்கப்பட்ட முதல் மௌனப்படத்தில் நடிக்க பெண்கள் எவரும் முன் வரவில்லை. Sedighe Saminejad Mehranghiz முதல் பெண் நடிகையானார். இவர் வீதியில் சென்ற பொழுது, மக்கள் கற்களால் எறிந்தனர். Tahmineh Milani என்ற ஈரானிய பெண் இயக்குனரின் ‘இரு பெண்கள்’ என்ற படம் மிக முக்கியமானது. இவர் இந்தப் படம் தயாரிப்புக்கான அனுமதிக்கு எட்டு வருடங்கள் காத்திருக்க வேண்டியிருந்தது. The Fifth Reaction என்ற Milani ன் படத்துக்கு ஈரானிய ‘இஸ்லாமிய கலாசார வழிகாட்டி’ (Ministry of Culture and Islamic Guidance) அமைச்சு அனுமதி கொடுத்த பின்னரே படம் தயாரிக்கப்பட்டது. படம் வெளியான பின்னர் எழுந்த எதிர்ப்பால் இவரை சிறையில் தள்ளிவிட்டார்கள்.

இந்த வருடம் வேறு பல இயக்குனர்களையும் திரைப் படைப்பாளிகளையும் கைது செய்துள்ளார்கள். பி.பி.சியில் வெளியான பார்சிய மொழி விவரணத்திரைப் படத்திற்கான படத்துடன் சம்பந்தப்பட்டவர்களின் உறவினர்களையும் விசாரித்துள்ளது ஈரானிய அரசு. இதைத் தவிர நடிகை Pegah Ahangarani (Women's Prison) என்ற படத்தில் நடித்துள்ளார். இவர் கடந்த தேர்தலில் எதிர்க்கட்சி வேட்பாளருக்காக வெளிப்படையாக பிரச்சாரம் செய்தார். உலக பெண்கள் உதைபந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்ள செல்வதற்கு முன்பாக இவர் கைது செய்யப்பட்டார். பெண்கள் உதைபந்தாட்ட அரங்கினுள் செல்ல அனுமதிக்க வேண்டும் என பிரச்சாரத்தில் ஈடுபட்ட Maryam Majd என்ற புகைப்பட பத்திரிகையாளரும் கைது செய்யப்பட்டார். இவர்களைத் தவிர Mahnaz Mohammadi (இயக்குனர்)யும் கைது செய்துள்ளது. நிழல்களின்றி பெண்கள் (Women with out Shadows) என்ற விவரணத் திரைப்படத்தை இயக்கியுள்ளார். Mohammad Rasoulof, Jafar Panahiasser Saffarian, Hadi Afariden, Shahnama Bazdar, தயாரிப்பாளர் Katayoun Shahabi போன்றோரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களுள் இது afar Panahiasserக்கு திரைப்படங்கள் தயாரிக்க 20 வருட தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

## தூறல்

## வானரன்

2. My Tehran for Sale

நான் சிறுமியாக இருந்த பொழுது வண்ண உடைகள் உடுப்பதற்கு தடைசெய்யப்பட்டிருந்தது. ஜீன்ஸ் அணியக் கூடாது. வெள்ளை நிற சொக்ஸ், sneakers தடைசெய்யப்பட்டிருந்தது. பாடசாலையில் சிரித்தால் கூட குறை கூறுவார்கள். அது இஸ்லாமிய புரட்சிக் காலம். எப்பொழுதும் துக்கத்துடனேயே இருக்க வேண்டும். கேள்விகள் கேட்கக் கூடாது. எழுதப்படாத விதிகள் சட்டங்களை நாங்கள் கடைப்பிடிக்கவேண்டும். இந்த நடைமுறை பாடசாலை, பல்கலைக்கழகம் வேலைத்தளம் என தொடர்கின்றது. எனது கதையே இப்படம் என்கின்றார் இயக்குனர் Granaz Moussavi. இவரும் ஒரு பெண் இயக்குனர். 1974ல் பிறந்தார். இவரது தந்தை தொலைக்காட்சி நிறுவனத்தில் ஒரு ஒலிப்பொறியியலாளர். இவர் 17வது வயதில் தனது முதலாவது இலக்கிய விமர்சனத்தை வெளியிட்டார். இவர் ஒரு கவிஞருமாவார். நாடகங்களிலும் நடித்துள்ளார். 1997ல் அவுஸ்திரெலியாவிற்கு குடி பெயர்ந்து அங்கு திரைப்பட இயக்குனர் பயிற்சியும் பெற்றுள்ளார்.



‘நான் ஈரானுக்கு திரும்பி வந்த பொழுது Marzieh Vafamehr ஐ சந்தித்தேன். அவர் தன்னை ஒரு நடிகையாக நிலைநாட்ட பல கடினமான படிகளைச் சந்தித்தார். நெறி, ஒழுக்க முறைகள், கட்டுப்பாடுகள் போன்றவற்றிற்கூடாக தன்னை நடிகையாக நிலையாக்க கடினமாக உழைத்தார். பல சவால்களைச் சந்தித்தார். எங்களது கதையைக் கூற வேண்டும் என விரும்பினேன்’ என இயக்குனர் Granaz Moussavi இப்படம் பற்றி கூறியுள்ளார்.

தொடர்ச்சி 20ஆம் பக்கம்

SABESAN DENTURE CLINIC
பல் கட்டும் துறையில் விசேட நிபுணர்
We Specialized in..........
Full Dentures
Immediate Dentures
Partial Dentures
Implant Retained Dentures
Mouth Guards
Anti-snoring Devices
Repair of Broken Dentures
Relining for Loose Dentures
Soft Liners
Teeth Whitening


தனிப் பல்லாகவோ, ஒருசில பற்களாகவோ, அல்லது முழுப்பல் செட் ஆகவோ இருப்பினும் சகலவகை செயர்க்கைப் பற்களும் உங்களுக்கேற்ப செய்துதரப்படும்.
உங்கள் தற்போதய பற்களின் குறைபாடுகளை சீர்செய்யவும் உடைந்தபற்களை ஒட்டவும் எம்மை அழைக்கவும்.
சபேசன் தங்கத்துரை BDS (SRI LANKA) DD (CANADA)
Denture Specialist
இலங்கையில் பலவருடங்களாக DENTAL SURGEONஆக கடமையாற்றியவர்
416 854 9152
எமது Labல் உடனுக்குடனும், நேர்த்தியாகவும் வடிவமைக்கப்பட்ட பற்கள்.
அவசரதேவை உள்ளவர்களுக்கு ஒரே நாளிலும் பற்கள் கொடுக்கப்படும்.
சமூகநல நிதி உட்பட சகல காப்புறுதிகளும் ஏற்றுக்கொள்ளப்படும்

TRIDEL® BUILT FOR LIFE

# ALTO NEW CONDO.

## HWY 404 / SHEPPARD / VICTORIA PARK

Special VIP package







**TRIDEL நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்**

**HomeLife / GTA Realty Inc.**
**Brokerage***

HOMELIFE HIGHER STANDARDS

**சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்**

**இன்றே தொடர்பு கொள்ளுங்கள்: 416.321.6969**

*Independently Owned & Operated

# திரைவிமர்சனம் - வாகை சூட வா!

‘களவாணி’ இயக்குனர் சற்குணத்தின் இரண்டாவது படம். இந்தமுறை, 1960களில், தமிழ்நாட்டில் ஒரு கிராமத்தில், படிக்காத மக்களிடையே கல்வியின் அவசியத்தை உணர்த்தி போராடும் ஒரு இளைஞனைப் பற்றிய கதையுடன் களம் இறங்கியிருக்கிறார். உலக சினிமாவைக் கொண்டாடும் சமீபகால தமிழ் திரைப் பார்வையாளர்கள்மேல் நம்பிக்கை வைத்து வந்திருக்கும், உண்மையிலேயே மெச்சத்தக்க ஒரு தமிழ் திரைப்படம். சர்க்கார் உத்தியோகத்தில் இல்லை என்ற ஒரே காரணத்துக்காக பத்திர எழுத்தரான

கே. பாக்யராஜை அவருடைய மைத்துனர் அவமானப்படுத்திவிடுகிறார். அந்த அவமானத்தைத் துடைக்க தனது மகனை அரசுப் பள்ளி ஆசிரியராக்குவதை தனது லட்சியமாகக் கொள்கிறார் பாக்யராஜ். மகன் விமலை ஆசிரியர் பயிற்சியில் சேர்த்து படிக்க வைக்கிறார். கிராமசேவாவின் சார்பில் ஆசிரியர் வேலைப் பார்த்து சான்றிதழ் வாங்கினால், அரசாங்க ஆசிரியர் வேலைக்கு முன்னுரிமை தருவார்கள் என்று அறிகிறார். எனவே, கண்டெடுத்தான் காடு என்னும் குக்கிராமத்திற்கு மகனை அனுப்பி வைக்கிறார். செம்மண் புழுதியில் செங்கல் சூளை மட்டுமே வாழ்வாதாரமாக கொண்ட கிராமம். வெள்ளந்தியான மக்கள், குடும்பம் குடும்பமாக அடிமைகளை போல் செங்கல்



சூளையில் உழைத்துக் கொண்டேயிருக்கிறார்கள். செங்கல் சூளை முதலாளி பொன்வண்ணன். மாடு மாதிரி உழைக்கும் மக்களுக்கு சொற்ப கூலியே கொடுக்கிறார்.

படிப்பு வாசனை என்பதை பரம்பரையாகவே அறியாத கிராமத்தைக் கண்டதும் வேண்டா வெறுப்பாகவே தனது பணியை ஆரம்பிக்கிறார் விமல். அவரைக் கண்டதும்

**பிலிம்நியூஸ் கிருஸ்ணன்**

காதலிக்க ஆரம்பிக்கிறார், அந்த ஊரிலேயே டீக்கடை நடத்தும் மதி என்னும் பெண். ஒரு பக்கம் காதலில் வாழ்க்கை சுவாரஸ்யமாக நகர்ந்தாலும், கிராம ஆசிரியர் பணி விமலுக்கு சுலபமாக இல்லை. திரைபடத்தில் எம்.ஜி.ஆரை நம்பியார் சவுக்கால் அடிப்பதைப் பார்த்து, கோபம்கொண்டு குருவி சுடும் துப்பாக்கியால் திரையரங்கத் திரையை சுடும் அளவிற்கு இருக்கிறார்கள் மக்கள். அவர்களிடையே கல்வியின் அவசியத்தை எடுத்துகூறி புரியவைக்க மிகவும் சிரமப்படுகிறார், விமல். பிள்ளைகளை பள்ளிக்கு வர மறுக்கிறார்கள். விமலைப் பார்த்தாலே ஓடி ஒளிகிறார்கள் மாணவர்கள். அப்படி ஓடிய ஒரு மாணவன் கிணற்றில் விழுந்து விடுகிறான். அவனை காப்பாற்றி விடுகிறார்கள் என்றாலும், அந்தப் பையனின் அம்மா என் பிள்ளையை கொல்லப் பார்த்தாயே எனத் திட்டுகிறாள். அவர்கள் வளர்க்கும் ஆடு, நடப்பது என்னவென்று புரியாவிட்டாலும், இவன் நம் எதிரி என்பதை மட்டும் உணர்ந்து விமலை முட்ட வருகிறது. செங்கல் சூளை முதலாளி தன் வியாபாரம் பாதிக்கிறது என விமலை ஊரைவிட்டு துரத்த முயல்கிறான். கிராமத்தவர் ஒருவர் புதிர்க் கணக்குப் போட, விமல் தெரியாமல் முழிக்க ஆசிரியருக்கு கணக்குத் தெரியவ-ில்லை என்று ஊரே கேலி பேசுகின்றது. அப்பாவிற்கு கடிதம் எழுதி விடை கேட்டு சமாளிக்கிறார் விமல்.

இப்படி மக்களிடையே கேலிக்கும் கிண்டலுக்கும் ஆளானாலும், செங்கல் சூளை முதலாளி கிராம மக்களின் உழைப்புக்கு

தொடர்ச்சி 40ஆம் பக்கம்


# 90 சவுக்கடி...

18ஆம் பக்கத்தொடர்ச்சி

Marzieh ஒரு நடிகை, ஒரு Fashion designer. தெஹ்ரானில் வாழ்ந்து வருகின்றார். ஈரானின் கட்டுப்பாட்டு விதிகளுக்குள் தன்னை நிலை நிறுத்த முடியாமல் திண்டாடுகின்றார். கலைத் திறமைகளை வெளிப்படுத்த முடியாமல் உள்ளது. இதனால் இவர் underground வாழ்விற்கு தள்ளப்படுகின்றார். அங்கு வெளிநாட்டில் உள்ளவரை திருமணம் செய்வதன் மூலமே நாட்டை விட்டு வெளியேறலாம் என்ற கருத்து வெளிப்படுகின்றது. அவ்வாறான ஒரு இரவு விருந்தில் சமனைச் சந்திக்கின்றார். இருவரது நட்பும் நெருக்கமாகின்றது. ஒருவரை ஒருவர் விரும்புகின்றனர். திருமணம் செய்ய நினைக்கின்றனர். இவர் அவுஸ்திரேலிய ஈரானியன். சமன் Marzieh ஐ அவுஸ்திரேலி-யா வருமாறு அழைப்பு விடுக்கின்றார். அழைப்பை ஏற்று அவுஸ்திரெலியா செல்கின்றார். அங்கு அவருக்கு புதிய சவால்கள் காத்திருக்கின்றன. ஈரானில் செய்ய முடியாதவற்றை அவுஸ்திரெலியாவில் சாதித்தாரா? முதலில் Marzieh விசா மறுக்கப்படுகின்றது. பின்னர் அகதி கோரிக்கையும் நிராகரிக்கப்படுகின்றது.

இப்படம் ஈரானின் இறுக்கமான உள் கட்டமைப்பிற்குள் சிறுவர்கள் இளைஞர்கள் படும் உளவியல் ரீதியான பிரச்சினைகளை வெளிப்படுத்துகின்றது. வெளி உலகத்திற்கு தெரியும் ஈரான் நிஜமானதல்ல. அதனுள் ஒரு Underground உலகமே உள்ளது. சட்டங்களுக்கும் விதிகளுக்கும் எதிராக அனைத்துச் செயற்பாடுகளும் செய்யப்படுகின்றன. இதனைக் கண்டித்து கடுமையான தண்டனைகளும் உள்ளன. அப்படி இருந்தும் அதனை மீறவே விரும்புகின்றனர். பெண்கள் தங்களது சுதந்திரங்களை இவ்வுலகத்தில் அனுபவிக்கின்றனர். இது ஈரானில் மட்டுமல்ல ஆங்காங்கே பல நாடுகளில் காணப்படுகின்றன. அண்மையில் மொன்றியல் நகருக்கருகாமையில் ஒரு யூத கிராமம் இவ்வாறான கட்டுப்பாட்டுக்குள் இயங்குவது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

ஒரு உலகத்தில் இருந்து மற்ற உலகத்திற்கு சுதந்திரத்துக்காக செல்லும் போது பல சவால்களைச் சந்திக்கின்றனர்.



அவுஸ்திரெலியா, அகதியாக வருபவர்களை மிகவும் கடுமையாக நடத்துகின்றது. ஒரு சில காட்சிகள் மூலமே தனது எதிர்வினையை இயக்குனர் வெளிப்படுத்தியுள்ளார். இப்படம் 2009 ரொரண்ரோ சர்வதேச திரைப்படவிழாவில் திரையிடப்பட்டது. வேறு பல திரைப்பட விழாக்களிலும் திரையிடப்பட்டுள்ளது. இது ஒரு நேராக கூறப்படும் கதை.

ஈரானின் பெண்கள் சந்திக்கும் துயரங்களைப் பற்றி பல படங்கள் வெளிவந்துள்ளன. Underground உலகமும் பல படங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றுடன் ஒப்பிடும் பொழுது இப்படம் ஒருபடி பின்னாலேயே உள்ளது. ஆனால் ஈரான் அரசு எடுக்கும் நடவடிக்கைகள் இப்படத்தை பலரை பார்க்கச் செய்வதுடன், மீண்டும் ஒரு தடவை ஈரானின் காட்டுமிராண்டித் தனமான சட்டங்களுக்கு எதிரான குரலை வலுப்படுத்தியுள்ளது.

இறுதியாக கைது செய்யப்பட்ட நடிகை தனது முக நூலில் எழுதிய வாசகம் இது. இது அவரது வலியை வெளிப்படுத்தியுள்ளது. ‘சுதந்திரத்துக்கு சுவர்கள் இல்லை. இந்த கனவியல் கோட்பாட்டாளர்கள் இக்கருத்தை நிராகரிப்பார்கள். ஞாபகத்தில் வைத்திருங்கள் மெய்க்கோள் என்பது சுதந்திரம், உண்மை மற்றும் மற்றவர்களின் கருத்துக்கு மதிப்பளிப்பதாகும். அதன் பின்னர் நீங்கள் என்ன எந்த இயலையும் கூறலாம்’.

Sales Reps. Welcome
For All your Real Estate & Investments Needs!
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
* INDEPENDENTLY OWNED AND OPERATED
HomeLife/GTA Realty Inc. Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto - 416.321.6969
145 Traders Blvd # 29, Mississauga -905.712.2666



Traffic Tickets
Criminal Matters
Summary
வாகன விபத்து
Motor Vehicle Accidents
SKT PARALEGAL SERVICE
Kalakalappu Theesan
Member of Law Society of Upper Canada
S.K. Theesan
எஸ்.கே.தீசன்
416-803-5296
sktheesan@gmail.com







# Buy One Get One 50% off*

October 3 - 31, 2011

Dulux Diamond and Dulux Rolls on Pink Ceiling Paint

## வாடிக்கையாளர் அனைவருக்கும் இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

*Offer cannot be combined with any other offer or promotion. Off the regular retail price of 3.0L-3.78L Dulux Diamond and Dulux Rolls on Pink Ceiling paint products of equal or lesser value. All products may not be available at all locations. Latex paints only. All sheens included. At participating locations only.

dulux.ca

**Dulux Paints**
2094 Lawrence Ave. East,
Scarborough, ON - M1R 2Z6
Phone:- 416-759 2261 / 416-759 2262

A BRAND FROM
**AkzoNobel**

# மகாஜனாவின் முத்தமிழ் விழா

மகாஜனாக் கல்லூரி முத்தமிழ் விழா செப்ரெம்பர் 24, 2011 Winston Churchill Collegiate Institute கலையரங்கில் நடைபெற்றது. விழா சரியாக மாலை 5.40 மணிக்கு நிகழ்ச்சி நிரலில் தெரிவித்த படியே மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமானது. அதை தொடர்ந்து தேசியகீதம், கல்லூரிக்கீதம், அமைதி வணக்கம் என்பன நடைபெற்றன. இவ்விழாவின் நிகழ்ச்சி தொகுப்பாளர்களாக கதி செல்வக்குமாரும், சுஜிதா அஜந்தனும் செயற்பட்டார்கள். கலை நிகழ்ச்சிகளில் முதலாவதாக 'இசையில் இளம் விரல்கள்' என்ற நிகழ்ச்சியில் ஏழு பேர் வீணை, வயலின், மிருதங்கம், தவில் வாத்தியங்களை வாசித்தார்கள். இந்த நிகழ்ச்சியை யசோதா அரவிந்தன் தயாரித்து அளித்தார்.



இவ்விழாவிற்கு கௌரவ விருந்தினராக கனடிய நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபைஈசன், சிறப்பு விருந்தினராக மகாஜனாக் கல்லூரி கல்வி அபிவிருத்தி நிறுவன ஒருங்கமைப்பாளர் சிவஞானசுந்தரம் ஜெயவர்மன் இலங்கையில் இருந்தும் வந்திருந்தார்கள். வரவேற்புரை நிகழ்த்திய கந்தப்பு சிவதாசன் இந்நிகழ்வுக்கு வந்திருந்த எல்லோரையும் வரவேற்றார்.

கலை நிகழ்ச்சிகளின் இடையே மகாஜனாக் கல்லூரி நடத்திய கணித மற்றும் பொது அறிவு போட்டிகளில் பங்குபற்றி முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இப்போட்டிகள் முதலாம் தரத்தில் இருந்து பன்னிரண்டாம் தரம் வரை ரொறொன்ரோ, மொன்றியல், கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நடத்தப்பட்டன. இவ்விழாவில் ரொறொன்ரோவிலும் கனடா முழுவதிலும் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

இரண்டாவது கலை நிகழ்வாக சியாமா தயாளன் உருவாக்கி பாரதி இந்திய சாஸ்திரிய நடனக் கல்லூரியின் தயாரிப்பில் வழங்கப்பட்ட 'எதுவும் கடந்து போகும்' என்னும் நடன நிகழ்வு இடம்பெற்றது. இதில் காதலில் தோல்வியுற்ற பெண் எவ்வாறு தனது காதல் தோல்வி, துக்க உணர்வுகளில் இருந்து மீள்கிறார் என்பது நடித்துக் காட்டப்பட்டது. தலைவர் உரையில் மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடாவின் 2011 இற்கான நிர்வாக சபைத்தலைவர் நாகமுத்து சாந்திநாதன் இவ்வருடம் தாங்கள் செய்த பணிகளை எடுத்து கூறினார்.

அடுத்து சிறப்பு விருந்தினர் உரை நிகழ்த்திய சிவஞானசுந்தரம் ஜெயவர்மன் மகாஜனாக் கல்லூரி கல்வி அபிவிருத்தி நிறுவனம் அமைக்கப்பட்ட தேவையையும் அது இதுவரை செய்த பணிகளையும் கூறினார். மகாஜனாக் கல்லூரி நாட்டு நிலமையால் அம்பனையை விட்டு இடம்பெயர்ந்ததையும், பின்னர் மீண்டும் தனது சொந்த இடத்திற்கு வரும்போது கட்டிடங்கள் உபயோகிக்க கூடியநிலையில் இருக்கவில்லை என்பதையும் சுட்டிக்காட்டிய ஜெயவர்மன் அக்கட்டிடங்களை மீள புனரமைக்கவே மகாஜனாக் கல்லூரி கல்வி அபிவிருத்தி நிறுவனம் அமைக்கப்பட்டது என்றார். இந்த நிறுவனம் மகாஜனாக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவிற்கு முன்னர் எல்லாக் கட்டிடங்களையும் மீள புனரமைத்து விட்டது என்றார். இதற்கு வெளிநாடுகளில் வாழும் மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர்களும் பழைய மாணவர் சங்கங்களும் உதவியதே முக்கிய காரணம் என்றார்.

மூன்றாவது கலை நிகழ்வாக வைரமுத்து சொர்ணலிங்கம் எழுதி நாகமுத்து சாந்திநாதன் நெறியாள்கையில் உருவான 'துளிரும் சருகுகள்' நாடகம் இடம்பெற்றது. இதில் இரு வயது முதிர்ந்தவர்களை அவர்களது பிள்ளைகளும் உறவினர்களும் எவ்வாறு மதிக்காமல் துன்புறுத்துகிறார்கள் என்பது நன்றாக விபரிக்கப்பட்டது. இருவருமே தமது உயிரை மாய்க்கும் நிலைக்கு சென்று பின்னர் முதியோர் இல்லத்தில் வாழ்வை தொடங்குவதும் எடுத்து சொல்லப்பட்டது.

அடுத்து சிறப்புரை நிகழ்த்திய மகாஜனாக் கல்லூரியின் முன்னாள் அதிபர் பொன். கனகசபாபதி அவர்கள் தான் 50 வருடங்களாக பெருமைப்படுகிற மகாஜனாக் கல்லூரியையும் 5 மாதங்களாக பெருமைப்படுகிற ராதிகா சிற்சபைஈசன்



அருந்ததி ஞா.

தொடர்ச்சி 33ஆம் பக்கம்


# தமிழ் சினிமா ஈயடிச்சான் காப்பி

விண்ணைத் தாண்டி வருவாயா (500 days of summer), கஜினி (Memento), பச்சைக்கிளி முத்துச்சரம் (Derailed), தெனாலி (What about bob), அவ்வைசண்முகி (Mrs.doubtfire), பஞ்சதந்திரம் (very bad things), அன்பே சிவம் (planes, trains and automobiles), மகாநதி (Oh my god, thats my doughter), காதல்கொண்டேன் (Fear), எந்திரன் (Bicetennial man)... என்ன பட்டியல் இது? இப்படியே சென்றுகொண்டிருக்கிறது என மலைக்கிறீர்களா! சொல்கிறேன்...




தமிழ் சினிமாவை உலக சினிமா தரத்துக்கு கொண்டு செல்லும் முயற்சி எனப் பெருமையாகச் சொல்லப்பட்ட மேலே குறிப்பிட்ட தமிழ்ப் படங்கள், எந்தெந்த வெளிநாட்டுப் படங்களில் இருந்து காப்பியடிக்கப்பட்டன என்ற பட்டியல் இது. அடைப்புக் குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ள வெளிநாட்டுப் படங்களில் அப்பட்டமான காப்பிகள் அடைப்புக்குறிக்கு வெளியே இருக்கும் தமிழ்ப் படங்கள். இப்படி பல நூறு தமிழ்ப் படங்களைச் சொல்லலாம். உலகில் எல்லாமே இன்ஸ்பிரேஷன்தான் என்கிறார்கள் கோலிவுட்காரர்கள். ஆனால், வெளிநாட்டுப் படங்களைப் பார்த்து அவர்கள் அடித்துள்ள காப்பியைப் பார்த்தால் அப்படித் தோன்றவில்லை. அதுவும் சமீப படமான வந்தான் வென்றான் போஸ்டரையும் கோயிங் ஃபார் டிஸ்டன்ஸ் போஸ்டரையும் பார்த்தால் இப்படியெல்லாமுமா காப்பி அடிப்பார்கள் என மலைத்துப் போய்விடுவீர்கள்.

எம்.ஜி.ஆர். காலம் தொடங்கி காப்பி தமிழ் சினிமாவில் இருக்கிறது. என்றாலும் கே.பாலசந்தர், பாலுமகேந்திரா, கமலஹாசன், கௌதமமேனன் முதல் புதிய தலைமுறை இயக்குநர் மிஷ்கின் வரைக்கும், தமிழ் சினிமாவை உலக சினிமா தரத்துக்கு உய்விக்க வந்த கலைஞர்கள் என்று




தங்களை தாங்களே அழைத்துக்கொள்வதுதான் தாங்க முடியாதது. விளம்பர வருவாய் பாதிக்கப்படும் என்பதால், தமிழகத்தில் இருந்து வரும் பத்திரிகைகள் இவற்றைக் கண்டும் காணாதது போல் நடிக்கின்றன. அதுவும் புதிய தலைமுறை இயக்குநரான விஜயின் மதராஸப் பட்டிணம், தெய்வத் திருமகள் இரண்டு படங்களையும் பற்றி பாராட்டி, மலைத்து எழுதாத பத்திரிகைகளே இல்லை எனலாம். இத்தனைக்கும் இந்த இரண்டு படங்களும் முறையே டைட்டானிக், அங்கிள் சாம் ஆகியவற்றின் காப்பி என்பது ஊரறிந்த ரகசியம். தெய்வத்திருமகள் படத்தைப் பார்த்த அங்கிள் சாம் அணியினர் வழக்கு தொடர்ந்ததாகவும், ஒரு பெரிய தொகையைக் கொடுத்து பிரச்சினை பெரிதாகாமல் பார்த்துக்கொண்டதாகவும் கோலிவுட்டில் ஒரு தகவல் கிசுகிசுக்கப்படுகிறது.

இவர்கள் எந்தெந்தப் படங்களில் இருந்து காப்பி அடிக்கிறார்களோ அந்தப் படங்களின் டிவிடிகள் அனைத்துமே இப்பொழுது சென்னை, மதுரை, கோவை உட்பட தமிழகத்தின் அனைத்து ஊர்களிலும் கிடைக்கின்றன. இதனால், எது எது எவற்றின் காப்பி என்பதை கடைக்கோடி ரசிகனுக்கும் தெரிந்துவிடுகிறது. ஆனாலும், காப்பி என்பதை தமிழ் சினிமாக்காரர்கள் ஏற்றுக்கொள்ளாததுதான் விசித்திரம். இயக்குநர் மிஸ்கினின் நந்தலாலா, ஜப்பானிய படமான கிகிஜிரோவின் அப்பட்டமான காப்பி என எல்லோரும் சொன்னபோது, மிஸ்கின் அது தனது நண்பன் ஒருவனின் கதை என்றதுடன், "நான் கிகிஜிரோவை பார்த்ததே இல்லை" என்றார். அத்துடன் நிற்காமல் எழுத்தாளர் சாருநிவேதிதா போன்றவர்கள் மூலம் 'தமிழின் முதல் உலக சினிமா' என புகழ் வேறு சேர்த்துக்கொண்டார். மிஷ்கினின் கலை சார்ந்த இந்த உரிமை கோரல்களும் சக கேளிக்கையாளர்களின் புளகாங்கிதங்களும் முழுநேர இலக்கியவாதிகளின் புல்லரிப்புகளும் சேர்ந்து நந்தலாலாவை அதிகமான விமர்சனத்துக்கு உள்ளாக்கியது.

ஸ்வீட் எடு, கொண்டாடு... என்பதுபோல் தமிழ் சினிமாக்காரர்களின் வெற்றிச் சூத்திரம் மிகச் சுலபமானது. வெற்றிபெற்ற வெளிநாட்டுப் படங்களின் கதையை எடு அதனுடன் கொஞ்சம் தமிழ் கலாசார விஷயங்களைச் சேர். ஒரு அழகிய இளம் கதாநாயகியை தேர்ந்தெடு ஆறு பாடல்களையும் சில சண்டைக்காட்சிகளையும் சேர்... இவ்வளவுதான். இதை சரியாகச் செய்துவிட்டால், அந்த தமிழ்ப்படம் வெற்றிப்படம்!

இந்த வருடம் இந்தியாவில் இருந்து ஆஸ்கார் விருது தொடர்ச்சி 33ஆம் பக்கம்

## சரண் ஆனந் அவர்கள் விசேட பேச்சாளராக கலந்துகொள்ளும் *Words of Peace* பொது நிகழ்ச்சி

சரண் ஆனந் அவர்கள் தனது எண்பதாவது வயதிலும் சளைக்காது உலகெங்கும் பயணம் செய்து உள்ளத்தில் உள்ள அமைதிபற்றி உரையாற்றி வரும் ஒருவர்.

இடம்: *Toronto Memorial Hall, North York Civic Centre, 5110 Yonge St.*

காலம்: *October 16, 2011.* நேரம்: *7.00 pm*

அவரது உரை ஆங்கிலத்திலே நடைபெறும். தொலைக்கட்சியிலே ***Words of Peace*** நிழ்ச்சியை பார்பவர்களும், மற்றவர்களும், இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சரண் ஆனந் அவர்களது உள் அமைதி பற்றிய, அவரது மிகவும் அருமையான சொற்பொழிவை கேட்டு மகிழலாம். இந்நிகழ்ச்சி முற்றிலும் இலவசமானதாகும்.

***Words of Peace*** TV நிகழ்ச்சியை, சனிக்கிழமைகளில் காலை பதினொரு மணிக்கு CTV யில் பார்த்து மகிழலாம்.

நிகழ்ச்சி பற்றிய விபரங்கள். http://www.toronto.ca/city_facilities/memorial_hall_about.htm

மெமோறியல் மண்டபத்திற்கு North York City Centre station ல் இருந்து நேரே செல்லப் பாதை உண்டு. காரிலே செல்வதென்றால் இம்மண்டபம் North of Sheppard on the West Side of Yonge Street North இல் உள்ளது.

## விஷேட ஆங்கில வகுப்பு

ஆங்கிலம் நன்றாக பேச,
வாசிக்க எழுத விரும்புகிறீர்களா?
உங்களிற்கு வசதியான நேரத்தில்
நீங்கள் கற்கலாம்.
இலகுவாகவும், விரைவாகவும்
கற்கலாம்.

**தொடர்புகளுக்கு: 416.269.5942**

## தென் ஆசிய குடிவரவாளர்கள்

றொறொன்ரோ பெரும்பாகத்தில்
2006 இல் இருந்த தெற்காசியர் 684,000
2006இல் இருந்த சீன சமூகத்தவர் 480,000

எதிர்பார்ப்பு:
2031 இல் தெற்காசியர் 2.1 மில்லியன்
2031 இல் சீன சமூகத்தவர் 1.1 மில்லியன்

## அறிந்திருக்க!

- **ஒரு யுகம்** என்பது 43,20,000 ஆண்டுகளாகும்.
- **சூரியனுடைய** ஒளியில் முப்பதினாயிரத்தில் ஒரு பகுதிதான் சந்திரனின் ஒளி.
- **வெட்டுக்கிளி** நாள் கணக்கில் பறக்கக்கூடியது.
- அந்தமான் 6 தீவுகளையும், நிக்கோபர் 19 தீவுகளையும் கொண்டது.
- மின்மினிப் பூச்சிகளில் அதிக ஒளி விடுவது பெண் பூச்சிகள் மட்டுமே.
- செயற்கை கண்களை அதிகம் தயாரிக்கும் நாடு ரஷ்யா.
- நாய்களுக்கு வியர்ப்பது இல்லை.
- கழுகு எதையும் கொல்லாது. இறந்ததையே தின்னும்.




ஓம் முத்துமாரி அம்மன் ஜோதிடம்
பண்டித் ஹரிதாஸ் சாஸ்திரிகள்







இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள
பிரபல ஜோதிட வல்லுனர்
பண்டித் ஹரிதாஸ் சாஸ்திரிகள்
மலேசியா, சிங்கப்பூர், மொரிசியஸ், சுவிஸ், நியுசிலாந்து, இலங்கை, அமெரிக்கா, லண்டன் ஆகிய இடங்களுக்குச் சென்று தற்போது முதல் முறையாக கனடா வந்துள்ளார்.

இவர் கைரேகை, சாதகம் ஆகியவை கொண்டு மிகத் துல்லியமாக நடந்தவை நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார்.

துல்லியமாகக் கணித்து பார்க்கப்படும் விடயங்கள்கைரேகை, நாமநட்சத்திரம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், இலட்சுமி வசீகரம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ்திரம், வதிவிடப் பிரச்சனைகள் வெளிநாட்டுப் பயணங்கள், எதிரிகள் கண்திருஸ்டி கஸ்டநஸ்டங்கள், நீதிமன்ற வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண்பிள்ளைகள் பெற்றார் பிரச்சனைகள் ஒன்றுகூடுதல் இவற்றையெல்லாம் அறிந்துகொள்ள ஒருமுறை என்னை சந்தியுங்கள்.

**Tel: 647-707-8671 / 416-829-4004**

5215 Finch Ave., East, Unit # 152 Scarborough, Ontario M1S 0C2 (GTA Square Mall )

Open 7 Days Time: 10:00 Am To 8:00 Pm He can tell you Tamil, Hindi,English, Telugu & Other indian languages

# BASEMENT RENT

**MORNINGSIDE & MILITARY TRAIL**
3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to HWY 401, high school, TTC, college. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.724.5171 / 416.561.8024 / 416.669.2457

**MIDLAND & FINCH**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. Parking, cable, washer, dryer. Avail. immediately. Close to stores, bus, school, etc.
416.293.8521 / 647.938.8521

**MARKHAM & SHEPPARD**
சந்திப்புக்கு அருகில் 2 bedroom basement வாடகைக்கு உண்டு. Sep. entrance, newly renovated washroom, internet & Cable - Tamil TV. Very Close to TTC, school, shopping, கோயில்.
தொடர்புகளுக்கு: 416.931.9561

**MCCOWAN & ELLESMERE**
2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking, cable & laundry. Close to TTC, school & mall. Avail. November 01, 2011.
416.439.4561/416.616.2524

**MARKHAM & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.801.9144

**BELLAMY & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. November 01, 2011.
தொடர்புகளுக்கு: 647.920.2185

**KENNEDY & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to bus, school, shopping, temple, bank & restaurant. No smoking & No pets. Avail. immediately. அறைகள் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 647.668.4055

**BRIMLEY & STEELES**
1 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking & laundry. Close to doctors office, mall, tamil stores & school. Avail. immediately.
416.301.1387/905.604.0814

**MCCOWAN & DENISON**
2 Bedroom ($950), மற்றும் 1 Bedroom ($800) walk-out bsmt வாடகைக்கு உண்டு. Internet, cable, laundry என்பன உள்ளன. Close to TTC, mall, etc.
தொடர்புகளுக்கு: 416.871.3414

**MCCOWAN & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Parking, cable. Close to bus, school, shopping, etc. Ladies or couple விரும்பத்தக்கது. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.837.0653

**MORNINGSIDE & SEWELLS**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc.
தொடர்புகளுக்கு: 416.551.8379

**WARDEN & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.970.7120

**MCCOWAN & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school, bank. Avail. immediately
தொடர்புகளுக்கு: 416.523.1312

**NEILSON & FINCH**
1 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.832.6457

**MARKHAM & LAWRENCE**
1 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.801.4681

**WARDEN & HWY 401**
2 Bedroom bsmt for rent. Sept. entrance. Parking, laundry. Close to TTC, mall. Avail. immediately. Family preferred.
தொடர்புகளுக்கு: 416.953.8087

**MIDDLEFIELD & FINCH**
2 or 3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to TTC , GTA Square Mall, temple. Avail. immediately. Rooms தனித்தனியாகவும் கொடுக்கப்படும். பெண்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.297.9742

**MCCOWAN & 14TH AVE**
2 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to YRT, school, mall. Avail. Anytime.
416.669.8711 / 905.201.8350

**KENNEDY & FINCH**
2 Bedroom bsmt for rent. Parking, laundry, cable. Close to TTC, school, stores, temple. Avail. November 01, 2011
தொடர்புகளுக்கு: 416.291.2796

**NEILSON & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, mall, school. Avail. Anytime.
416.332.3624 / 647.309.7790

**BRIMLEY & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. November 01, 2011.
தொடர்புகளுக்கு: 416.261.2107

**MARKHAM & HIGHGLEN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, TTC, YRT, school, elementary school, mall. Avail. November 01, 2011.
905.471.7667 / 647.338.9831

**PHARMACY & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.759.3597

**BIRCHMOUNT & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.450.1816

**9TH LINE & 14TH AVE.**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to YRT, bank, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.560.4152

**NEILSON & NIGHTSTAR**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.430.0999

**MORNINGSIDE & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, school. Avail. Anytime. 1 or 2 person or working people preferred. தொடர்புகளுக்கு: 416.841.2232

**BELLAMY & LAWRENCE**
3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, kitchen. Close to school, TTC, mall. Ladies preferred.Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.285.0849

**MARKHAM & 16TH AVE.**
Newly finished 2 bedroom bsmt for rent. Garage side entrance, 1 parking. Close to school, mall. Avail. immediately.
905.209.1421 / 647.405.1962

**9th LINE & STEELES**
2 Bedroom bsmt for rent. Cable. Close to school & all facilities. Avail. immediately.
905.554.9353 / 416.875.3611

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, 2 washroom, parking, laundry. Close to TTC, school, HWY 401. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.305.7317

**MEADOWVALE & KINGSTON**
1 Bedroom bsmt for rent. Parking, laundry, full washroom. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.344.0585

**NEILSON & FINCH**
Newly renovated 2 bedroom new bsmt for rent. Sep. entrance. Close to school, TTC, malvern mall. All bills inclusive. Avail. immediately. No smoking.
தொடர்புகளுக்கு: 416.843.5982

**MIDLAND & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. Anytime.
416.750.9138 / 647.401.9423

**BIRCHMOUNT & MCNICOLL**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, mall. Avail. immediatelty.
647.783.4850 / 905.294.2674 416.293.6211

**WARDEN & MCNICOLL & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, Bridelwood mall, school. Avail. immediately.
416.494.0850 / 416.315.5648

**SCAR. GOLF CLUB & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to all facilities. Avail. immediately.
416.569.7307 / 416.289.8728

**BRIMLEY & DENISON**
2 Bedroom bsmt for rent. Parking, cable, laundry. Close to TTC, mall, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.604.0870

**KENNEDY & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to all facilities. Avail. immediately.
905.944.2420 / 416.459.8204

**MCCOWAN & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.771.8331

**MCCOWAN & STEELES**
1 Bedroom bsmt. for rent. Sep. entrance, parking, cable, laundry. Couple or ladies preferred. Close to TTC, YRT, shopping centre, school, etc. Avail. immediately.
416.903.2437 / 647.986.1437

**MIDDLEFIELD & MCNICOLL**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilitiess. Avail. December 01, 2011.
தொடர்புகளுக்கு: 416.297.9549

**MCCOWAN & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately. 647.706.4922 / 416.522.3314 / 905.554.2496

**WARDEN & SHEPPARD**
ஒரு அறை basement மூன்று நேரச் சாப்பாட்டுடன் வாடகைக்கு உண்டு. எல்லா வசதிகளும் அண்மையில் உண்டு. பெண்கள் அல்லது வயோதிபப் பெண்கள் விரும்பத்தக்கது. Avail. immediately.
416.299.4895 / 416.201.1222

**MARKHAM & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Close to all facilities. Ladies preferred. Low rent. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.471.1986

**MARKHAM & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.896.7740

**MIDDLEFIELD & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, high school. Avail. immediately.
905.471.2987 / 416.666.3971

# SPACE FOR RENT

**BRIMLEY & LAWRENCE**
சந்திப்புக்கு அருகாமையில் மணிக்கூடு திருத்தும் கடை ஒன்றில் சிறிய இடம் வாடகைக்கு உள்ளது.
தொடர்புகளுக்கு: 416.419.5580

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கள் 25, 26

# ROOM RENT

**MORNINGSIDE & LAWRENCE**
Bungalow house இன் மேல்மாடியில் அறை ஒன்று சகல வசதிகளுடனும் வாடகைக்கு உள்ளது. Close to U OF T, campus, TTC. Avail. immediately. சாப்பாடு வழங்கப்படும்.
647.344.5044 / 416.312.6827

**PORTU NION & SHEPPARD**
**CONDO. ROOM FOR RENT.**
(SCARBOROUGH). Cable, internet. etc. Close to all amenities. Rent $375
தொடர்புகளுக்கு: 416.262.9780

**BIRCHMOUNT & EGLINTON**
1 Bedroom for rent in a condo. Apt. Close to Canada கந்தசாமி கோவில், Warden Subway, Kennedy Subway. Fully furnished. Avail. immediately. Working people preferred.
No smoking.
தொடர்புகளுக்கு: 416.907.6712

**MIDLAND & ST. CLAIR**
1 Bedroom for rent. Sep. washroom, kitchen, parking. Close to Warden Subway, Kennedy Subway, Go train. Students or couples preferred. Avail. immediately.
416.899.6300 / 647.982.7668 / 647.345.4597

**KENNEDY & ELLESMERE**
இரு முதியோர் (Husband & Wife) வசிக்கும் வீடொன்றில் ஒரு அறை உடனடியாக வாடகைக்கு உண்டு. All utilities including. Laundry avail. Close to Highland Farm, TTC, school, Hopper hut. வேலை பார்க்கும் அல்லது படிக்கும் மாணவிகள் / பெண்கள் மட்டும் விரும்பத்தக்கது.
416.291.6667 / 416.895.8111

**BIRCHMOUNT & MCNICOLL**
Rooms for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.293.6211

**WARDEN & ELLESMERE**
1 Bedroom for rent. Sep. entrance. Parking & cable. Close to Parkway Mall, school, TTC 24 hrs., Plaza. Available anytime.
தொடர்புகளுக்கு: 416.294.4631

**WARDEN & FINCH**
ஒரு அறை வாடகைக்கு உண்டு. Washroom, laundry, cable, parking avail. Close to TTC, shopping, etc. Avail. immediately
தொடர்புகளுக்கு: 416.495.9775

**MCCOWAN & LAWRENCE**
3 bedroom apt. for rent. Washroom, kitchen. Sep. entrance. Close to all facilities.
தொடர்புகளுக்கு: 647.855.8829

**MIDLAND & EGLINTON**
1 Bedroom for rent. Sep. entrance, share washroom, laundry, parking. Avail. immediately. Single person preferred.
தொடர்புகளுக்கு: 416.267.3071

**MIDLAND & EGLINTON**
1 Room for rent in 3 bedroom bungalow house. Close to all facilities. Ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.906.5013

**KENNEDY & LAWRENCE**
Rooms available in main floor. Bsmt Apt. available. Close to subway, bus, stores...
தொடர்புகளுக்கு: 416.830.5560

# ROOM RENT

**MARKHAM & HWY 401**
3 அறைகள் கொண்ட அடுக்கு மாடியில் 2 அறைகள் வாடகைக்கு உண்டு. Kitchen, Living, dinning hall, laundry. Close to TTC, shopping, school, college, university, HWY 401. Avail. November 05, 2011.
Long Term / Short Term / Temporary rental also available
தொடர்புகளுக்கு: 416.420.1309

**BERRY & HWY 7**
**MISSISSAUGA**
1 Bedroom in condo. for rent. Close to all facilities.
**MARKHAM & LAWRENCE**
1 Bedroom in apt. for rent.
Close to all facilities. Ladies preferred
தொடர்புகளுக்கு: 647.522.7599

**MARKHAM & SHEPPARD**
சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance. kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall...
416.335.5242 /416.820.1999

**LAWRENCE & PHARMACY**
**2** நேரச் சாப்பாட்டுடன் Room வாடகைக்கு உண்டு. 4 Bedroom bsmt இல் சகல வசதிகளுடன் உண்டு. குறைந்த செலவில் TVI, Sun TV, Vijay TV, free Internet தேவையெனில் ஒழுங்கு செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 416.288.0303

**NEILSON & FINCH**
**MORNINGSIDE & FINCH**
Rooms for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
647.351.0422 / 416.825.9717

**KENNEDY & FINCH**
1 Room for rent. Close to all facilities. வயது போனவர்கள் விரும்பத்தக்கது.
Avail. immediately.
647.857.7888 / 647.865.1922
(Call after 6.00pm)

**MORRISH & ELLESMERE**
1 Large bedroom for rent. Walk-in closet, washroom, parking. Close to UFT Scarborough, CHC Hospital, school. Ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.291.1752

**MCLEVIN & TAPSCOTT**
1 Large bedroom + patio for rent. Parking. Close to TTC, mall. Avail. immediately.
416.492.2723 / 647.209.3651

**MORNINGSIDE & ELLESMERE**
1 Bedroom for rent. Sep. washroom, kitchen. Close to all facilities. Avail. Anytime. Student or working ladies preferred.
416.286.2932 / 416.879.3650

# CAR FOR SALE

Honda Accord EXR. with emession. Price $750.
தொடர்புகளுக்கு: 416.566.4796

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
*www.vlambaram.com*

# HOUSE FOR RENT

**MCCOWAN & SHEPPARD**
3 Bedroom house for rent. Close to all facilities. Avail. November 01, 2011. 1 Bedroom walk-out bsmt also available.
தொடர்புகளுக்கு: 416.554.7114

**MARKHAM & LAWRENCE**
3 Bedroom house for rent. Close t TTC, mall, school. Avail. Anytime.
416.439.1507 / 647.774.5667

**MORNINGSIDE & FINCH**
2 Bedroom upper level house for rent.
8 Hours work avail. Close to all facilities.
தொடர்புகளுக்கு: 647.857.8548

# CONDO. FOR RENT

**MIDDLEFIELD & FINCH**
2 Bedroom condo for rent. Close to all facilities. Avail. Anytime
தொடர்புகளுக்கு: 416.412.1580

**MCCOWAN & ELLESMERE**
1 Bedroom + den condo. for rent. 1 Parking. Grate view. All new appliances. Swimming pool, recreation room. Avail. Anytime.
Rent $1200 & All inclusive.
தொடர்புகளுக்கு: 416.315.9397

**MCCOWAN & ELLESMERE**
**SCARBOROUGH TOWN CENTER**
1 Bedroom + den for rent. Close to all facilities. Rent $1200.
2 Bedroom for rent. Close to all facilities. Rent $1375.
தொடர்புகளுக்கு: 647.829.9456

**KENNEDY & HWY 401**
Brand new never lived 1+ den condo. for lease or sale. $1100 for lease.
தொடர்புகளுக்கு: 416.315.9397

# SAREE BLOUSE

**தையல் தேவைகளுக்கு**
சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் பின்னியும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு:905.492.0259

# JOB JOB JOB

**A-Z DRIVERS WANTED**
Minimum 3 years experience. Clean driving record. Regular trip Montreal to Toronto.
Charles: 905.961.4872

## COOK WANTED

**KING HENRY'S ARMS**
Experience line and preparation cooks and dishwasher.
Contact: ***647.287.7790*** after 6:00pm
www.kinghenryarms.com

***Pro Personnel Hiring AZ City Drivers***
Must have 2 years of driving experience.
Local Work, Paid weekly.
905.676.2778 / 416.892.9291

**MIDLAND & LAWRENCE**
Flooring stone experience sale person in scarborough.
தொடர்புகளுக்கு: 416.830.3932

***Delivery driver wanted***
***Downtown***
***416.497.7660 / 647.771.6237***

Kitchen, cabinet, bsmt renovation, deck, car port, painting, city approval plan for car port, carpentry works, flooring.
இவை அனைத்துக்கும்
தொடர்புகளுக்கு: 416.802.6067

# FOR SALE

Leather sofa set (3 Pieces) & front end washer & dryer for sale.
Call shan: 416.450.9181

மேலும் பக்கங்கள் 24, 26

# BASEMENT FOR RENT

**MARKHAM & LAWRENCE**
2 Bedroom with living room bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to mall, school, TTC. Excellent condition. Avail. immediately.
416.438.2552 / 416.629.5524

# ROOM FOR RENT

**WARDEN & FINCH**
சந்திப்புக்கு அருகாமையில் உள்ள Condo. வில் சகல வசதிகளுடனும் கூடிய ஒரு அறை தளபாடங்களுடன் (Fully furnished) வாடகைக்கு உண்டு. மாணவர் அல்லது தனி நபர் விரும்பத்தக்கது. மாலை 4.00 மணிக்கு பின்
தொடர்பு கொள்ளவும்: 416.509.6780




# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

**BY. Mr. S.F. Xavier (Teacher) -TEL: 647.340.9490 / 647.831.0070**

## Answers — TUTORIAL 286

(1) X = 20




(2) They need 10 helpers. All ten will work for 30 hours. 10 houres needed to make large 20cakes and 20 hours needed to make 700 small cakes.

(3) Let $f(x) = x^5 + y^5$ Since $f(y) = (-y)^5 + y^5$
$= -y^5 + g^5$ $= 0$
Then (x + y) is a factor of f(x).
By dividing $x^5 + y^5 = (x + y)(x^4 + x^3 y + x^2 y - xy^3 + y^4)$

(4) Let the roots of $4x^2 - 9x - 2 = 0$ be represented by $x_1$ and $x_2$
$x_1 + x_2 = 9/4$ and $x_1 x_2 = -½$
The roots of the required equations are $x_1 2$ and $x_2^2$
For the new equation sum of the roots is $x_1^2 + x_2^2$
But $(x_1 + x_2)^2 = x_1^2 + x_2^2 + 2x_1 x_2$
$(9/4)^2 = (x_1^2 + x_2^2) + 2(-½)$ $x_1^2 + x_2^2 = 81/16 + 1 = 97/16$
For the new equation the product of the roots is $x_1^2 x_2^2 = (x_1 x_2)^2 = ½^2 = 1/4$

So the requared equation is $x^2 - (x_1^2 + x_2^2) x + x_1 x_2 = 0$
$x^2 - 97/16x + 1/4 = 0$ $16x^2 - 97x + 4 = 0$

(5) P divide AB in the rartio 1:2 OP = 2/3 OA + 1/3 OB
=2/3 (3, 6, 8) + 1/3 (6, 0, -1) = (4, 4, 5)
Coordinates of p are (4, 4, 5) mid point of PB is Q = (5, 2, 2).
Point of intersections (4, 4, 5) and 5, 2, 2.

### Tutorial 287 Questions

(1) Decide whether each function is even odd or neither,
(a) $f(x) = \text{Sin } x + x$ (b) $f(x) = 2x^3 + x$
(c) $f(x) = 1/x - x$ (d) $f(x) = |2x + 3|$ (For Gr. 12)

(2) If $F(x) = kx^3 - 1$ and $f^{-1}(15) = 2$, find the value of K. (For Gr. 12)

(3) Determine the quadratic function $f(x) = ax^2 + bx + c$ whose graph passes through the point (2, 19) and that has a horizontal tangent at (-1, -8) (For Gr. 12)

(4) Given $f(x) = \sqrt{x}$ and $g(x) = x^2 - 1$, find the following
(a) f (g (-4) (b) f (g (x) (c) g (f (x) (Gr. 11 & 12)

(5) If $f(x) = 2x - 7$ and $g(x) = 5 - 2x$ (a) Determine $f \circ f^{-1}$ and $f^{-1}$ of
(b) Show that $(f \circ g)^{-1} = g^{-1}$ of $^{-1}$ (For Gr. 11 &12)

**MATH, SCIENCE & ENGLISH TUITION**

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8. Classes available at **Scarborough & Stouffville**
**Contact: 647.340.9490 / 647.831.0363**

**A-Z DRIVERS NEEDED**



For Woodstock, On Based Company
Local & Highway Drivers Required
Border Crossings Need. Flatbed,
Experience Required.
**Telephone & Fax - 1.519.421.2545**

**HOUSE & LAND SALE**
**JAFFNA**


Location: 2nd Cross Street, Jaffna
2½ பரப்பு காணி கிணற்றுடன் வீடு விற்பனைக்கு உண்டு. 2 ½ Parappu Land including the house and the well. 5 Min. Walk to Subramaniyam Park, Courts, Jaffna Public Library, Central College, Vembadi Girls High School etc. 15 Min. Walk to Jaffa Hospital , Town.
Closer to A9 (Kandy - Jaffna) Highway
**Contact : 416-580-0606**

**MACHINES FOR SALE**

Truck Mounted & Portable Duct Cleaning
Successful Business (16 years) comes with contacts Truck, Truck Mounted units, portable units and all equipment. Everything in A-1 Condition. Training to be provided.
**Contact: 416.910.3008**

**YOGA - MEDITATION CLASSESS**
**யோகா, தியான வகுப்பு**

**Scarborough** இல் யோகா தியான வகுப்பு பட்டறைகளுடன் நடைபெறுகின்றது. ஆர்வமுடையவர்கள்
தொடர்புகொள்ளவும்: **416.273.2200**



Jack இன் உயிரை எடுக்க அடுத்த 7 வருடங்களின் பின் யமன் மீண்டும் பூச்சியாக வந்தபொழுது Jack அவரை பணப்பையில் மாட்டிவிட்டார். யமன் மீண்டும் 7 வருடங்கள் செழிப்பாக வாழ Jack இற்கு வரம் அளித்து விடுபட்டுச் சென்றார். இதன் பின்னர் யமன் பயத்தில் Jack இடம் வரவில்லை. Jack வயது போய் இறந்து விட்டார். Jack கடைசியில் இறந்து நரகத்திற்கு சென்றபோது யமன் பயத்தில் அவரை, நரகத்தைவிட்டு போகும்படி சொன்னார். அதனால் Jack மேல் உலகிற்கு சென்றார். வழிகாட்டியாக அவர் தான் உண்ணும் Turnip (இப்பொழுது பூசணி) இல் செய்த விளக்கை எடுத்துச் சென்றார். அவர் போகும் வழியில் இருக்கும் பேய்கள் எல்லாம் அவரை கண்டு விலகின.

இதனால் இப்போது மக்கள் பேய்களை விரட்ட இந்த விளக்குகளை (பூசணி) வைப்பார்கள்.

*Happy Halloween*



**ஞா. ஆரணி**
அகவை 13

# இளையோர் ஆக்கம்

விளம்பரம் தனது எழுத்தாளர்களை வருடம் தோறும் தை மாதத்தில் வரும் முதல் சனிக்கிழமை கௌரவிக்கின்றது. கடந்த வைபவத்தில் பல எழுத்தாளர்கள் விளம்பரத்தில் அடுத்த தலைமுறையை எழுதத் தூண்டவேண்டும் என்று கேட்டு கொண்டார்கள். அதற்கு இணங்க விளம்பரத்தின் பொங்கல் இதழ் உடன் **இளையோருக்காக இளையோரால் தமிழில் எழுதப்படும் ஆக்கங்களை பிரசுரிக்கப்படுகின்றது.**

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

## Halloween பண்டிகை

Halloween பண்டிகை, ஒவ்வொரு வருடமும் ஒக்ரோபர் 31ஆம் திகதியில் நடைபெறும். இந்த ஆண்டும் இது ஒரு திங்கள் கிழமையில் வருகிறது. 'All Halllows Eve' என்ற பெயரிலிருந்து 'Halloween' வந்தது. இது முதலில் பேய்கள், பேய் உலகத்தில் இருந்து பூமிக்கு வரும் நாள் என்று கருதப்பட்டது. இப்பொழுது, இந்த நாளில் சிறுவர்கள் பேய் வேடங்கள் அணிந்து வீடுகளுக்கு சென்று இனிப்பை பெறுவார்கள். ஆனால் இப்பவும்




முந்தியும் இது பேய்கள் சம்பந்தப்பட்ட நாளாகவே கொண்டாடப்படுகிறது.
இப்பண்டிகை சிறுவர்களால் பேய்கள், மந்திரக்காரிகள், பிசாசுகள், மிருகங்கள் ஆகிய உருவங்களின் வேடம் அணிந்தும், அவ்வாறான சோடனைகள் செய்தும் கொண்டாடப்படும். வீடுகள் Jack-o-Lanterns, சிலந்திகள், சிலந்திவலைகள், புகை ஆகியவற்றுடன் சோடிக்கப்படும். சில வீடுகள், முழுவதுமாக சோடனையால் சுடலை, பேய் வீடுகள் (Hunted Houses) ஆக மாறிவிடும். சிறுவர்கள் மேற்கூறிய உருவங்களையும், இளவரசி, Super Heroes, Movie Characters ஆகிய உருவங்களையும் எடுப்பார்கள். பின்னர் அவர்கள் அயலவர் வீடுகளுக்கு சென்று 'Trick or Treat' என்று கேட்பார்கள். பெரும்பாலான வீட்டுகாரர்கள் அவர்களுக்கு இனிப்பை கொடுப்பார்கள். இதெல்லாம் மாலை நேரம் தொடக்கம் இரவு வரை நடைபெறும். சில இடங்களிலும் பள்ளியிலும் Halloween நிகழ்ச்சிகள் நடைபெறும். இதில் பேய்வீடும் (Haunted House) உண்டு. அதை பார்த்து அங்கு வரும் ஆட்கள் பயப்படுவார்கள். ஏன் என்றால் அந்த பேய் வீடு பயமுறுத்துவதற்காகவே சோடிக்கப்பட்டிருக்கும்.

Jack-o-lantern என்றால் பேய் உருவம் கீறி வெட்டப்பட்ட பூசணிக்காய். அதனுள் ஒரு விளக்கேற்றப்பட்டு பின்னர் (பேய்களை விரட்ட) வீட்டு வாசலில் வைக்கப்பட்டு இருக்கும். முன்னர் முள்ளங்கியில் (Turnip) செய்யப்பட்ட விளக்குகள் உபயோகிக்கப் பட்டன. Jack-o-lantern க்கு ஏன் 'Jack' என்ற பெயர் உண்டு? அதற்கு பல கதைகள் உண்டு. அதில் ஒன்று பின்வருமாறு.

Jack என்பவருக்கு ஒவ்வொரு கதையிலும் வெவ்வேறு குணங்கள் உண்டு. அதில் நல்லவர், கெட்டவர், கள்வர், சோம்பேறி, கெட்டிக்காரர், வடிவானவர், திறமையானவர் என்று பல குணங்கள் Jack இற்கு உண்டு. 'கஞ்சன் Jack' (Stingy Jack) என்று ஒரு கதையும் உண்டு. நான் கூறும் கதையில் இவர் ஒரு கொல்லன் (Blacksmith).

எனது கதையில் Jack தன்னுடைய உயிரை யமனுக்கு விற்றார். என்னத்திற்கு? 7 வருடம் செல்வச் செழிப்பாக வாழத்தான். ஆனால் அவர் ஏற்கெனவே இறைவனிடம் 3 வரங்கள் பெற்றுள்ளார். யாராவது அவர் வீட்டிலுள்ள மரத்தில் ஏறிவிட்டாலோ, கதிரையில் இருந்தாலோ, பணப்பையிற்குள் போனாலோ Jack அவர்களை விடுதலை செய்யும்வரை அவர்கள் அங்கிருந்து தப்பமுடியாது. யமன் Jack இன் உயிரை எடுக்க ஏழு வருடத்தின் பின் வரும்போது Jack அவரை மரத்தில் ஏறும்படி செய்தார். Jack இன்னும் 7 வருடம் செல்வச் செழிப்பாக வாழ யமன் வரம் தந்தபோது தான் Jack அவரை விடுவித்தார்.

மறுபடியும் 7 வருடத்தின் பின் யமன் வந்த பொழுது Jack அவரை கதிரையில் இருக்க செய்தார். யமன் இன்னும் 7 வருடம் செல்வச்செழிப்பான வாழ்க்கையை தந்தபோதுதான் யமன் மீண்டும் விடுபட்டு சென்றார்.

**மணமகள் தேவை**
உயர்குல சைவவேளாளர் 31 வயதைச் சேர்ந்த ஆண் தாதியாக வேலை செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை. கிறிஸ்தவ பெண் விரும்பத்தக்கது. நகையும் சீதனமும் எதிர்பார்க்கப்படமாட்டாது.
தொடர்புகளுக்கு: 647.855.2148

**மணமகள் தேவை**
யாழ்ப்பாணம் கைதடியில் பிறந்து பின்பு கனடாவில் வாழும் 1981 ஆம் ஆண்டு மேடராசி அச்சுவினி நட்சத்திரம் உடைய செவ்வாய் குற்றமற்ற ஆணுக்கு நல்ல குணமுள்ள மணமகளை பெற்றோர் தேடுகின்றனர்.
514.733.0782 / 514.833.9119

**மணமகள் தேவை**
உயர் சைவ வேளாளர் குலத்தை சேர்ந்த யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கனடாவில் Accounting Style (Centennial College), (Un. Colombo 2 Years Can. High School Finished) படித்து Air Canada வில் வேலை செய்யும் 1974 ஆம் ஆண்டு இடப இராசி ரோகினி நட்சத்திரம் ஆணுக்கு நல்ல படித்த வேலை பார்க்கும் மணமகளை தேடுகிறோம்.
தொடர்புகளுக்கு: 647.705.9494

**மணமகன் தேவை**
உயர் சைவ வேளாளர் குலத்தை சேர்ந்த அச்சுவேலியை பிறப்பிடமாக கனடாவில் Computer Science படித்து வேலை செய்யும் 1984 ம் ஆண்டு தனுசு இராசி மூலம் நட்சத்திரம் உடைய பெண்ணுக்கு நல்ல படித்த வேலை பார்க்கும் மணமகனை தேடுகிறோம்.
தொடர்புகளுக்கு: 647.705.9494

**COMPUTER REPAIR**
+ கணனி திருத்தவேலைகள்
+ கணனி தேவைகள்
+ அடிப்படை கணனி பயிற்சி
+ இலவச ஆலோசனைகள்
Pro-Win Computers
919 Ellesmere Road, Unit - 302
416-879 7489 / 647-340 5568
(Kennedy & Ellesmere)

**TUTORING (WEB DEVELOPMENT)**
**By Experienced Graduate Tutor**
Math 6 - 11, Physics - 11
Data Management - 12
MS Word, MS Excel, MS Access programming with C, Java & Visual Basic. HTMA, ASP, PHP & Mysql. Create web sites cheaply.
தொடர்புகளுக்கு: 416.706.1654

**TUTORING**
**BRIMLEY & LAWRENCE**
For SCHOOL, COLLEGE, UNIVERSITY, CGA, APIX, CPIM, CSCP & SAP STUDENTS.
**Grade 5 - 12**. Math, Science, Chemistry, Biology, Business & Accounting subjects by professionally qualified staff.
தொடர்புகளுக்கு: **416.669.3101**

**அம்மன் மூவிங் & டெலிவெறிஸ்**
Best Price in town.
குப்பை அகற்றுதல்
தொடர்புகளுக்கு: 416.999.9409

**இன்சுவை உணவுகள்**
We can delivery your home. **அப்பம்,** தோசை, கொத்துரொட்டி, குழல்பிட்டு, பிரியாணி மற்றும் Shorteats, cake பலகார வகைகள் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும். Birthday, ஒன்றுகூடுதல், விசேட நிகழ்வுகளுக்கு உங்கள் வீட்டில் வந்து special யாழ்ப்பாண அப்பம், தோசை சுடச்சுட செய்தரப்படும். Monthly சாப்பாடும் செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 647.522.7599

**VAN FOR SALE**
1998 Mini van for sale. Plymouth voyager. 199K - A/C work. Driving condition.
தொடர்புகளுக்கு: 416.274.9726

**CAR FOR SALE**
2005 Honda Odyssey 90k $9900.
2001 Honda CRV $4900
தொடர்புகளுக்கு: 416.575.5055

**All in one place The Sponsorship**
1. ஸ்பொன்ஸர் சம்பந்தமான சகல விண்ணப்பப்படிவங்கள் நிரப்புதல்.
2. இலங்கையில் மெடிகல், பொலிஸ் கிளியரன்ஸ் எடுத்தல்.
3. சிலமணிநேரங்களில் உங்கள் உறவுகளிற்கான பணமாற்று சேவை.
4. பெயர் மாற்றம் செய்வதற்கான சகல உதவிகள் அழையுங்கள்: 905.488.1713

**GTA UNITS FOR LEASE**
2 Main floor adjacent units facing the entrance. High traffic area with plenty of parking space. Suitable for stores / shops / offices.
தொடர்புகளுக்கு: Perrii: 416.473.6100

**SPACE AVAILABLE INSIDE EMBASSY STORE**
**MIDDLEFIELD & FINCH**
Very busy store & plaza. Inside Embassy store. Avail. for florist, saloon, spa, nails, movie rental, jewellery store, dance classes, tuition classes.
More information: 416.999.3555

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கள் 24, 25

# இன்னொரு... ஆச்சி வீடு

பாகம் - 3
பகுதி 26

தொடர்கதை - பரபரப்பு, மர்மம், வியப்பு என்பன நிறைந்த இக்கதையில் வரும் பெயர்கள் சம்பவங்கன் அனைத்தும் கற்பனையே இன்னொரு....வின் முதற்பகுதியில் பரபரப்பைப் பார்த்தீர்கள். இரண்டாம் பகுதியில் துலக்கப்படாத மர்மத்தின் ஊடாகச் சென்றீர்கள். இந்த மூன்றாம் பகுதியிலோ பல வியப்பான சம்பவங்களைக் காணப் போகின்றீர்கள்.

◊ சி.வி. நாதன் ◊

புதுக் கிணத்தடிக்கு பேரூந்து இப்போது வருவதில்லை. புதுக்கிணத்தடிக்கு மேற்காக ஒரு மைல் தூரத்தில் இருக்கும் கட்டையடி வரையும்தான் யாழ்ப்பாணத்தில் இருந்து வாகனங்கள் வரக் கூடியதாக இருந்தது. யாழ்ப்பாணத்தில் இருந்து புதுக் கிணத்தடிக்கு வரவேண்டுமெனில் ஏதாவது வாகனத்தில் வந்து கட்டையடியில் இறங்கி, பின்னர் அங்கிருந்து நடையாகத்தான் புதுக் கிணத்தடிக்கு வரவேண்டும். எப்படியோ கட்டையடிக்கு மணியன் வந்துவிட்டான். அது ஒரு நாற்சந்தி போல இருந்தது. வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கென அச்சந்தியில் நின்றும் வீதிகள் போய் கொண்டிருந்தன எங்கு போவது என்று யோசித்தவன் கிழக்குத் திசையை தேர்ந்தெடுத்து கிழக்குப் பக்கமாக இருந்த பாதை வழியே நடக்கத் தொடங்கினான். அப்படியாக அவன் கிழக்குத் திசையைத் தேர்ந்தெடுத்திராவிடில் இக்கதையானது ஒருவேளை வேறு விதமாக அமைந்திருக்கும்.

அந்தத் தெருவில் இன்னமும் தார் ஏதோ பேருக்கு ஒட்டிக் கொண்டுதான் இருந்தது. தெருவின் ஓரப்பகுதிகள் இடிந்து காணப்பட்டிருந்தன. பாரமான இராணுவ வாகனங்கள் சென்றதால் இடிந்திருக்க வேண்டும். ஒரு சிலர் சைக்கிள்களில் இடைக்கிடை போய் வந்து கொண்டிருந்தார்கள். பொதுவாக சாரம் மட்டும் உடுத்திருந்த நடுத்தர வயதினரே வந்தார்கள். மணியனை அந்நியத்தனமாகப் பார்த்துக் கொண்டு போனார்கள். வீதியின் இடது பக்கமாக, ஊரைப் பார்த்துக் கொண்டு மணியன் நடந்து கொண்டிருந்தான். தூர்ந்து போன வீடுகள், இடிந்து போன வீடுகள் எனப் பல வீடுகள். இடையிடையே சில வீடுகள் ஓரளவு முழுமையாக இருக்க, அவ்வீடுகளில் மனித நடமாட்டங்கள் தெரிந்தன. சில வீடுகளின் இடிபாடுகளிடையே சிறுவர்கள் நின்று ஏதோ தேடிக் கொண்டுடிருந்தார்கள். சிறுவர்கள் மேற்சட்டை அணிந்திருக்கவில்லை. உடலில் தாராளமாகப் புழுதி படிந்திருக்க வேண்டும். ஏதோ ஒரு புது நிறத்தில் காணப்பட்டார்கள். தலை ஒழுங்காக வாரப்படாது இருந்தது. ஒவ்வொரு சிறுவனின் கழுத்திலும் கறுப்பு அல்லது சிவப்பு நூலால், வெற்றுத் தோட்டாக்கள் கட்டப்பட்ட மாலை ஒன்று தொங்கிக் கொண்டு இருந்தது.

சுமாராக கால் மைல் தூரம் நடந்திருப்பான். சிறிது களைப்பது போல இருந்தது, மணியனுக்கு. அமெரிக்காவில் இவ்வளவு தூரத்திற்கு நடந்து பழக்கமில்லை. நேரம் கிட்டத்தட்ட பத்து மணியிருக்கும். சூரியனும் உச்சிக்கு முன்னால் வந்து நின்றான். சுள்ளென்று வெய்யில் முகத்தில் அடித்தது. வீதி இப்போ மிக மோசமாக இருந்தது. சில இடங்களில் பெரிய பள்ளங்கள். என்னென்று மணியனால் ஊகிக்க முடியவில்லை. சில பகுதிகளில் வீதியில் தார் முற்றாகவே இல்லாதிருந்தது. யாழ்ப்பாணப் பகுதிக்கு வந்து நாலு நாட்களாகிவிட்டது. இன்னமும் உருப்படியபன தகவல் ஏதும் கிடைக்கவில்லை. இந்தியாவிலும் கிடைக்கவில்லை. ஏதாவது கிராமப் பக்கமாகப் போய்ப் பார்ப்போம் என முடிவு செய்து மூவரும் வெவ்வேறு திசைகளில் கிராமமாகத் தேடிச் செல்ல, மணியனும் இன்ன ஊர் என்று தெரியாமலே புதுக்கிணத்தடி நோக்கிப் போய்க் கொண்டிருந்தான். ‘அண்ணை! புதுக்கிணத்தடி தாண்டி பூசாரி கிணத்தடிப் பக்கமாய் போறேன். வரப்போறியளே? இடையிலை எங்கையென்டாலும் இறக்கிவிடலாம்.’

குரல் கேட்டு மணியன் நிமிர்ந்து பார்க்க, அருகில் ஒரு துவிச்சக்கர வண்டி வந்து நின்றது. அதில் இருந்தவனுக்கு இருபத்தைந்து வயதிருக்கும். இடது காலை தரையில் ஊண்றி, வலது காலை சைக்கிளின் மற்றப் பக்கத்தில் பெடலின் மேல் லாவகமாக வைத்துக் கொண்டு, வசதியாக நின்றவன், மணியனின் முகத்தைப் பார்த்ததுமே விளங்கிக் கொண்டான். இடது கையை எடுத்தவன் ‘இப்பிடி பாரிலை இருங்கோ. நான் விழக்கிறேன்’ என்றவன் மணியனின் காலில் சப்பாத்து இருப்பதைப் பார்த்து விட்டு ‘உங்களாலை டபிள் பெரல் போடேலாது. சரி நான் விழக்கிறேன், நீங்கள் ஏறுங்கோ’ என்றவன், மணியன் சைக்கிள் பாரில் இருக்கச் சிக்கற்படுவதைப் பார்த்து எப்படி இருக்கவேண்டும் என்று காட்டிக் கொடுத்தான். மணியனும் நேசனும் பல விடயங்களைப் பற்றிக் கதைத்துக் கொண்டார்கள். நேசன்! அதுதான் மணியனைச் சைக்கிளில் ஏற்றி வந்தவன். நேசனின் கதைப் போக்கில் அரசியல் வாடை அதிகமிருந்தது. நாட்டுப் பிரச்சனை பற்றி நல்ல ஞானமுடையவனாகக் காணப்பட்டான். ஆனால் மணியனின் கேள்விகளுக்கு மணியன் விரும்பியவாறான, அல்லது மணியனுக்குத் தேவையான பதில் கிடைக்கவில்லை. வித்தியாசமான டாங்கிகள் பற்றி அதிகம் கூறியவன், ஹெலிகளைப் பற்றியும், புதுப்புது வடிவிலான குண்டுவீச்சு விமானங்களையும் தவிர வேறு வித்தியாசமாய் எதனையும் வானத்தில் கண்டதில்லை என்றான்.

ஐந்து நிமிடங்கள் சென்றிருக்கும். வீதியில் பெரிய பள்ளம். சைக்கிளை நிறுத்திய நேசன், ‘இதிலை நடந்துதான் போக வேணும். இந்த மரத்தக்கடியிலைதான் பெடியள் கண்ணிவெடி வைச்சு ராணுவத்திலை கனக்கப் பேரைக் கொண்டவங்கள். பெரியாளும் ஒருவர் போனவர். ஆறு மாதத்துக்கு இந்தப் பக்கம் ஒருத்தரும் இல்லை. அப்படியிருந்தும் கன ஆக்களை ஆமிக்காரரும் முடிச்சுப் போட்டினம்’ என்றவன்,
அந்தப் பள்ளம்தான் இது. எவ்வளவு தாழம் எண்டு பாருங்கோ.’ வீதியின் நடுவே பெரிய வட்டப் பரப்பில் அந்த பள்ளம் இருந்தது. மதகு இருந்த அடையாளமே தெரியவில்லை. பள்ளத்தில் அண்மையில் பெய்த மழையின் வெள்ளம் தேங்கி வற்றியிருந்த அடையாளம் தெரிந்தது. (இன்னமும் வரும்)


**Sitham Sam Shanmugam** *(Sales Rep)*
**HomeLife/GTA Realty Inc.**
Cell - 416.230.7820
Office Scarborough - 416.321.6969
Office Mississauga - 905.712.2666
24 hrs.
•Independently owned and operated

2 Way Mechanic shop + house Income $2100/month. Good investment. Commercial. For $299,000

Gas station with mechanic shop + storage building. 1 hour drive from GTA. Good income property.

8 beds senior or retired home. Monthly income $16,000.

Metal scrap yard for recycling and car sales with house office.

detached brand new home Ontario in London. Near university of Weston.

For students 2 + 1 **Condo.** in Toronto. Near University of York. $130,000

**வெளிவந்துவிட்டது!**

பலரால் ஆய்வு நிகழ்த்தப் பெற்ற
Dr. கோபால் அவர்களின்
**எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?**
**மருத்துவ கைநூல்.**
கிடைக்கும் இடம்: **விளம்பரம் பத்திரிகை அலுவலகம்**, *5215 Finch Ave. E, #201*

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்-இலவச ஆலோசனை வழங்கப்படும்
**தீராத நோயினால் பீடிக்கப்பட்டுள்ளீர்களா?**

சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் சர்மத்தின் வெளிப்புறத்தே ஏற்பட்டிருக்கும் மாறாத நாள்பட்ட புண்களுக்கும், சொறியினால் ஏற்பட்டிருக்கும் காயங்களுக்கும் விபத்தினால் ஏற்பட்ட அடிகாய நோவிற்கும் ஏற்ற அனுபவ ரீதியாக கையாண்ட எண்ணையினால் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர தகுந்த அன்ன ஆகாரங்களினாலும் நோய்கள் நிவர்த்தி பெற வழியுண்டு.
இலவச ஆலோசனைகளுக்கு: **647.718.3909**
**வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்**
D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada)
Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician
LG.Ayurvedic Medical Services (SriLanka)

# உண்மையின் திண்மை

சத்தியத்தின் பேராற்றல் எனக்கு நன்கு தெரிந்தபடியால் நான் பயமின்றி விசுவாசத்துடன் வாழ்கிறேன்.

உனக்கு ஒரு விடயம் தெரியும். எவ்வாறு அது உனக்குத் தெரியவந்தது. ஏன் தெரியவேண்டி வந்தது என்பதெல்லாம் உனக்குத் தெரியாவிடினும் அதை வெளிப்படுத்த வேண்டும் என்பதன் முக்கியத்துவம் உனக்கு விளங்குகின்றது. கடைசியில் உனது சுயநல நோக்கங் களையெல்லாம் மூட்டைகட்டி வைத்து விட்டு ஒருவர் தன்னைப் பற்றி கட்டாயம் அறிந்துகொள்ள வேண்டியதை அவருக்கு விளக்கிச் சொல்கிறாய். இதில் ஆச்சரியம் என்னவென்றால் அந்த நபர் நீ சொன்னது தனக்குக் கேட்காதமாதிரி, புரியாதமாதிரி நடிப்பது அல்லது ஏதோ ஆலகால விடத்தை அவர்மீது நீ ஊற்றினதைப் போலப் பதறித் துடிப்பாய். இப்படியான அனுபவம் உனக்கு ஏற்படாலம். பயப்படாதே! கேட்காத மாதிரி அதற்குப் பதிலளித்து தனது தவறை ஒப்புக்கொண்டு ஏற்காது நடிப்பதனால் உனக்கு ஒன்றும் குறையப் போவதில்லை. ஒவ்வொருவரை யும் தாம் இருக்க வேண்டிய இடத்தில் சத்தியம் அமர்த்தி விடுவதால், பெரும்பாலானோர் ஏன் அதை ஏற்பதில்லை என்பதை நாம் விளங்கிக் கொள்ளலாம். இதனால் இவ்வாறு உண்மை ஏற்கப்படாத-தற்கும் உனக்கும் ஒரு சம்பந்தமுமில்லை.



ஆனால் இங்கு நாம் சத்தியத்தைப் பற்றித்தான் பேசுகிறோம் என்பதில் கவனமாயிருக்க வேண்டும். உனது உண்மை அல்ல, உனக்குத் தெரிந்த உண்மையும் அல்ல. உண்மை எப்பொழுதும் திறந்த மனதுடன் வெளிப்படையாக அன்புடன், நல்ல நோக்கத்துடன், பேசப்பட வேண்டும் என்பதுதான் இதில் வித்தியாசம். ஒருவரின் மனதையும் உணர்வையும் சூழ்ந்திருக்கும் துன்ப இருளை நீக்கிக் குணப்படுத்துவது வாய்மை. உண்மை திடுக்கிட வைத்தாலும் ஒருபோதும் அது ஒருவரின் சுயமதிப்பைக் குறைக்காது. தமது ஆளுமை வளர்ச்சி யடைவதை விரும்பாதவர்கள்தான் உண்மையைக் கேட்கவும் அறிந்து கொள்ளவும் உடன்படமாட்டார்கள். இப்படி உண்மையைக் கேட்க ஆயத்தமில்லாத ஒருவருக்கு நீ உண்மையைச் சொல்ல வேண்டி வந்தால் உனது நம்பிக்கையைத் தளரவிடாதே! தூய்மையான இதயத்துடன் நீ சரியான தருணத்தில் உண்மையை எடுத்துக் கூறினால் நிச்சயம் அதை அவர் கேட்பார் என்பதைப் புரிந்து கொள். ஆனாலும் அவருக்கு வழங்கிய, கேட்டாலும் அவர் வழங்கிய அந்த சத்திய விழிப்புணர்வை எப்படி உபயோகித்துப் பயனடைவது என்பதை அவர்தான் தீர்மானிக்க வேண்டும்.

ஒருவரைப்பற்றி உனக்குத் தெரிந்த உண்மைகளை அவருக்குச் சொல்ல இன்றுவரை நீ தயங்கியிருக்கலாம். அல்லது ஒருவரைப் பற்றிய நீ அறிந்த உண்மையை அவருக்குச் சொன்னபோது அதைச் சட்டை செய்யாது கேட்காத மாதிரி அவர் நடித்திருக்கலாம். வெளிப்படுத்தும் உண்மைக்கு என்ன பதில் வருகிறது, வரவேண்டும் என்ற எதிர்பார்ப்புகள் ஒன்றுமேயில்லாது துணிந்து இன்று உனது உண்மையைக் கூறிவிடு.

**இன்று நான் உண்மையைக் கூறி அதுதன் சக்தியாலே தன்னை நிலைநாட்டிட விசுவாசத்துடன் அனுமதிக்கப்போகிறேன்.**

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 196

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214



லலிதா புரூடி


# மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி ஜோதிடம்






## பண்டித் மகேந்திரன் சுவாமிகள்

ஜோதிடம், எண்ஜோதிடம் மற்றும் முகநாடி ஆகியவற்றில் உலகரீதியில் புகழ்பெற்றவர்

மிக திறமை வாய்ந்த இந்தியாவிலிருந்து வந்திருக்கும் பண்டித் அவர்களை சந்திக்கும் சந்தர்ப்பத்தை நலுவவிடாதீர்கள் அவரைச் சந்தித்ததின் மூலம் உலகம் முழுவதும் பலபேர் நன்மை அடைந்துள்ளார்கள்





100% உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு

உங்களுடைய வேலை, பணம், திருமணம், கல்வி, தொழில், காதல், வீடு, உடல் நலம் சம்பந்தமான பிரச்சினைகள், செக்ஸ் சம்பந்தமான பிரச்சினைகள், பிள்ளைகள் சம்பந்தமான பிரச்சினைகள், கணவன் மனைவி பிரச்சினைகள், வழக்கு பிரச்சினைகள், குடும்ப பிரச்சினைகள், நோய்கள், வெளிநாடு, அரசியல், சினிமா சம்பந்தமான முன்னேற்றம், பேய் பிசாசுகள் சம்பந்தமான பிரச்சினைகள் பூஜைகள் மூலம் இல்லாமல் செய்யப்படும்.

மந்திரங்கள், லக்ஷ்மி பூஜை, ருத்ரா அபிஷேகம், மாங்கல்ய பூஜை போன்ற சகல பூஜைகளும் செய்து தரப்படும்.

**Tel: 647-919-5846**

Office
5210 Finch Ave. East Unit # 1
Scarborough, ON M1S 4S4
(Inside of Golden Bakery)
Beside the Meenadchi Temble

Home
100 Winggaraden # 1713
Scarborough, ON. M1B 2P4
(Neilson & Finch)
Close Intersection

# மூட்டுவலியும் உணவும்

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

**கடந்த இதழ் தொடர்ச்சி...**

ஒரு பராயவயதில் அடிகாயம் ஏற்பட்டு பராமுகமாக சிகிச்சை பெறாதிருந்தால் நாட் செல்ல வலி நிலை மூட்டுக்களில் ஏற்படலாம். எதற்கும் உரிய வேளை சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும். பெண்களுக்கு மூட்டுக்களில் வலித்தன்மை ஏற்படுவது அதிகம் எனக் கூறலாம். அதாவது ஒரு குழந்தையைப் பெற்றெடுத்த தாய், கால அவகாசம் எடுக்காமல் மற்றக் குழந்தையை பெற்றெடுக்கும் நிலையில் மூட்டுக்களில் வலி ஏற்படலாம். எனவே ஒரு குழந்தை பெற்றெடுத்து 1, 2 வருடங்களின் பின் குழந்தைகளைப் பெற்றெடுப்பதினால் உடல் நிலை கெடுதல் இன்றி வலித்தன்மை இன்றி சுகத்துடன் வாழமுடியும்.

சில பெண்களுக்கு மாதவிடாய் ஏற்படும் காலங்களில் வாயு அமுக்கநிலையில் மூட்டுக்களில் வலி புலப்படலாம். புகை பிடிக்கும்போது (உ+ம் சிகரெட், பீடி) அதில் உள்ள நிகோடின் உடலுக்கு தீங்கை விளைவிக்கும். மேலும் நாம் படுக்கும்போது பாவிக்கும் கட்டில்களினாலும் (சரியாக அமையாத) மூட்டுவலி வரஇடம் உண்டு. மேலும் முறையற்ற படுக்கையாலும் வரலாம். விபத்தில் காயங்கள் ஏற்பட்டு தகுந்த சிகிச்சை பெறாதிருந்தாலும் வலித்தன்மை மூட்டுகளில் வரலாம். சில வேளைகளில் விஷக்கிருமிகள் ஜந்துக்கள் எம்மைத் தீண்டினாலும் மூட்டுவலி வரலாம்.



எதற்கும் ஆய்வு முக்கியம். முக்கியமாக உதைபந்தாட்ட வீரர்களுக்கும், மற்றும் விளையாட்டு வீரர்களுக்கும் மூட்டுவலி வருவதற்கு இடம் உண்டு. அளவுக்கு மிஞ்சிய பாரம் தூக்குவோருக்கு மூட்டுவலி சடுதியாக ஏற்படுவதுண்டு. வயது முதிர்ந்தோருக்கு மூட்டில் உள்ள வழு வழுப்பான திரவம் குறைந்து போவதினால் மூட்டுவலி அதிகம் ஏற்படுவதுண்டு.

மூட்டுவலிகள் எற்படும்போது உடனுக்குடன் சிகிச்சை பெறாது விட்டால் நாளடைவில் தசைகள் வேலையற்று தேய்ந்து சுருங்கி எலும்புகளும் தரம் அற்றுப்போகும்.

மூட்டுவலிகளைக் குறைக்க கருவிகள் பல உண்டு. பயிற்சிகள் பலவுண்டு. வயது, உடல்நிலை, காலத்திற்கு அமைய கையாண்டால் பயன் பெறமுடியும். மூட்டு வலிகளுக்கு சிலர் தொடர்ந்து மருந்துகளை எடுத்து வருவதினால் வயிற்றுப் புண்ணும் ஏற்பட இடம் உண்டு. எனவே இவற்றை கண்டறிந்து அதற்குத்தகுந்த சிகிச்சை பெறுவது மிக நன்று. தங்கள் வைத்தியரின் ஆலோசனையுடன் சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளலாம்.

நமது உடம்பின் வலிகளை நீக்கக் கூடிய உறுப்புகளுக்குரிய (கை, கால், விரல் இடுப்பு, தோள்பட்டை) பொருத்தமான உறைகள் பல உண்டு. வைத்தியரின் ஆலோசனைப்படி பெற்று பயன்பெற முடியும்.


வலிப்புத் தன்மை ஏற்படாது இருக்க உணவைக் குறைக்க இடையிடையே உபவாசம் இருத்தல் நன்று. மேலும் நீராவி

**வைத்திய கலாநிதி**
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
*Tel.: 647.718.3909*



தொடர்ச்சி 37ஆம் பக்கம்

தவநி கலையாற்று குழு வழங்கும்
Tamil Resource Centre - Thavani Theatre Presents
20வது ஆண்டு நிகழ்வு
அரங்கின் தாய்
Thavani Theatre



நாட்டிய கலாலய
மாணவர்களின் பங்கேற்பில்
உயிர்ப்பு
நாட்டிய நாடகம்
நடன நெறியாள்கை:
நாட்டியகலாமணி
வசந்தா டானியல்
Uyirppu Dance Drama
Choreographed By
Natyakalamani
Vasantha Daniel

• ஜெயராணி பூபாலசிங்கம்
• அதீதா • சத்யா தில்லைநாதன்
• தர்சன் சிவகுருநாதன் • ரெஜி மனுவல்பிள்ளை
• பிரசாத் சிவகுருநாதன் • முத்து கிருஸ்ணன்
• கிருபா கந்தையா • தர்சினி வரப்பிரகாசம்
அடேலின்
கைக்குட்டை
நாடகம்
பிரதி ஆக்கம், இயக்கம்: பா. அ. ஜயகரன்
Adele's Handkerchief Play
Written & Directed By
P.A. Jayakaran

நுழைவுச்சீட்டு, மேலதிக விபரங்களுக்கு,
For more info:
www.trcto.org
thedakam@gmail.com
416•275•0070

சனி
OCT 22
2011
6:00 P.M

ஞாயிறு
OCT 23
2011
4:00 P.M

Yorkwoods Library Theatre
1785 Finch Ave West
(in-between Jane & Keele)
அனைவரையும் தோழமையுடன் அழைக்கின்றோம்!!
தமிழர் வகைதுறைவள நிலையம் (தேடகம்) Tamil Resource Centre (Thedakam)

# தீப ஆவளித் திருநாள்



தீபங்களின் வரிசை தீப ஆவளி எனப்படும். இருள் பயங்கரமானது. ஒளி அதனை அகற்றி மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது. புற இருள் அகல்வது போல அக இருளான அகந்தையும் அகல வேண்டும். அப்பொழுது தான் பரமானந்தம் ஏற்படும். தீபங்களின் வரிசை புற இருளை அகற்றுவதுடன் அக இருளையும் விலகச் செய்வதாகவும் பொருள் கொள்ளப்படும். நரகாசுரன் வதம் செய்யப்பட்டு அவனது கெட்ட குணமும் எண்ணங்களும் மறைந்து நல்லகுணமும் காருண்யமும் தோன்றியது போன்று நம்மனமும் சாத்தானின் இருப்பிடமாக இல்லாமல் சாத்வீகம் பொங்குதற்கு இத்தினத்தில் பிரார்த்திப்போம். நரகாசுரன் அட்டகாச-மானவன். எனவேதான் இத்தினத்தில் பட்டாசு கொளுத்திக் கொண்டாடுகின்றோம். மேலும் புத்தாடை, விதம் விதமான தின்பண்டங்கள் இத்தினத்தின் சிறப்பம்சமாகும். எனவே ஏழைமக்கள் வருடத்தில் ஒருமுறையாவது புத்தாடை புனைவதற்கு தீபாவளி சந்தர்ப்பமளிக்கின்றது. பழங் காலந்தொட்டே இந்துக்களின் வாழ்க்கையோடு இரண்டறக் கலந்துள்ள பண்டிகை இதுவாகும்.

ஐப்பசி மாதத்தில் சூரியன் துலாராசியில் நுழையும் போது திரயோதசி இரவு சதுர்த்தசி அதிகாலையில் இப்பண்டிகை கொண்டாப்படுகின்றது. இச் சதுர்த்தி நரக சதுர்த்தி எனப்படுகின்றது. அன்றைய தினம் அதிகாலையில் எண்ணை ஸ்நானம் செய்கின்றோம். மேலும் புத்தாடை உடுத்து ஸ்ரீ மகாலஷ்மியை பூசித்து, இல்லத்திலும் வாசலிலும் தீபங்களை ஏற்றி வைக்கின்றோம். இப்படிச் செய்வதால் நமது இல்லத்தில் ஸ்ரீலக்ஷ்மி நிரந்தர வாசம் செய்வாள் என்று விஷ்ணு புராணம் கூறுகின்றது. கங்காதேவி அன்றைய தினம் எல்லா நீர்நிலைகளிலும் ஆவாகனமாகி விடுகின்றாளாம். எண்ணை லக்ஷ்மியைக் குறிக்கும். எனவே எண்ணையில் லக்ஷ்மி வசிப்பதாகவும் வெந்நீரில் கங்கை வசிப்பதாகவும் புராணம் கூறும். எனவே தீபாவளி எண்ணை முழுக்கு கங்காஸ்நானம் எனப்படும். வீட்டிற்கு வருபவர்கள் கங்காஸ்நானம் ஆயிற்றா என்று கேட்பர். நரகாசுரனின் இறுதி வேண்டுகோளுக்கு ஏற்பவே தீபாவளி கொண்டாடப்படுகின்றது என்பது ஐதீகம். இத்தினம் நரகாசுரனுக்காகவே கொண்டாடப்பட்டாலும் நாம் அவனையோ, கிருஷ்ணனையோ, சத்தியபாமாவையோ நினைப்பதில்லை. குடும்பத்தில் எல்லாரும் ஒன்றுகூடி எண்ணை முழுக்காடி புத்தாடை உடுத்தி இனிப்புப் பண்டங்கள் தின்று மத்தாப்புக் கொழுத்தி மகிழ்கின்றோம்.

மகாபலிச் சக்கரவர்த்தியிடமிருந்து தங்களைக் காப்பாற்றும்படி தேவர்கள் வேண்ட மகாவிஷ்ணு வாமன அவதாரம் எடுத்து அவனிடம் மூன்றடிமண் கேட்டார். இரண்டு கால்களாலும் மூன்று உலகங்களையும் அளந்தபின் மூன்றாவது அடியை மகாபலியின் சிரத்திலே வைத்து அழுத்தி அவரை பாதாள உலகிற்கு அனுப்பி ஆட்கொண்டார். ஐப்பசி மாதத்து திரயோதசி தினத்தன்று விஷ்ணு வாமன அவதாரம் எடுத்தார். அப்போது மகாபலி தான் ஆண்ட உலகங்களை அவருக்குத் தானமாகக் கொடுத்து சதுர்த்தசியன்று இரவின் முடிவில் மக்கள் எண்ணை தேய்த்து, ஸ்நானம் செய்து புத்தாடை உடுத்து ஆனந்தமாகக் கொண்டாட வேண்டுமென்றும் வீடு முழுவதும் தீபங்களேற்றி, ஒளிபரவச் செய்து இருளகற்ற வேண்டுமென்றும் வரம் கோரினான். நாராயணனும் மகாபலிக்கு அவ்வரத்தைக் கொடுத்தார். அத்தினமே தீபாவளித் திருநாளாகும். இது தீபாவளி பற்றிய ஒரு கதை.

பதினான்கு ஆண்டுகள் வனவாசம் முடிந்து இராமபிரான் அயோத்திக்குத் திரும்பியபோது மக்கள் அவரவர் இல்லங்களில் தீபங்களேற்றி புத்தாடை உடுத்து ஆனந்தமாக வரவேற்புக் கொடுத்தனர். இத்தினமே தீபாவளியாயிற்று என ஆன்மீகப் பெரியர்கள் கூறுவர். இது தீபாவளி பற்றிய மற்றொரு கதை.

பாற்கடலைக் கடைந்த போது தோன்றிய பொருட்களுடன் மகாலஷ்சுமியும் மூதேவியும் தோன்றினார்கள். மகாலஷ்சுமி விஷ்ணுவை மணந்து கொள்ள ஆசைப்பட்டார். ஆனால் மூதேவி மூத்தவளான தன் கல்யாணத்திற்குப் பின்னர் தான் லக்ஷ்மி விஷ்ணுவை மணக்கலாம் என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டாள். மூதேவியை யாரும் மணஞ்செய்ய முன்வராத போது உத்தாலகர் என்ற ரிஷி தானாகவே முன்வந்து தன் தவ வலிமையால் மூதேவியின் தீய செயல்களெல்லாவற்றையும் அகற்றி விடுவதாகக் கூறி அவளை மணந்து கொண்டார். திருமாலே சாத்திரப்படி மூதேவியை உத்தாலகருக்கு திருமணம் செய்து வைத்தாராம். பின்புதான் மகாலஷ்சுமிக்கும் மகாவிஷ்ணுவிற்கும் திருமணம் நடந்ததாம். அந்த நாளே தீபாவளித் திருநாளாகும். இது தீபாவளி பற்றிய வேறொரு கதை. இத்திருநாளிலே தமது அக இருள் அகன்றுவிட வேண்டுமென்றும் மன அழுக்கே இல்லாமல் போக வேண்டுமென்றும்தான் நமது முன்னோர் இக் கொண்டாட்டத்தைக் கொண்டாடினர். நரகாசுரன் கண்ணனால் ஆட்கொள்ளப்பட்ட போது தன்னைப் போல் எல்லோரும் கண்ணனின் அருளுக்கு ஆட்பட வேண்டுமென்று தான் கருதினான். ஆனால் நம்மில் பலர் அன்றைய தினம் மது அருந்தி மாமிசம் புசித்து அசுரர்களாகவே மாறி விடுகிறார்கள். அந்தநிலைமாறி அகத்தில் விளக்கேற்றுவோமாக. ஊரெங்கும் பரவும் ஆனந்தம் ஏதிலிகளுக்கும் கிட்ட எம்மாலான உதவிகளைச் செய்வோமாக.



நா. க. சிவராமலிங்கம்


Ontario Vegetarian Food Bank

Employment Training & Skills Resource Centre

Certified Food Handlers

Ontario Vegetarian Food Bank works in partnership with the City of Toronto Public Health Fully Accredited Agency to provide Food Handlers Certification Program. Our Certification Training Program is valid throughout Ontario and meets all mandatory Provincial Food Safety Training requirements. This means that our Food Handler Certificate is recognized by all health units throughout Ontario.



Food Handler Training available for:
PSW's, Food service Workers, ECE /ECA Workers, Day Care Providers, Dietary Aides, Cooks, , Home Care Workers, Nannies, Restaurateurs.
*Financial assistance may be available to those who qualify

CALL TO REGISTER:
(416) 744 (HELP) 4357

Winter Food and Fund Drive
"No One Should Go Hungry"
Started from Nov.15, 2010 Mar.15, 2011

HELP US TO HELP THE HELPLESS!
North York: 3005 Islington Ave. (Islington / Steeles)
Scarborough: B5 - 2370 Midland Ave (Midland / Sheppard)



'நிழல் குத்து'
திரைப்படக் கண்காட்சி

அடூர் கோபாலகிருஷ்ணனின் '**நிழல் குத்து**'
இடம் : ஸ்காபுரோ சிவிக் சென்டர்
காலம் : அக்டோபர் 29,2011 (சனிக்கிழமை)
நேரம் : மாலை 3.30 மணி
தொடர்புகளுக்கு : 416.417.6933, 647.449.1271

# கண்ணதாசன் நினைவுகள்

## "யார் தருவார் இந்த அரியாசனம்" - காந்தி கண்ணதாசன்



அக்டோபர் 17 கவிஞர் கண்ணதாசன் நினைவு நாள். இதனையொட்டி, தன் தந்தை பற்றிய நினைவுகளை நம்மோடு பகிர்ந்துகொள்கிறார், கண்ணதாசனின் மகன் காந்தி கண்ணதாசன். "எனது நண்பர்களில் பெரும்பாலானவர்களுக்கு அவர்களது அப்பாவைப் பற்றிய நினைவுகளைக் கிளறும்போதெல்லாம் பய உணர்வுதான் முதலில் தோன்றும். அதைத் தொடர்ந்து அப்பா மீதான வெறுப்பு ஞாபகத்துக்கு வரும். அப்புறம்தான் அப்பாவைப் பற்றிய பசுமையான நினைவுகள் மேலெழும். குழந்தைகள் ஒழுங்காக வளர வேண்டும். பெரிய ஆட்களாய் வர வேண்டும் என்பதற்காக அவர்களது தந்தைகள் விதித்த கட்டுப்பாடுகள், விதிமுறைகள், ஆலோசனைகள்.... இவற்றின் விளைவு இது. இதையெல்லாம் நாம் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தானே அப்பா செய்தார் என்று, இப்போது அவர்கள் எண்ணினாலும், பய உணர்வைத் தவிர்க்க முடியவில்லை. உங்களில் பலருக்கும்கூட இதே அனுபவம் இருக்கலாம். எனக்குத் தெரிந்து இந்த உணர்விலிருந்து விலகி இருப்பவர்கள் மிகச் சிலர்தான். காரணம் அவர்களது தந்தைகள். 'குழந்தைகள், அவர்களது எதிர்காலத்தை அவர்களே நிர்ணயித்துக்கொண்டு, இயல்புப்படியே வளர வேண்டும். அதே நேரத்தில் அவர்கள் கிடைத்த சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்தி வழிதவறிவிடாமல் இருக்கும்படி பெற்றோர்கள் கண்காணித்துக்கொள்ள வேண்டும். தங்களது அனுபவங்களிலிருந்து கற்றதைக் குழந்தைகளுக்கும் கற்றுத்தர வேண்டும்' என்று நினைப்பவர்கள் இவர்கள். இந்த மிகச் சிலருள் ஒருவர்தான் என் தந்தை கண்ணதாசன்.

அப்பா என்பதைக் கடந்து எங்கள் அனைவருக்கும் ஒரு நண்பராகத்தான் அவர் நினைவுகளில் தங்கியிருக்கிறார். அவரைப் பற்றி நினைவு வரும்போதெல்லாம், முதலில் அவருடன் நாங்கள் செய்த கலாட்டாக்களும் எங்களுடன் அவர் செய்த கலாட்டாக்களுமே ஞாபகத்தில் வரும். ஒரு தந்தையாக இல்லாமல் நல்லதொரு நண்பராகத்தான் எங்களுடன் அவர் பழகினார். நாங்கள் மொத்தம் பதினான்கு குழந்தைகள். அவரையும் சேர்த்து பதினைந்து குழந்தைகள்! எனவே, வீடு எப்போதும் கலகலப்பாக இருக்கும்.

வெளியில் சென்றுவிட்டு திரும்பும் அப்பா, காரில் வந்து இறங்கும் போது, நாங்கள் வாசலில் நின்று பேசிக்கொண்டிருப்போம். "என்ன பிரதர்ஸ், இங்கே நின்னுகிட்டிருக்கீங்க" என்பார். என் தம்பி கமல் கண்ணதாசன், "ஒண்ணுமில்லை பிரதர், சும்மாதான் நின்னுக்கிட்டிருக்கோம்" என்பான். அதற்கு அவர், "நல்லது. ஆனால், ரொம்ப நேரம் சும்மா நின்னுக்கிட்டிருக்காதீங்க பிரதர்" என்று சொல்லிவிட்டுப் போய்விடுவார். அந்த அளவுக்கு எங்களுக்கு அவர் முழுச் சுதந்திரம் தந்திருந்தார். ஆனால், அன்பான கட்டுப்பாடுகளும் இருக்கும். அந்த அன்பு, சுதந்திரத்தின் எல்லைகளை எங்களுக்குக் காட்டிவிடும். அன்புக்கு அடுத்தபடியாக ஆலோசனைகள். பொதுவாகப் பெரிய மனிதர்களின் குழந்தைகள், தந்தையின் காலத்திலேயே அவர்களது பெயர்களை நாசம் செய்யும்படி காரியமாற்றுவார்கள். நாங்கள் 14 பேரும் அப்படியில்லாமல் அப்பா பெயரைக் கெடுக்காதபடி இன்றைய வரைக்கும் இருக்கிறோம் என்றால், அதற்கு அவரது அன்பு, ஆலோசனைகள்தான் காரணம். சில நாட்களில், வேலை காரணமாக இரவு நேரமாகி அப்பா வீட்டுக்கு வர நேரும் பொழுது, வந்தவுடன் "எந்திரிங்கப்பா, வாங்க உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்போம்" என்று எல்லோரையும் எழுப்புவார். அப்புறம் இரவு ஒரு மணி வரை உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்போம். ஒருவரை ஒருவர் கிண்டல் செய்வோம்.



**சந்திப்பு: தளவாய் சுந்தரம்**

ஒருநாள் இரவு பேசிக்கொண்டிருக்கும்போது, "சீக்கிரம் நான் செத்துருவேன் போல இருக்குப்பா" என்று அப்பா சொன்னார். அதற்கு கமல், "அப்படியெல்லாம் நடக்க வாய்ப்பில்லை. எனவே, நீங்க கவலைப்படாதீங்கப்பா" என்றான். "ஏம்பா அப்படிச் சொல்றே" என்றார் அப்பா. கமல் சொன்னான்: "நல்லவங்கதான் அப்பா சீக்கிரம் சாவாங்க. அதனால உங்களுக்கு வாய்ப்பு குறைவு." நாங்கள் எல்லோரும் பயங்கரமாகச் சிரித்துவிட்டோம். அப்பாவும் விழுந்து விழுந்து சிரித்தார். அந்தளவுக்கு எங்களுடன் அவர் சகஜமாக இருந்தார். ஒருநாள் அம்மா, அப்பாவிடம் போய், "நான் மோதிரம் செய்து போட்டுக்கொள்ளலாம் என்றிருக்கிறேன் மோதிரத்தில் அச்சடிக்க பார்வதி கண்ணதாசன்னு உங்க கையெழுத்துல எழுதித் தாங்க" என்றாங்க. அப்பாவும் எழுதிக் கொடுத்தார். அம்மா வாங்கிக்கொண்டு திரும்பி விட்டார்கள். கொஞ்சநேரம் கழித்து அப்பா அம்மாவைக் கூப்பிட்டார். "நான் எழுதியதைப் படித்தாயா" என்றார். அம்மா படித்திருக்கவில்லை. "போய் படித்துப் பார்" என்றார். அம்மா வந்து படித்துப் பார்த்தார்கள். அங்கே, "பார் அவதி கண்ணதாசன்" என்றிருந்தது.

இதுபோல் ஒவ்வொரு இரவும் கலாட்டாக்களும் கும்மாளமுமாக இருக்கும். பேசிக்கொண்டேயிருக்கும் போதே தம்பி கமல் தூங்கிவிடுவான். அவனை எழுப்பப் போனால் வேண்டாம் என்று தடுத்துவிடுவார். "சாப்பிட்டவுடன் ஜீரணமாகிற வயிறுள்ளவனும் படுத்தவுடன் தூக்கம் வருகிறவனும் பாக்கியவான். அது ஒரு கி.்.ப்ட். அதை ஏன் தொந்தரவு செய்கிறீர்கள்" என்று கூறிவிடுவார். அந்நாட்களில் ஒன்பது மணிக்கே சென்னை அடங்கிவிடும். ஆங்காங்கே ஒரு சில கடைகள் மட்டும் இருக்கும். பன்னிரெண்டு மணிக்கு பிறகு காரில் புகாரி ஹோட்டல் போய் சாப்பாடு வாங்கிக்கொண்டு திரும்புவோம். இரவு ஒரு மணிக்கு எல்லோரும் சேர்ந்து உட்கார்ந்து நன்றாகச் சாப்பிடுவோம்.

அப்பா, பெரியம்மா - அம்மா இரண்டு பேருக்கும் இடையே வித்தியாசம் பார்த்ததேயில்லை. குழந்தைகளுக்கு இடையேயும் வித்தியாசம் வரக்கூடாது என்பதற்காக எல்லோருக்கும் யூனி்.பார்ம் மாதிரி ஒரே கலரில் ட்ரவுசர், சட்டை, பாவடை வாங்கித் தருவார்.

கடன் வாங்கி சிக்கலில் மாட்டிக்கொண்டது, ஜாமீன் கையெழுத்துப் போட்டு வாங்காத கடன்களுக்கு வட்டி கட்டியது, கூட இருந்தே ஏமாற்றிய நண்பர்கள், முதுகில் குத்திவிட்டு அது தெரியாது என்கிற மாதிரி கூட இருக்கும் நண்பர்கள் என்று எதையும் மறைக்காமல் எல்லாவற்றையும் சொல்லுவார். அவையெல்லாம் எங்களை வடிவமைக்க உதவியிருக்கின்றன. "நானும் பாட்டு, எழுதலாம் என்றிருக்கிறேன்பா" என்று ஒருமுறை அவரிடம் ஆலோசனை கேட்டேன். "பாட்டெழுதுவதில் கஷ்டம் இல்லை. ஆனால், சில விஷயங்கள் கட்டாயம் தெரிந்திருக்கவேண்டும். கம்பராமாயணம் தொடங்கி தமிழ் இலக்கியம் எல்லாவற்றையும் படிக்க வேண்டும். தமிழ் இசையிலும் பரிச்சயம் இருக்க வேண்டும். அப்புறம் இருக்கவே இருக்கிறது அனுபவங்கள். இவற்றுடன் கற்பனையைக் கலந்தால் பாட்டு தானாக வருகிறது" என்றார். அவர் சொன்னது பாட்டெழுதுவது சாதாரணமான விஷயம் தான், பயப்பட வேண்டியதில்லை என்பது போல் இருந்தது. ஆனால், இப்போது தெரிகிறது பாட்டெழுதுவது எவ்வளவு சிரமமானது என்று. அது அவருக்குத் தெரியாது என்றில்லை. நம்பிக்கையளிக்கும்படியும் ஊக்கப்படுத்தும்படியும்தான் எங்களுடன் எப்போதும் அவர் பேசுவார். குழந்தைகள் 14 பேரையும் ஒரே ஸ்கூலில் தான் படிக்க வைத்தார். பாஸ் செய்தால் ஆளுக்கு 100 ரூபாய் தருவார். 1960இல் 100 ரூபாய் என்பது பெரிய விடயம். ஒரு வருடம் ஒரு தம்பி பெயிலாகிவிட்டான். அந்த வருடம் எல்லோருக்கும் 100 ரூபாய் கொடுத்தார். பெயிலான அவனுக்கு 200 ரூபாய் கொடுத்தார். நாங்கள் எல்லாம் எப்படி அது சரியாகும் என்று கேட்டோம். "சந்தோசத்தில் இருப்பவர்களுக்கு நாம் என்ன பரிசு கொடுத்தாலும் அது மேலும் சந்தோசத்தைத் தரும். ஆனால், சோகமான மன நிலையிலிருப்பவர்களைத் தேற்றுவது சிரமம். மேலும், அவர்களைக் காயப்படுத்தாமலாவது இருக்கலாம்" என்றார். என்ன கணக்கிட்டு அப்படிச் செய்தாரோ புரியவில்லை. ஆனால், அவரது கணக்கு சரியாக இருந்தது. பெயிலாகி 200 ரூபாய் பெற்ற அந்தத் தம்பி இன்று டாக்டராக இருக்கிறான்.

நான் பி.ஏ. முடித்ததும் கூப்பிட்டு, "்.பிலிம் இன்ஸ்ட்டிடியூட்டில் டைரக்ஷன் படி. என் தொடர்பால் உனக்கு வருஷத்துக்கு குறைந்தது ஐந்து பட வாய்ப்புகளாவது கிடைக்கும்" என்றார். ஆனால் நான், வக்கீலுக்குத்தான் படிக்கப் போகிறேன் என்று சொல்லிவிட்டேன். அவர் மறுக்கவில்லை. மேலும், "பி.ஏ. வரைக்கும் உங்களிடம் இருந்து காசு வாங்கிப் படித்துவிட்டேன். இனிமேலும், உங்களிடம் காசு வாங்குவது நல்லதல்ல" என்றேன். "சரி சொந்தமாக பிஸினஸ் பண்ணி அதிலிருந்து வரும் காசில் படி" என்று பதிப்பகம் ஆரம்பித்துத் தந்தார். அந்தக் காலம் மாத நாவல்கள் அதிகமாக விற்பனையாகிக் கொண்டிருந்த நேரம். ஆனால் அப்பா, "நீ அர்த்தமுள்ள இந்து மதத்தைப் போடு' நான் தொடர்ந்து எழுதுகிறேன்" என்றார். எனக்கு விருப்பமில்லை. அவரது ஆலோசனைக்காகத் தான் செய்தேன். அவரது கணக்குதான் கடைசியில் ஜெயித்தது. அர்த்தமுள்ள இந்துமதம் 50 ஆயிரம் வீதம் மாதம்தோறும் விற்றது.


நான் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போது, எனக்கு நிறைய தோழிகள் உண்டு. ஆனால் காதல் கிடையாது. ஒருநாள் போகும் வழியில் இறக்கிவிடச் சொல்லி ஒரு தோழி கேட்டாள். அவளை பைக்கில் பின்னாடி ஏற்றிக்கொண்டேன். ஜெமினி சிக்னலில் நின்றுகொண்டிருக்கும் போது அந்தப் பக்கமாக வந்த அப்பா பார்த்துவிட்டார். இரவு அப்பாவும் அம்மாவும் கூப்பிட்டார்கள். அம்மா விசாரித்தார். நானும் காதல் கிடையாது தோழி தான் என்றேன். அதற்கு அப்பா சொன்னார்: "நான் உன்னை நம்புகிறேன்டா. உன்னை எனக்குத் தெரியும். ஆனால், மற்றவர்களுக்குத் தெரியாதில்லையா? எனவே, கண்ணதாசன், பிள்ளையை வளர்த்திருக்கிற லட்சணத்தைப் பாரு என்பான். இனிமேல் கேர்ள் பிரண்ட்ஸோடப்

தொடர்ச்சி 37ஆம் பக்கம்

# தமிழ் சினிமா...

22ஆம் பக்கத்தொடர்ச்சி

பரிந்துரைக்கு அனுப்பப்பட வேண்டிய படங்களுக்கான தேர்வுக்கு தெய்வத் திருமகளும் அனுப்பப்பட்டதுதான் உச்சபட்ச கொடுமை. தெய்வத் திருமகள் உட்பட தமிழில் இருந்து இந்த தேர்வுக்கு ளத்தில் இருந்து ஆதமிண்டே மகள் படம் ஆஸ்காருக்கு இந்தியாவில் இருந்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இந்த லட்சணத்தில், திருட்டு டிவிடிகளால் தமிழ் திரையுலகம் அழிந்துகொண்டிருக்கிறது என புலம்பல் வேறு. "திருட்டு டிவிடிகளில் படம்







**- பிலிம்நியூஸ் கிருஸ்ணன் -**

அனுப்பப்பட்ட எந்திரன், ஆடுகளம் போன்ற படங்களும் காப்பி என தேர்வுக்குழுவினராலே திருப்பி அனுப்பப்பட்டது தமிழ் சினிமா துறைக்கு மட்டுமல்ல, தமிழுக்கே அவமானம் தேடித் தந்த செயல். கடைசியில் மலையா- பார்க்காதீர்கள் தியேட்டருக்கு சென்று படம் பார்த்து எங்களுக்கு ஆதரவு தாருங்கள்" என்கிறார்கள் சினிமாக்காரர்கள். "முதலில் நீங்கள் திருட்டுப் படம் எடுக்காதீங்கப்பா" என அவர்களிடம் யார் சொல்வது?

**GTA ACCOUNTING SERVICES**

**For your Accounting Needs & Tax Return :**

*Whether It Is Personal Or Business*

**For Business We Do:**

- ✓ Pay Roll
- ✓ GST/HST
- ✓ Book Keeping - Up dated Monthly
- ✓ Yearly Tax Return

**Revenue Canada**

படிவங்களை உரிய நேரத்தில் சமர்பிக்க

- ❖ GST / HST படிவங்கள்
- ❖ PAYROLL செய்து, Remittances அனுப்ப
- ❖ வருட கணக்குகளை உரிய நேரத்தில் முடித்து, வருடாந்த வரிப்பத்திரத்தை (Annual Tax Return) யை பரிசீலனை செய்து (Revenue Canada ) க்கு அனுப்ப
- ❖ குடும்ப GST உரிய நேரத்தில் கிடைக்க வழி செய்ய
- ❖ பிள்ளைகளின் OSAP பத்திரங்களை தாமதம் இன்றி சமர்பிக்க வழி செய்ய

எல்லாவற்றிக்கும் மேலாக ஒரு முழு நேர கணக்காளரின் சேவையினை உடன் பெற்று கொள்ள

**RAJ . V . RAJENTHIRAM**

தொலை பேசி : 416-887-5351; Email ID GTA.ASERVICE@GMAIL.COM

If the delay is on our part, Service is Free.

Some Conditions Apply.

# மகாஜனாவின்...

22ஆம் பக்கத்தொடர்ச்சி

பற்றியும் 5 நிமிடங்களில் உரையாற்ற வேண்டியுள்ளது என்றார். அவர் தனது உரையில் ஒரு பாடசாலையை 5 தூண்கள் தாங்கி நிற்பதாக கூறினார். அவையாவன மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழையமாணவர்கள் மற்றும் அரசாங்கம் என்றார். ராதிகா பற்றி கூறிய அதிபர் தெல்லிப்பளை பெருமைப்படும் விடயங்களான மகாஜனாக் கல்லூரி, யூனியன் கல்லூரி, துர்க்கை அம்மன் கோவில் என்பவற்றுடன் தற்போது ராதிகா சிற்சபைஈசனும் சேர்ந்துள்ளார் என்றார். ராதிகா, யூனியன் கல்லூரியின் ஆரம்ப பாடசாலையில் தனது ஆரம்பக்கல்வியை தொடங்கியவர் என்றார்.

செந்தில்செல்வி அழகாக இந்த நாட்டியத்தின் மூலம் எடுத்துச்சொல்லியிருந்தார்.

இவ்விழாவை சிறப்புற நடத்த உதவியவர்களுக்கு மேடையில் கௌரவம் அளிக்கப்பட்டது. நன்றி உரையை இரவீந்திரன் இரத்தினசிங்கம் வழங்கினார். அதில் அவர் இவ்விழாவை சிறப்புற நடத்த உதவியவர்கள், பார்வையாளர்கள், போட்டியில் பங்குபற்றியவர்கள், மற்றைய பாடசாலைகளில் இருந்து பிரதிநிதிகளாக இக்கலைவிழாவிற்கு வந்தவர்கள் எல்லாருக்கும் நன்றி தெரிவித்தார்.

விழாவின் இறுதி நிகழ்வாக காரை மணிவண்ணன் எழுதி ஜெ. கஜனின்



அதிபரின் சிறப்புரையை அடுத்து உரையாற்றிய கனடிய நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபைஈசன் தான் இலங்கைக்கு வெளியே தெரிவு செய்யப்பட்ட முதல் இலங்கைத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் என்பதில் பெருமைப்படுவதாக கூறினார். அவர், தான் அதிபர் மீது மிகுந்த மதிப்பும் மரியாதையும் வைத்துள்ளதாகவும் அவரது ஆசீர்வாதத்துடன்தான், தான் தேர்தல் களத்தில் இறங்கியதாகவும் கூறினார். அதிபர் தனது தொகுதியில் இருப்பதால் பெருமைப்படுவதாகவும் அவரிடம் ஆலோசனை கேட்கச் செல்வதாகவும் தெரிவித்தார்.

ராதிகா சிற்சபைஈசனின் உரையை தொடர்ந்து கீதா சிறீஸ்காந்தாவினால் தயாரிக்கப்பட்டு PRIMA நடனக்கல்லூரியால் உருவாக்கப்பட்ட 'சினித் துளிகள்' நிகழ்வு நடந்தது. இதில் சினிமா பாடல்களுக்கு சிறுவர்கள் நடனம் ஆடினர். இதைத் தொடர்ந்து வர்ண ராமேஸ்வரன் தயாரிப்பில் வர்ணம் இசைக்குழுவினரால் நட்சத்திர கானங்கள் இசைக்கப்பட்டது. இதில் விஜய் TV யில் சுப்பர் சிங்கர் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விஜிதா மயில்வாகனம், எலிசபெத் மாலினி, நிர்ஜானி கருணாகரன், M. சாய்ஈசன் ஆகியோருடன் வர்ண ராமேஸ்வரனும் பாடல்களை பாடினார்.

சிறி அபிராமி நாட்டியாலயாவின் தயாரிப்பில் ஆடலரசி செந்தில்செல்வி சுரேஸ்வரனின் உருவாக்கத்தில் "கரங்கள் இணைந்தால்" என்ற நாட்டியம் இடம்பெற்றது. இதில் வேடர் விரித்த வலையில் அகப்பட்ட பறவையை எவ்வாறு அந்தப் பறவையுடன் வந்த மற்றப்பறவைகள் சேர்ந்து காப்பாற்றுவதோடு மட்டுமல்லாமல், அப்பறவைகள் அந்த வேடர் தங்களுக்கு விரித்த வலையை உபயோகித்தே அவ்வேடர்களை தாக்குவதும் விபரிக்கப்பட்டது. ஒற்றுமையின் பலத்தை

நெறியாள்கையில் 'முறிக்க முடியா முகங்கள்' என்ற நகைச்சுவை நாடகம் நடைபெற்றது. இதில் இலங்கைக்கு பயணம் செய்ய இருக்கும் ஒரு குடும்பத்திற்கு அதனை கேள்விப்பட்ட இங்கிருக்கும் உறவினர்கள், அங்குள்ளோருக்கு கொடுக்கும் பார்சல்கள் முதல் கொண்டு இறந்த உடம்பை எரித்த சாம்பல் வரை (கீரிமலையில் கரைப்பதற்கு) எல்லாவற்றையும் நகைச்சுவையுடன் எடுத்துக் காட்டப்பட்டது. இதைவிட முகநூல் (Face Book) மூலம் பிள்ளைகள் எவ்வாறு ஏமாற்றப்படுகிறார்கள் என்பதும் எடுத்துக்காட்டப்பட்டது. இந்நாடகத்தில் நகைச்சுவை மட்டும் அல்லாமல் பெற்றோருக்கு அறிவுரைகளும் இருந்தன.

மகாஜனாக் கலைவிழா வழமைபோல் நேரந்தவறாமல் குறித்த நேரத்திற்கு தொடங்கி ஒழுங்காகவும், விரைவாகவும் நடைபெற்று குறித்த நேரத்திற்கு முடிவடைந்தது நிச்சயமாக வரவேற்கக்கூடியதும் தொடர்ந்து பேணப்பட வேண்டியதுமான ஒரு வழக்கம் ஆகும். பரிசளிப்பு நிகழ்வின் போது நிகழ்ச்சி அமைப்பாளர்கள் முன்கூட்டியே பரிசு பெறும் மாணவர்களை ஒழுங்காக நிரையில் நிற்பாட்டி வைத்தது வரவேற்க கூடிய விடயம். ஆனால் அதேபோல் பரிசு வழங்குவோர்களையும் முன்கூட்டியே தயார்படுத்தி பிரத்தியேக இடத்தில் அமரவைத்திருந்தால் மேலும் நேர விரயத்தை தவிர்த்திருக்கலாம். சில வேளையில் பரிசு வேண்டும் மாணவர் மேடையில் பரிசு வழங்குவோரின் வருகைக்காக காத்திருந்தது தெரிந்தது.

நடன, நாடக நிகழ்வுகளில் தயாரிப்பாளர்கள் மிகுந்த கவனம் எடுத்து தயாரித்து பயிற்சி அளித்திருந்தது நன்றாகவே தெரிந்தது. ஒலி, ஒளி அமைப்புகள் திருத்துவதற்கு மேலும் இடம் இருக்கிறது.

# அனைவருக்கும் உளம் கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்

# நிரு பிராண்ட்



Niru Enterprises Inc
40 Minuk Acres
Scarborough, ON M1E 4Y6
Canada
Tel: 416.750.1976
Fax: 416.750.8779
www.niru.com

Niru Niru
நிரு
பிராண்ட்

# தொம்சனின் அணுவின் மாதிரி

## குவாண்ரம் பிறந்த கதை நுண்ணுலகியல் 20

இலத்திரனுக்கான ஆய்வுகள் பலராலும் செய்யப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் அரனியஸ் (Arrhenius) என்பவரது பரிசோதனை முடிவுகளின்படி, அணுக்கள் இலத்திரன்களைப் பெற்று அல்லது இழந்து அயன்கள் ஆகின்றன என்பது கண்டறியப்பட்டது. இதன்படி, அயன்கள் என்பது மின்னேற்றம் பெற்ற, அதாவது மின்னேற்றம் உள்ள அணுக்கள் என்பதாயிற்று. இதன் தொடர்ச்சியாக மைக்கல் பரடே ஒரு குறிப்பிட்ட தனிமத்தின் அணு அயனாகும் போது குறிப்பிட்ட எண்ணிக்கையிலான இலத்திரன்களை மாத்திரம் பெறும் அல்லது இழக்கும் எனத் தமது பரிசோதனைகளின் வாயிலாகக் காண்பித்தார். அத்துடன் குறுக்ஸ் (Crooks) என்பவர் மின்சாரத்திற்கு இலத்திரன்களே காரணம் எனக் காட்டினார். இவற்றின் அடிப்படையில் தொம்சன் அணுக்களின் வடிவத்தினை வேறுவிதமாகப் பார்த்தார். இலத்திரன்கள் சடங்களின் ஒரு கூறு எனவும் அவை அணுக்களில் பொதிந்துள்ளன எனவும் கூறினார். இக்கருதுகோளிற்கு ஒத்ததாக அணுவிற்கான அமைப்பொன்றினையும் தொம்சனும் அவரது ஆய்வுக் குழுவினரும் கொடுத்தார்கள். பொதுவாக அணுக்கள் மின்னேற்றம் இல்லாமல் இருப்பது தெரிந்திருந்தது. அணுக்களினுள் எதிரேற்றம் கொண்ட மிகச் சிறிய துகள்களான இலத்திரன்கள் உள்ளன என்பதால் தொம்சன் ஏற்றுக் கொள்ளக் கூடியதான ஒரு கருதுகோளை முன் வைத்தார். நேரேற்றமான சடத்தினுள் அதேயளவு எதிரேற்றம் உள்ள இலத்திரன்கள் பொதிந்தே அணுக்கள் காணப்படுகின்றன என்ற கருதுகோளினை முன்வைத்தார்கள். இதன்படி, அணு என்பது இலத்திரன்களைக் கொண்டுள்ள நேரேற்றம் பெற்ற கோள வடிவான சடம் என்பதாயிற்று. இது எதனை ஒத்தது எனில், முந்திரிவற்றல்களைக் கொண்ட கோளமான பண் (Bun)ஐ ஒத்ததாக இருந்தது.

1897ம் ஆண்டில் தொம்சன் அணுவுக்கான தமது வடிவினைக் கொடுத்திருந்தார். ஆயினும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதிகளில்தான் (1904ம் ஆண்டில் இருந்து) தொம்சன், அணுவுக்கான மாதிரியானது விஞ்ஞானிகளிடையே கருத்து வடிவம் பெற்றிருந்தது. ஆனாலும் அணுவுக்கான தொம்சனின் வடிவம் மிகக் குறுகிய காலத்திற்கே இருந்தது. இருப்பினும் அது



உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**பேரண்டம் - 96**

அணுவின் அறிவியற் பாதையில் ஒரு முக்கிய படிக்கட்டாகவே கருதப்படுகின்றது, இன்னமும் கருத்திற் கொள்ளப்படுகின்றது. தொம்சனுக்கு, தான் கொடுத்த அணுவின் மாதிரியில் திருப்தியில்லை. அவர் தமது மாணவர்களுடன் இணைந்து அணுவுக்கான பல பரிசோதனைகளைச் செய்தார். இவரின் மாணவர்களில் குறிப்பிடத்தக்கவர்தான் றதபோட். றதபோட்டும், தொம்சன் டால்ரனின் அணுவின் அமைப்பினை மாற்றியது போன்றே, தமது ஆசிரியரின் அணுவின் மாதிரிக்குத் திருத்தம் கொண்டு வந்தார். தொம்சனுடன் இணைந்து செய்த பரிசோதனைகளின் முடிவாக, புதியதாக அணுவிற்கு ஒரு மாதிரியை றதபோட் 1911ம் ஆண்டில் கூறினார். குருவை மிஞ்சிய சீடரான றதபோட்டின் அணுவின் மாதிரியைப் பின்னராகப் பார்ப்போம்.

தொம்சன், அற்புதமான விஞ்ஞானி. விஞ்ஞானத்தில் இவரது பங்களிப்பிற்காக இவருக்கு நோபல் பரிசும் கிடைத்தது. அது மாத்திரமல்லாது நல்ல திறமைசாலிகளையும் தமது உதவியாளர்களாக வைத்திருந்தார். அவர்கள் கூடப் பிற்காலத்தில் நோபல் பரிசுகள் பெற்றார்கள் எனச் சரித்திரம் கூறுகின்றது. அறிவியல் உலகிற்கு இப்படியான ஒரு குழு கிடைத்ததினால்தான் 19, 20ம் நூற்றாண்டுகளில் அறிவியலில் அதிலும் குறிப்பாக அணுவும் அதன் பின்னராக குவாண்டமும் நன்றாக முன்னேறியதோ எனவும் எண்ணத் தோன்றுகிறது. 19ம் நூற்றாண்டின் அறிவியல் வளர்ச்சிப் பாதையில் நியூட்டனின் செவ்வியல் புதுமெருகேறியது. நாங்கள் அறிந்து கொண்டது படியே மின்காந்தவியல் தோற்றம் பெற்று செவ்வியலுடன் சேர்ந்து கொண்டது. வெப்ப இயக்கவியலினால், வெப்பம் பற்றிய தெளிவுகள் வந்தன. ஒளியானது மின்காந்த அலை என்பது அறியப்பட்டு, அதன் இயல்புகளும் இயக்கவியற் பொறிமுறைகளுக்கு ஒத்ததாக வந்து விட்டது. அதுமாத்திரம் அல்லாது, டால்ரனின் அணுக் கொள்கையும் பொருட்களின் இயல்புகளுக்கு நியூட்டனின் பொறிமுறை முடிவுகளை பலப்படுத்த, செம்மைப் பௌதீகம் ஏறக்குறைய எல்லா விடயங்களையுமே விளங்கப்படுத்தக் கூடியதான ஆற்றலைக் கொண்டதாக கருதப்பட்டது. ஆக, இயற்பியல் முழுமையடைந்து விட்டது என்று பல இயற்பியல்வாதிகள் பெருமைப் பட்டுக் கொண்டிருந்த வேளையில் தூரப் பார்வையுடைய ஒரு இயற்பியல்வாதி மட்டும் இல்லை. செவ்வியல் வானின் கீழ்வானிலே இரு கருமுகில்களைக் காண்கின்றேன். இவையிரண்டும் பெரிய சூறாவளியாக மாறி இயற்பியலிலே பெரும் மாற்றத்தை ஏற்படுத்தப் போகின்றன எனக் கட்டியம் கூறினார். யார் அந்த விஞ்ஞானி? அவர் கண்ட இயற்பியற் கருமேகங்கள் என்ன? உண்மையிலேயே அவை கருமேகங்கள்தானா? மாற்றங்களை ஏற்படுத்தியவைதானா? பார்த்தீர்களா எத்தனை கேள்விகள்? அவை பற்றி இனி இனிவரும் காலங்களில் பார்ப்போம்.

- கனி -
416.261.1348
leptons@hotmail.ca



LICENCE IN 3 WEEKS
(IF QUALIFIED)




Free
1st Lesson for
beginners Only

Learn To Drive Safely By Licenced Instructor.

Package A $95
1 Lesson + Car Rental
for G2 Road Test

Package B $115
2 Lesson + Car Rental
for G2 Road Test

Package C $165
4 Lesson + Car Rental
for G2 Road Test

Package D $130
2 Lesson + Car Rental
for G2 Road Test


$25 Lesson for G2
$30 Lesson for G

Call: Vicky - 647.284.5373



விஜயதசமியை முன்னிட்டு (Oct 06, 2011)
புதிய பரதநாட்டிய வகுப்புக்கள் ஆரம்பம்
NIRUTHYA KALAKSHESTHIRA DANCE ACADEMY
*Ajax (Taunton & Middlecote) *Middlefield & Finch
*Markham & Elson *Mclevin & Neilson
*14th Ave. & 9th Line *9th Line & HooverPark
* Staines & Season Dr.
ஸ்ரீமதி செல்வானந்தி சுகுமார், பரதநாட்டிய கலைமணி, பரதகலாவித்தகி
யாழ். நுண்கலைப்பீடம், வட இலங்கை சங்கீதசபை
416.278.5345 / 416.754.9047

# திருநீறு ஒரு சைவக்கவசம் சைவர்களின் காவல் பொடி




என் இனிய நண்பர்களே! வாழ்த்துக்கள். நலம் பெறப்பிரார்த்திக்கிறேன். கடவுள் நம்பிக்கை, சத்திய சிந்தனை, மனித நேயம் எல்லாம் இந்தக் காலத்தில் காரியம் ஆற்ற உதவாது. 'எல்லாம் வெளி மயக்கே' என்ற சித்தர் சிந்தனை சரி என்று கூறும் பலர் நம்மிடையே இருக்கிறனர். சித்தன் போக்குச் சிவன் போக்கு என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். இந்த இருபோக்குகளும் இலக்கியத்துறையில் இருக்கும் முற்போக்கு, நற்போக்கு போன்றவையே. முற்போக்கு நற்போக்கானால் நாட்டுக்கு நல்லது போன்று, சித்தன் போக்கு சிவன் போக்கானால் நாடு நலம்பெறும். நண்பா!

கிரேக்கத்து ஏதென்ஸ் மாநகரத்து வீதியிலே சோக்கிரட்டீஸ் என்னும் பெரியார், எதையும் ஏன்? எப்படி? எதெற்காக? என்று கேள் என இளைஞர்களைப் பார்த்துச் சொன்னது போன்று எதையும் விசாரித்து விளங்கி ஏற்பதா? மறுப்பதா? என்று தீர்மானிக்கும் பழக்கத்தை நம் இளைய தலைமுறையினருக்கு உண்டாக்க வேண்டும். யாழ்ப்பாணத்து யோக சுவாமிகளின் குருவான தேரடிச்சித்தர் செல்லப்பர் சித்தன் போக்கால் இருந்ததுவும் சிவதொண்டன் அமைப்பை உருவாக்கிய யோக சுவாமிகள் சிவன் போக்காய் இருந்ததுவும் வரலாறு. சிவன்போக்கு என்றால் என்ன? சிவராத்திரி விரதம் இருங்கள். திருவடி வழிபாடு செய்யுங்கள். பாதயாத்திரை செல்லுங்கள். புராண படனம் செய்யுங்கள். சிவதொண்டு செய்யுங்கள். சிவத்தியானம் பேணுங்கள். திருமுறைகளை ஓதுங்கள் என்று யோகர் சிவதொண்டன் நிலையத்தில் வைத்துச் சொன்னவை எல்லாம் சிவன்போக்கே.

நண்பா! இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தமிழர்கள் மத்தியில் கடவுள் மறுப்பு என்னும் சிந்தனை தோன்றியதற்கு யார் காரணம்? பெரியார் ஈ.வெ.ராவா? இல்லை. பொதுஉடைமைவாதிகள். ஜேர்மனிய நாட்டினரான கார்ல் மாக்ஸ் தமிழ் பகுதிப் பொதுவுடமை வாதிகளை கடவுள் இல்லை (நிருச்சுரவாதிகள்) என்று சொல்லவைத்தவர். கார்ல் மாக்ஸ், ஏங்கல்ஸ், லெனின் ஆகியோர் கடவுள் சிந்தனையை 'அபினி' அதாவது மயக்கம் தரும் உணர்வு என்று பிரசாரப்படுத்தினர். அவர்களுடைய பொருள் முதல் வாதக்கருத்துகள் பரவுவதற்கு அருள் முதல் வாதம் தடையாய் இருந்தால் கடவுள் மறுப்பு வாதத்தைக் கையில் எடுத்தார்கள். இவர்களின் போக்குக்கு அன்றைய சமூக அமைப்பும் அரசின் அதிகாரங்களும் காரணமாய் இருந்தமையும் கவனத்தில் கொள்ள வேண்டும். கார்ல் மாக்ஸ் தென்கிழக்காசியாவில்



பிறந்திருந்தால் கடவுளை ஏற்றுக் கொண்டே தனது பொருள் முதல் வாதத்தை முன்வைத்திருப்பார் என்று தவத்திருகுன்றக்குடி அடிகளார் குறிப்பிட்டமையும் இந்தநேரத்தில் கருத்தில் கொள்ள வேண்டியதே. நிற்க!

மக்கள் வேலை செய்யாமல், உழைக்காமல், மக்கள் தொண்டு செய்யாமல் சாமி கும்பிடுவதை மார்க்ஸ் முதலியோர் விரும்பவில்லை. அன்றைய கிறிஸ்துவம் ஏகாதிபத்தியத்தன்மை கொண்டதாய் விளங்கியதால் அவர்கள் அதை மறுத்துப் பிரசாரம் செய்தார்கள். நண்பா! அண்மையில் தமிழ்நாட்டுப் பொது உடைமைவாதிகளில் மூத்தவரான 'வாத்தியார்' என்ற நாவலை எழுதிய எண்பத்து நான்கு வயதான ஆர். எஸ். யேசுப் என்பார், 'தீராநதி' இதழுக்காய். அ. மார்க்ஸ் மூலம் வழங்கிய வாக்கு மூலத்தில் கூறியுள்ள கருத்து நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்தக்கூடியது. அன்றைய கார்ல்மாக்சும், ஏங்கல்சும் ஆதி கிறிஸ்துவத்தை சாதகமாகவே விமர்சித்து ள்ளார்கள். பின்னால் கிறிஸ்துவம் சாதகமாகவே விமர்சித்துள்ளார்கள். பின்னால் கிறிஸ்த்துவம் ஏகாதிபத்தியத் தன்மை கொண்டு விட்டது என்றார். இத்துடன் நல்ல கிறிஸ்துவனாய் இருப்பதும் நல்ல பொது உடமை வாதியாய் இருப்பதும் தேவையானது என்கிறார். இது போலவே நல்ல சைவனாகவும், நல்ல காந்தியவாதியாக வும் நம்மவர்கள் இருந்திருக்கிறார்கள், வாழ்ந்திருக்கிறார்கள். பிற்காலத்தில் சிலரால் 'நல்ல' என்பது 'அல்ல' என மாறியதனாலேயே நாத்தீகவாதம் தோன்று வதற்கு வழிசமைத்துவிட்டது. இந்தப் போக்கினை இல்லாமல் செய்து கடவுள் நம்பிக்கையையும், கோயில் வழிபாட்டினையும் சீர் செய்ய எழுந்த மறுமலர்ச்சிக்காலம் குன்றக்குடி அடிகளாரின் வருகையால் தோன்றியது. அடிகளாரின் 'சமயமறுமலர்ச்சி' என்ற நூலும் அதற்கு கலைமகள் ஆசிரியர். கி.வா. ஜகந்நாதன் எழுதிய கனதியான முன்னுரையும் நீங்கள் அறிந்ததே. இதனால் சமய விளக்கமும், கடவுள் குறித்த புரிதலும் நம்மவர்களிடையே வளரத் தொடங்கின. இந்த வளர்ச்சியை யும் இன்றைய உலகச் சூழ்நிலைகள் குழப்பியவண்ணம் உள்ளன.

நேரம் இன்மையும், வேலைப்பளுவும், மன அழுத்தங்களும், வாழ்க்கை இறுக்கங்க ளும், குடும்பச்சுமைகளும் மிக்க இன்றைய காலத்து தலைமுறையினருக்கு உடன் உணவு, வேக விருந்து என்பன போன்று உடனே புரியக்கூடிய உணர்வூட்டல். ஒத்தோடி உண்மைகளைச் சட்டென்று கொட்டி விளங்கவைக்கும் உத்தி, தொழில்நுட்பம் முதலியவை களால் நமது சமயநம்பிக்கையையும் கடவுள் பற்றினையும் உருவாக்க வேண்டும். 'சட்டோ நினைக்க மனத்து அமுதாம் சங்கரன்' என்று மாணிக்கவாசகர் குறிப்பிட்டது அவச- ரயுகத்தில் சட்டென்று புரியவைக்கும் உத்தியை நாம் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான்.

நண்பா! மனிதர்களுக்கு பயமும் தேவைகளுமே! இன்றைய பிரச்சினை. சின்முத்திரை காட்டிய சிவபெருமான் பயப்படாதீர்கள்! என்றும் வேண்டியதைத் தருகிறேன் என்றும், அபயமொடுவரதமாய் இருகைகளையும் காட்டுகின்றான். நமது இறைவன் நோய் தீர்க்கும் மருத்துவனாகவும் அருள் செய்கின்றான். வைத்தீஸ்வரன், மருந்தீசன், என்றும் சிவனுக்குப் பெயர்கள் உண்டு. உடல் நோய்களை மருந்துண்டு மாற்றுவது போன்று, உலகியல் நோய்களை மருந்தாய் சிவனை வழிபடுத் தீர்க்க முடியும். நாயன்மார் இத்திருப்பணியில் வெற்றி பெற்று வரலாறு விரிந்து கிடக்கிறது. 'மந்திரமும், தந்திரமும், மருந்துமாகி தீராநோய், தீர்த்தருள வல்லான் சிவன்' என்பது அப்பர் தேவராம். வாழ்வற வாழ்வித்த மருந்தே என்பதும் திருமுறையே. சிவசக்தியை வியந்த அபிராமிபட்டர் அவளை 'மருந்தே' என்று தான் அழைத்தார்.

திருநீறு சிவசின்னம் மட்டுமன்று. மந்திரமும் ஆகும், மருந்தும் ஆகும். மந்திரமாவது நீறு என்றும், வெந்துயர் தீர்ப்பது நீறு என்றும், திருஞானசம்பந்தர் கூறுவார். காலை, மாலை சிவசிவ என்று சொல்லிச் சொல்லி திருநீறு தரிப்பவர்களை எந்தத் தீவினைகளும், செய்வினை, சூனியங்களும் எட்டிப் பார்க்காது. தீவினை செய்தவனிடமே அதனைத் திருப்பி அனுப்பும் திண்மை திருநீற்றுக்கு உண்டு. யாருடைய பயமுறுத்தல்களுக்கும் பயப்படாத துணிவினைத் திருநீறு தருகின்றது. திருநீறு ஒருசைவக்கவசம். சைவர்களில் காவல் பொடி. பொடி பூசிய பெருமானின் அடையாளச் சின்னம். திருநீறு செம்மை திடமே என்பது திருவாக்கு. பாண்டிய மன்னனின் சூலை நோயைத் தீர்த்த திரு நீற்றின் மகிமை காலம் கடந்து நிற்கும் சிவசின்னம்.

சென்ற காலத்தின் பழுதிலாத் திருநீற்றின் திறன்; இன்றைய காலத்திலும் தனது மந்திரத்தன்மையை, மருந்தாய மகிமையை காட்டுகின்றது. யாழ்ப்பாணத் தில் போர் நடந்து கொண்டிருந்த காலம். ஒரு சைவசமயத்தவரின் மகளுக்கு நெருப்புக்காச்சல். மருத்துவமனைக்கு கொண்டு செல்லமுடியாத சூழ்நிலை. திருநீற்றில் நம்பிக்கை வைத்து சிவபெருமானில் பக்தி செலுத்தி 'மந்திரமாவது நீறு' என்னும் தேவாரப் பதிகத்தைக் கசிந்துருகப் பாடிப் பாடி தன் மகளுக்குத் திருநீற்றைப் பூசிப்பூசி நெருப்புக்காச்சலின் வெம்மையை அடக்கியுள்ளார் என் நண்பர் ஒருவர். நோய்களுக்கு பாட்டி வைத்தியம், கைமருந்து இருப்பது போல் திருநீறு நம்பிக்கை மருந்தாய் விளங்குகிறது. நோய்தீர்க்க மருத்துவர்களிடம் செல்வதற்கு முன்பு மருந்தாய திருநீற்றை மதித்து அணிவதுதொன்று தொட்ட வழக்கமாய் பல வீடுகளில் நடைமுறை யில் இருப்பதைக் கண்டிருக்கிறோம். நண்பா! கைவிட்ட கேசுகளை நம்பிக்கையோடு திருநீறு பூசி கடவுளிடம் கேளுங்கள். அவர்தான் இந்த நோயின் கடைசி மருத்துவர் என்று சைவ டாக்டர்களைக் காண்கிறோம். மருந்தாய திருநீற்றை பிறருக்குக் கொடுக்கும் போது மருந்து கொடுப்பது போல், கட்டை விரலும் சுட்டுவிரலும் சேரக்கிள்ளிக்கொடுக்க வேண்டும். சித்தவைத்தியர்கள் இவ்விருவிரல் களாலுமே தாங்கள் கொடுக்கும்



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)

தொடர்ச்சி 38ஆம் பக்கம்



YOGA - MEDITATION CLASSESS

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




முட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது

தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

# கண்ணதாசன்...

32ஆம் பக்கத்தொடர்ச்சி

போகும் போது காரை எடுத்துக்கொண்டு போ” என்றார். இந்த சுதந்திரம்தான் எங்களை வழிதவற விடாமல் செய்தது. எனக்கு பொண்ணு பார்க்க முடிவானபோது, என்னைக் கூப்பிட்டு கேட்டார்: “உனக்கு ஏதாவது திட்டங்கள் இருந்தால் சொல்லு” என்று. “நீங்களும் அம்மாவும் பார்த்து உங்களுக்குப் பிடித்திருந்தால் போதும்” என்று சொல்லிவிட்டேன். என் கேர்ள் ஃபிரண்ட்ஸை மனதில் வைத்துக்கொண்டு, “இல்லை தயங்காமல் சொல்லு” என்றார். நான் விளையாட்டாக, “நீங்க போய் கேட்டு ஒருவேளை மறுத்துவிட்டால் என்னப்பா சொல்வது” என்றேன். “கண்ணதாசன், வீட்டுப் படியேறி பொண்ணு கேட்டால், எவண்டா மாட்டேனென்று சொல்லுவான்” என்றார். அவர்மேல் அவருக்கு அவ்வளவு நம்பிக்கை இருந்தது.



ஜனாதிபதி அப்துல்கலாமின், ‘அக்னி சிறகுகள்’ ஒரு லட்சம் பிரதிகள் விற்றதையொட்டி நடந்த விழா மேடையில் ஜனாதிபதி பக்கத்தில் சமமாக எனக்கு இருக்கை தரப்பட்டிருந்தது. அப்போது எனக்கு, அப்பாவின் “யார் தருவார் இந்த அரியாசனம்” என்ற பாடல்தான் ஞாபகத்துக்கு வந்தது. அந்த அரியாசனம், அப்ப எனக்குத் தந்தது. அப்பாவும் அம்மாவும் தந்த ஆசிர்வாதத்தால் கிடைத்தது.

(அடுத்த இதழில் கண்ணதாசனின் அரசியல், இலக்கியம், திரைப்படத் துறை அனுபவங்கள்)

# மூட்டுவலியும்...

30ஆம் பக்கத்தொடர்ச்சி

பிடித்தல், இளம் சூட்டில் நீராடுதல் நன்று. பழரசம், தண்ணீர் போன்றவற்றை அருந்தலாம். நெல்லிரசம், நெல்லிக்காய், எலும்மிச்சம்பழச்சாறு + தேன் கூட்டிப் பாவிக்கலாம். பச்சைக்காய்கறி வகைகளை உணவில் சேர்த்துக்கொள்ளுதல் நல்லது. காய்கறி வகையில் கரட், கோலிபுளோவர், பீட்ரூட், முள்ளங்கி, முட்டைக்கோஸ் போன்றவை மிகவும் சிறந்தது. பழ வர்க்கங்களில் பப்பாளி, தோடை, திராட்சை, அன்னாசிப்பழம் போன்றவற்றை காலநிலை, உடல்நிலை, வியாதி என்பவற்றைக் கவனித்து உணவில் சேர்த்துக்கொள்ளுதல் அவசியம். இது பெரும்பாலும் மூட்டு வலித்தன்மையை அகற்றும் தன்மையுடையது.

மேலும் அறுகம்புல், சமூலச்சாறு (வேருடன்), வாழைத்தண்டுச்சாறு போன்றவற்றை காலை, மாலை அருந்தி வந்தால் மலபந்தம் நீங்கி முட்டுத்தன்மை, பிடிப்பு, வலிப்பு அற்று வாழமுடியும். நெல்லிக்காயை நன்கு உலர்த்தி தூள் செய்து + தேனைக்கூட்டிப் பாவித்து வந்தால் பயன் பலவுண்டு. எதற்கும் மூட்டு வலிக்கு காரணம் முக்கியமாகும். இதற்குத் தங்கள் வைத்தியரிடம் உறுதிப்படுத்த வேண்டும்.

மூட்டு வலிக்கு வெளிப்பாவனைக்கு நல்லெண்ணெய், வேப்பெண்ணெய், பிண்டத் தைலம், நாராயண தைலம், தாளங்காய் எண்ணெய் சிறந்த பயன் அளிக்கும். இவற்றில் எது சிறந்தது என்பதை உரிய வைத்தியரிடம் ஆய்வு செய்தால் அவர் கூறிக்கொள்வார். எண்ணெய் வகைகளைப் பாவிக்கும் போது ஓரளவு தேய்த்து பூசுவது மிகநன்று. ஓரளவு சூடு வரல் வேண்டும். கை, கால்களில் உள்ள மூட்டுக்களில் தைலம் அல்லது எண்ணெய் பூசிய பின் கால், கை விரல்களை நன்கு விட்டு விட்டு 2, 3 தரம் இழுப்பது நன்று. இதனால் நற்பயன் பெற முடியும்.


RAJAH AUTO COLLISION
(மீண்டும் பழைய ராஜா)
5 Years experience in France & 24 Years experience in Scarborough & Montreal

- Body Work + Mechanical
- Custom Modification, Painting
- Frame straiting
- Accident + Insurance Claim
- Collision Repair
- Clear coat Refinishing
- Auto Glass services



வாகனம் வாங்குவதற்கும், விற்பதற்கும் நீங்கள் புதிய அடிபட்ட வாகனங்களை திருத்திக்கொள்ளவும் குறைந்த செலவில் சிறந்த முறையில் திருத்திக் கொள்வதற்கு நம்பிக்கை, நாணயம் உத்தரவாதம்.

அழையுங்கள்: ஆனந்தன் / ராஜா
416.432.0090


232

நகைச்சுவைத் தொடர்

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



புரட்டாதிச்சனி..தீபாவழி….கந்தசஸ்டி
'காக்க காக்க …..
எல்லாப்பிணியும் என்றனைக்கண்டால் நில்லாதோட
நீயெனக்கருள்வாய்'

'ஈரேழு உலகமும் எனக்குறவாக.. ஆணும் பெண்ணும்
அனைவரும் எனக்காக'

'மண்ணா ளரசும் மகிழ்ந் துறவாகவும்.. உன்னைத் துதிக்க
உன்திருநாமம் சரவணபவனே செலொளி பவனே...'

முருகேசரும் உலகரும் கந்தசஸ்டி கவச பாடலை பழைய பெட்டி யொன்றிலிருந்து தேடி எடுத்துவிட்டனர். சி. டீ. பிளேயரில் போட்டு சரிபார்த்துக் கொண்டனர்.

முருகேசரின் நெருங்கிய உறவினர் அரபு நாட்டில் இறந்த செய்தி அறிந்ததிலிருந்து முருகேசர் துன்பத்தின் விளிம்புவரை சென்று வந்துவிட்டார்..



'போனால் போகட்டும் போடா
இந்த பூமியில் நிலையாய் வாழ்ந்தவர் யாரடா?
மறைந்த தமிழக அரசவைக்கவிஞர் கவியரசு கண்ணதாசனின் பாடலை மனதில் நினைத்து தன்னை தேற்றிக்கொண்டார்.

கண்ணுக்குத் தெரியும் நோய்கள் சில
காலன் கொடுக்கின்ற நோய்கள்... இறப்புக்கான காரணங்களோ பல. செக்கண்ட்புளோர் செல்லம்மாவும் ஆட்டிலறி அன்னம்மாவும் வீட்டுக்குள் வெக்கையென்று சொல்லிவிட்டு இடையிடையே வெளியே போய் விடுவார்கள். காரணம் அதுவல்ல முருகேசர் முன்னரைவிட தனது வருத்தத்தாலும் தனது உறவுகளை நினைத்தும் அழுது கொண்டேயிருப்பார்.

நாம் சிரித்தால் சேர்ந்து சிரிக்கப் பலர் இருப்பார்கள்.
ஆனால் நாம் அழுதால்…?



இயற்கை அழுதால் உலகம் சிரிக்கும்.
மனிதன் அழுதால் உலகம் சிரிக்கும்.
சந்திரபாபுவின் பாடல் உலகரின் காதில் கேட்டதுபோலிருந்தது.

இந்த அமளி துமளிக்குள்ளும் ரூபனும் ரூபியும் அவ்வப்போது வரும் புதுப் படங்களின் பெயரில் வரும் சாறிகளில் தீபாவளிக்கு மங்காத்தா சாறியா? வெடி சாறியா? எதனை எடுப்பது என சேல் பேப்பர்களில் பார்த்துக் கொண்டேயிருந்தனர்.



வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்

வாழ்ந்தவர் கோடி மடிந்தவர் கோடி மக்கள் மனதில் நிற்பவர் யார்?

## ஞாபகம்.. வருகிறதா - ஒக்ரோபர்




15. புரட்டாதிச்சனி - கடைசிச்சனி
15. இன்று பொதிகைத் தென்றல்
17. தமிழக அரசவைக்கவிஞர் கவியரசு கண்ணதாசன் நினைவுதினம்
18. தோமஸ் ஆல்வா எடிசன் (1931) நினைவுதினம்
21. ஐப்பசி வெள்ளி (1ம் வெள்ளி)
21. அல்பிரட் நோபல் பிறந்ததினம்
24. united nation day
25. தீபாவழி
27. கந்தசஸ்டி விரதம் ஆரம்பம்.
27. பண்டாரவன்னியன் (1811)
27. Halloween Day








# திருநீறு...

36ஆம் பக்கத்தொடர்ச்சி

மருந்தினைக் கிள்ளி "பிரமாணம்" செய்வார்கள். சின்முத்திரை காட்டிய சிவபெருமான், கட்டை விரலைத்தானாகவும், சுட்டுவிரலை ஆன்மாவாகவும் உணர்த்திய உண்மையில் திருநீறு கிள்ளலின் நுட்பமும் உணர்த்தப்பட்டமையை எண்ணு வோம். தாழ்தலைத் தத்துவமான சின்முத்திரையால் ஆணவம், கன்மம், மாயையை விலக்கிய பரம்பொருளும் ஜீவாத்மாவும் தந்ததும் கொண்டதுமான அந்தமொன்றில்லா ஆனந்தத்திற்கு வழிகாட்டியதோடு, சிவசின்னமான திருநீற்றின் அளவுக்குப் 'பிரமாணம்' காட்டியமையையும் எண்ணி! எண்ணி! வியக்க வேண்டியுள்ளது.



நண்பா! கிள்ளித்தரும் அல்லது கிள்ள எடுக்கும் திருநீற்றை, சிந்தாமல், சிதறாமல், பக்தியோடும், நம்பிக்கையோடும் நெற்றியிலும் பிற உறுப்புகளிலும், பூசி நமது நோய்களை அகற்றுவோம்.

வேறு என்ன? பிறபின்பு
அன்பு ஈழத்துச்சிவானந்தன்.

# முதியோர்



சொந்தங்கள் வாழவெனச்
சுகபோகம் மறந்தவர்கள்
பந்தங்கள் உயரவெனப்
பகலிரவாய்ப் பாடுபட்டோர்
முந்தைவினை யோவென்று
மூலையிலே போயொதுங்கி
சிந்தைநொந்து வாடாமற்
செய்வதுதான் எமதுபணி.

சத்தாக இருந்தெங்கள்
சமூகத்தின் வளர்ச்சிக்கு
வித்தாகத் தம்முழைப்பை
விருப்போடு தந்தவரைச்
சொத்தாக நாம்பேணிச்
சொந்தமென நாம்வரித்து
முத்தான பெரியோரை
முதியோரைப் பேணிடுவோம்!

ஏணிகளாய் படகுகளாய்
இருந்தெமது இளையவர்கள்
நீணிலத்தில் உயரவென
நெஞ்சாரப் பாடுபட்டோர்
நாணிமனம் பேதலித்து
நான்குசுவர் நடுவிருந்து
கூனியவர் குறுகுவதா
கூடாது கொடுமையிது!!

என்பாட்டன் பாட்டியரும்
இருமுதுநற் குரவோரும்
தன்பாட்டில் இருந்துமனம்
தளர்ந்தயர்ந்து போகாமல்
என்கடமை இதுவென்று
இளையவர்கள் நாமெல்லாம்
பண்பாட்டின் வழிநின்று
பக்குவமாய் நடந்திடுவோம்!

முற்பகலிற் செய்ததுதான்
முந்திவந்து நமக்கெல்லாம்
பிற்பகலில் உதவுமெனப்
பெரிதாக நம்புகிறோம்…
கற்றறிந்த இப்பாடம்
கருத்தினிலே நிற்குமெனில்
நற்பணிகள் முதியோர்க்கு
நாமாற்ற முன்வருவோம்!

பற்றோடு நமைவளர்த்துப்
பாசமுடன் காத்துவந்த
பெற்றோரைக் காப்பதுதான்
பிள்ளைகளின் கடனென்று
பெற்றெடுத்த பிள்ளைக்குப்
பேசாது புரியவைக்கப்
பற்றோடு முதியவரைப்
பார்த்திடலும் படிப்புத்தான்!!

*- சபா. அருள்சுப்பிரமணியம்.*

# நிறைவுற நடந்தேறிய 'காரை வசந்தம் 2011'

கனடாக் காரை மக்களால் ஆண்டுதோறும் நிகழ்த்தப்படும் காரை வசந்தம் ஆண்டு விழா இவ்வருடம் சீன கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. சர்வதேசக் கணக்காளர் திரு. கந்தையா கனகராசா தம்பதியினர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். ரவி ரவீந்திரனின் தலைமையில்







இடம்பெற்ற இவ்விழாவினைச் சிறப்பிக்கும் பல இசை, நடன, நாடக, பேச்சுக்கள் என்பனவும் பரிசளிப்பு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வை காரைநகரைச் சேர்ந்தவர்களான திருமதி கிருஷ்ணவேணி சோதிநாதன், திரு. பி.ஞானபண்டிதன், திரு. சாலினி குழந்தைவேலு, திரு. எஸ். தவராஜா ஆகியோர் தொகுத்து வழங்கினர்.

திருமதிகள்: குமுதினி ஸ்ரீகாந்தன், நிரோதினி பரராஜசிங்கம், துவாரகா கேதீஸ்வரன், சித்ரா தர்மலிங்கம் திரு. வாசு சின்னராசாவின் மாணவியும் நடன ஆசிரியையுமான செல்வி நிர்த்திகா சித்திரவடிவேல் ஆகியோரின் மாணவர்களின் நடன நிகழ்வுகள் மேடையை அலங்கரித்தன.

காரைநகரைச் சேர்ந்த திரு. திருமதி கனகசபாபதி தம்பதியனரின் புதல்வி திருமதி இசைக்கலாபாரதி சத்தியசொரூபி தீபனின் வயலின் இசைநிகழ்ச்சியும் ஸ்ரீமதி ஜெயந்தி இரட்ணேஸ்வரனின் இசைக்கல்லூரி மாணவியரோடு ஆசிரியையும் இணைந்தளித்த வீணாகான நிகழ்ச்சியும் மேடையை வசீகரப்படுத்தின.

திருமதி கிருஷ்ணவேணியால் தயாரிக்கப்பட்ட 'புத்தகப் பொங்கல்' என்னும் மாணவியரின் நாடகமும், காரை மணிவண்ணனால் தயாரித்து அளிக்கப்பட்ட 'ஓப்பிண் கவுஸ்' நாடகமும், காரைகலாசார மன்றத்தினரால் தயாரித்து அளிக்கப்பட்ட 'லக்கறி வறுமை' என்னும் நாடகமும் மேடையேற்றப்பட்டன.

இவற்றிற்கு மேலாக நூல்நிலையத்திட்ட அறிமுக உரையும், பேச்சுப்போட்டிகளில் பங்குகொண்டு முதலாம் இடத்தைத் தட்டிக்கொண்ட அனைத்துப் பிரிவினரதும் பேச்சுக்களும் இடம்பெற்றன.


பங்குபற்றிய பிள்ளைகளுக்கும் கலைஞர்களுக்கும் பரிசளிக்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டனர்.

**- குமுளன் -**



# திரைவிமர்சனம்...

20ஆம் பக்கத்தொடர்ச்சி



ஏற்ற கூலி கொடுக்காததுடன், பொய் கணக்குச் சொல்லி ஏமாற்றுகிறார் என்பதை மக்களுக்கு உணர்த்துகின்றார் விமல். எனவே, மக்களிடையே விமலின் மதிப்பு உயர்கிறது. கல்வியின் அவசியத்தை மக்கள் உணர்ந்துகொள்கிறார்கள். கிராமமே விமலை விரும்பும்போது, அவருக்கு அரசாங்க வேலைக்கான ஆணை வருகின்றது. விமல் மிகச் சிறப்பாக நடித்திருக்கிறார். அறிமுக நாயகி இனியாவும் நன்றாக நடித்துள்ளார். விமலை ஏமாற்றி வியாபாரம் செய்யும் போதும், விமல் ஊருக்கு போகிறார் என்றவுடன் காட்டும் ஏக்கத்திலும், தனக்கு கல்யாணம் நின்றுவிட்டது என்று சொன்னவுடன் விமல் மகிழ்கிறான் என்று தெரிந்து காட்டும் முக பாவனையிலும், இனியா இனிமையா!

இயக்குனர் பாக்யராஜ் தந்தையாக நடித்து உள்ளார். சில சீன்களே வந்தாலும் கதையின் உயிரோட்டத்திற்கு துணை நிற்கிறார். தம்பி ராமைய்யா, 248 என்ற பாத்திரத்தில் கிராமத்தில் வாழும் சில பந்தா கேரக்டர்களை கண் முன்னே நிறுத்துகிறார். பொன்வண்ணனும் தன் பங்கை சிறப்பாக செய்துள்ளார். அறுபதுகளை நினைவூட்டும் வகையில் உருவாக்கப்பட்ட கிராமம், அந்த செங்கல் சூளை, மாட்டு வண்டி, ஹீரோவின் உடை அலங்காரம், அக்கால கிராமிய உணவுகள், மழையில் மரத்தில் ஏறும் மீன், கள்ளிச்செடி, சோற்றுக் கற்றாழை, பழைய காலத்து வானொலிப்பெட்டி, அக்கால இலங்கை கூட்டு ஸ்தாபன ஒலிபரப்புப் பாடல்கள், மண்வாசனையுடனான சடங்குகள், அந்த ஒப்பாரி பாட்டு, முப்பதாம் நாள் சடங்கு என பார்த்து பார்த்து செய்திருக்கும் ஆர்ட் டைரக்டர் சீனுவுக்கு நிச்சயம் விருது காத்திருக்கும். ஆர்ட் டைரக்ஷனுக்கு இணையாக, படம் நெடுகவரும் செபியா டோனில் ஒளிப்பதிவை பிரமாதப்படுத்தி 60களை கண்முன் கொண்டுவருகிறார் ஒளிப்பதிவாளர் ஓம்பிரகாஷ்.

இசை: புதுமுக இசையமைப்பாளர் ஜிப்ரான். பிண்ணனி இசையிலும் பாடல்களிலும் புகுந்து விளையாடி இருக்கிறார். புதியவர் போலவே தெரியவில்லை. ‘சர சர சாரக்காத்து’, ‘செங்க சூளைக்காரா’ ஆகிய பாடல்கள் அர்த்தமுள்ளவை. கவிஞர்கள் வைரமுத்து, அறிவுமதி இருவருமே பாடல்களில் தங்களின் தனித்தன்மையை மீண்டும் நிரூபித்திருக்கிறார்கள். எல்லாவற்றுக்கும் சேர்த்து இயக்குநர் சற்குணம் அவர்களுக்கு ஒரு பெரிய சல்யூட்.



வாகை சூட வா - கட்டாயம் பாருங்கள்!





